بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 31 & 32

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1446 முஹர்ரம் 25- ஸஃபர் 02★ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஸஹுர் 01 -08 ★ 01 - 08 ஆகஸ்ட் 2024


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰہَ وَمَلٰٓئِکَتَہٗ یُصَلُّوۡنَ عَلَی النَّبِیِّ ؕ یٰۤاَیُّہَا الَّذِیۡنَ اٰمَنُوۡا صَلُّوۡا عَلَیۡہِ وَسَلِّمُوۡا تَسۡلِیۡمًا ﴿۵۷﴾

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவருக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் பொழியுமாறும் சாந்தியும், சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள். (33: 57)


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**சந்தேகத்திற்கிடமின்றி நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆன்மிகத்தை நிலைநாட்டுவதின் அடிப்படையில் இரண்டாவது ஆதமாக இருந்தார்கள். இன்னும் கூறப்போனால் அவர்கள் உண்மையிலேயே ஆதம் ஆவார்கள். அவர்கள் மூலமாகவும் அவர்களின் ஊடகமாகவும் தான் எல்லா மனித சிறப்புகளும் அதன் முழுமையை அடைந்தன**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொலைந்து போன உண்மையை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்த நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதில் ஒரு மகத்தான சீர்திருத்தவாதியாக இருந்தார்கள். நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இணையாக வேறு எந்த நபியும் இருந்ததில்லை. அன்னார் (ஸல்) முழு உலகையும் ஓர் இருளில் இருப்பதைக் கண்டார்கள். அன்னார் (ஸல்) எந்த சமுதாயத்திடம் தோன்றினார்களோ அந்த சமுதாயத்தில் இருந்த அனைவரும் இணை வைத்தல் என்ற ஆடையைக் களைந்து விட்டு ஏகத்துவத்தின் ஆடையை அணியாத வரை அன்னார் (ஸல்) மரணிக்கவில்லை. அந்த அளவோடு மட்டும் அல்லாமல் அந்த மக்கள் ஈமானின் உயர்ந்த அந்தஸ்தையும் அடைந்தனர். உண்மை, பற்று, நிச்சய உறுதி ஆகியவற்றால் வெளிப்பட்ட அந்தப் பணிகளுக்கு ஈடான ஒன்றை உலகின் எந்தப் பகுதியிலும் காணமுடியவில்லை. இன்னும் கூறப்போனால் இந்த அளவிலான வெற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த நபிக்கும் கிடைக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு ஒரு மாபெரும் சான்றாகும். எத்தகைய ஒரு காலத்தில் அன்னார் (ஸல்) தோன்றினார்கள் என்றால் அக்கால கட்டம் இருளில் வீழ்ந்து கிடந்தது. பொதுவாகவே ஒரு மகத்தான சீர்திருத்த வாதியை அது வேண்டி நின்றது. பிறகு அன்னார் (ஸல்) உலகை விட்டு பிரிந்த சமயத்தில் லட்சக்கணக்கான மக்கள் இணை வைத்தல் மற்றும் சிலைகளை வணங்குதல் ஆகியவற்றை விட்டு ஏகத்துவம் மற்றும் நேரான வழியை பேணுபவர்களாக ஆகியிருந்தனர். உண்மையிலேயே இந்த முழுமையான சீர்திருத்தம் அவர்களுக்கு உரிய சிறப்பாக இருந்தது.



அதாவது அன்னார் (ஸல்) ஒரு சமுதாயத்தை காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையை நடத்துபவர்களாகவும், விலங்குகளின் இயல்பை கொண்டவர்களாகவும் இருப்பதைக் கண்டு அவர்களுக்கு மனித பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்தார்கள். வேறு சொற்களில் கூறுவதாக இருந்தால் இவ்வாறும் கூறலாம்: அதாவது விலங்குகளை மனிதர்களாக ஆக்கினார்கள். பின்னர் மனிதர்களை கல்வி அறிவுடைய மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு கல்வியறிவுடைய மனிதனை இறைவனோடு தொடர்பு கொண்ட மனிதர்களாக ஆக்கினார்கள். மேலும் ஆன்மிகத்தின் தன்மையை அவர்களிடத்தில் அன்னார் (ஸல்) ஊதினார்கள். உண்மையான இறைவனுடன் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அவர்கள் இறைவழியில் ஆடுகளைப் போன்று பலியிடப்பட்டனர். எறும்புகளைப் போன்று கால்களுக்கு கீழ் நசுக்கப்பட்டனர். ஆயினும் அவர்கள் ஈமானை கைவிடவில்லை. மாறாக, ஒவ்வொரு துன்பத்தின்போதும், அவர்கள் பாதங்களை முன்நோக்கி வைத்தனர். எனவே சந்தேகத்திற்கிடமின்றி நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆன்மிகத்தை நிலைநாட்டுவதின் அடிப்படையில் இரண்டாவது ஆதமாக இருந்தார்கள். இன்னும் கூறப்போனால் அவர்கள் உண்மையிலேயே ஆதம் ஆவார்கள். அவர்கள் மூலமாகவும் அவர்களின் ஊடகமாகவும் தான் எல்லா மனித சிறப்புகளும் அதன் முழுமையை அடைந்தன. எல்லா நல்ல ஆற்றல்களும் தத்தமது பணியில் ஈடுபட்டன. மனித இயல்பின் எந்தவொரு கிளையும் அவர்களிடமிருந்து பயனடையாமல் இருந்ததில்லை. அன்னாரது நீரால் செழிப்படையாமல் இருந்ததில்லை. நபித்துவம் காலத்தின் அடிப்படையில் மட்டும் அன்னார் மூலம் நிறைவடையவில்லை. காலத்தின் பின்னால் வந்ததுடன் மட்டும் அன்னாருடன் நபித்துவம் முழுமை பெறவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் மூலமாகவே நிறைவு பெற்றிருப்பது இதற்கான காரணமாக இருக்கின்றது. ஏனெனில், அனைத்து இறைப் பண்புகளின் வெளிப்பாடாக அன்னார் (ஸல்) இருந்தார்கள். எனவே அவர்களுடைய ஷரீஅத் அதாவது மார்க்க சட்டமானது கம்பீரமான மற்றும் மென்மையான இரண்டு நிலைகளை தன்னகத்தே கொண்டதாக இருக்கின்றது. அன்னாருக்கு முஹம்மது மற்றும் அஹ்மது என்ற இரண்டு பெயர்கள் இருந்ததற்கும் இதுவே காரணம் ஆகும். அவர்களின் பொதுவான நபித்துவத்தின் எந்தவொரு பகுதியும் கருமித்தனத்தைக் கொண்டதாக இருக்கவில்லை. மாறாக துவக்கத்திலிருந்தே அன்னார் முழு உலகிற்கும் உரியதாகவே இருந்தது.

(லெக்சர் சியால்கோட் ,ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 206 )


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# தலையங்கம்

**ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மகத்துவ மிக்க அந்தஸ்தும் உயர் தகுதியும்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியில்**

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் தமது எஜமானர் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அந்தஸ்தையும், உயர்தகுதியையும் அடையாளம் கண்டு கொண்ட அளவிற்கு வேறு எவரும் அடையாளம் காணவில்லை. ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மகத்துவ மிக்க அந்தஸ்து மற்றும் உயர் தகுதியை குறித்து அன்னாருக்கு கிடைத்த ஞானம் வேறு எவருக்கும் கிடைக்கவில்லை. ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது அன்னார் (அலை) எந்த அளவிற்கு அன்பும், நேசமும் கொண்டார்களோ அந்த அளவிற்கு வேறு எவரும் நேசம் கொள்ளவில்லை. இது வெறும் வாதம் மட்டும் அல்ல. மாறாக, உண்மையாகும். எது எப்படிப்பட்ட உறுதியான உண்மைத்துவம் என்றால், எவராலும் அதனை பொய்ப்படுத்த முடியாது. மேலும் அதனை பொய் என்று நிரூபிக்கவும் முடியாது. ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மீதான நேசம் மற்றும் அன்பு குறித்து அன்னாரின் நூல்களிலும், கவிதைகளின் வடிவிலும் அன்னாரின் எழுத்துக்களில் வெளிப்பட்ட விஷயங்கள் நமக்கு வேறு எங்கிருந்தும் தென்படவில்லை. அந்த எழுத்துக்களில் எப்படிப்பட்ட ஈர்ப்பு இருக்கின்ற என்றால், அன்னாருடைய எதிரிகள் கூட அந்த நூல்களையும், கவிதைகளையும் படித்து தங்களை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஒருவர் எமது வாதத்தை தவறானதாக கருதுகின்றார் என்றால், பின்னர் நாம் எமது வாதத்தின் உண்மைத்துவத்திற்கான சான்றை கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றோம்.

எந்த வடிவில் ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மார்க்கத்தை அன்னார் (அலை) பாதுகாத்தார்களோ, மேலும் எந்த அளவிற்கு கம்பீரத்துடன் அன்னார் (அலை) பாதுகாத்தார்களோ அதனைப் போன்று செயற்கள வீரராக திகழ்ந்து எவராலும் கடந்த 1400 ஆண்டுகளில் அதனை செய்ய முடியவில்லை. வேறு எவராலும் அவ்வாறு செய்யவும் முடியாது. வேறு எவருக்கும் அந்த தகுதியும் அந்தஸ்தும் இருக்கவில்லை. ஏனெனில், திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிற்கு ஏற்ப இந்த தகுதியும், உயர் அந்தஸ்தும் அன்னார் (அலை) அவர்களுக்கு மட்டுமே இருந்தது.

لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ

என்ற வசனத்தின் விளக்கவுரையில் கண்ணிய மிக்க ஆலிம்கள் இதனையே கூறியுள்ளார்கள்: அதாவது இஸ்லாத்திற்கு உலகளாவிய வெற்றி மஹ்தியின் காலத்திலேயே கிடைக்கும். ஆக, நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ஆவேன் என்ற வாதத்தை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் செய்துள்ளார்கள். மேலும் எந்த இமாம் மஹ்தி தேன்றும்போது அவர் பூமியில் ஈமானை நிலைநாட்டி விடுவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்துள்ளார்களோ அந்த இமாம் அன்னார் ( அலை) ஆவார்கள்.

எனவே அன்னார் (அலை) எந்த வடிவில் முஹம்மதிய்ய மார்க்கத்தை பாதுகாத்தார்களோ அது அன்னாருடைய பணியாகவே இருந்தது. ஆயிரத்தி நானூறு வருடங்களில் இஸ்லாத்தின் உதவிக்காவும், ஆதரவிற்காகவும் அன்னார் எழுதியுள்ள நூல்களை வேறு எவராலும் எழுத முடியவில்லை என்பதை அன்பர்களும், எதிகளும் கூட ஒப்புக் கொள்கின்றனர். நாம் கூறியது போன்று எவராலும் எழுதவும் முடியாது. ஏனெனில், இந்த அந்தஸ்தும், உயர் தகுதியும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் சார்பாக அன்னாருக்கு கிடைத்திருந்தது. அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவையும், புரிதலையும் வழங்குவானாக. அவர்கள் காலத்தின் இமாம் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் மீது ஈமான் கொள்ளட்டுமாக! எந்த மஸீஹ் மற்றும் மஹ்தியுடன் இணைந்திருப்பதில் இஸ்லாத்தின் வெற்றி தொடர்புடையதாக இருக்கின்றதோ அந்த மஸீஹ் மற்றும் மஹ்தியின் மீது அவர்கள் ஈமான் கொண்டு விடட்டுமாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் தகுதி மற்றும் உயர் அந்தஸ்து தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களின் சில மேற்கோள்கள் கீழே முன் வைக்கப்படுகின்றன :

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

**பதர் வாரப் பத்திரிகை காதியான்**

## சிறப்பிதழ்: ஸீரத்துன் நபி (ஸல்)

| | இந்த இதழில் | பக்கம் |
|---|---|---|
| 1 | தலையங்கம் | 2 |
| 2 | ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ பேருரை (28.7.24) | 3 |
| 3 | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு ஹஜ்ஜத்துல் விதா இறுதி பேருரையின் ஒளியில் (மனித சமத்துவம்) | 8 |
| 4 | ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ பேருரை (21.7.24) | 12 |
| 5 | ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) ஆகியோரின் தூய வாழ்க்கை | 15 |
| | | |

ஆதமின் மக்கள் அனைவருக்கும் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர இப்போது எந்தத் தூதரும் பரிந்துரையாளரும் இல்லை. எனவே ஆற்றலும், கம்பீரமுமிக்க அந்தத் தூதரிடம் உண்மையான அன்பு கொள்ள முயலுங்கள். பிறருக்கு அவரை விட எவ்வகை பெருமையையும் கொடுக்காதீர்கள். இதனால் நீங்கள் வானில் மீட்புக்குரியவராக எழுதப்படுவீர்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள். மீட்பு என்பது மரணத்திற்குப் பின்னர் நிகழ்வதன்று. மாறாக, உண்மையான மீட்பு இவ்வுலகிலேயே தன் ஒளியைக் காட்டுகிறது.

மீட்புக் கிடைக்கப் பெற்றவர் யார்? இறைவன் இருக்கின்றான் என்பது உண்மை என்பதும், அவனுக்கும், படைப்பினங்களுக்கும் இடையே பரிந்துரை செய்பவர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஒருவரே என்றும் வானத்தின் கீழ் அம்மாநபியை விட மேலான தகுதியைப் பெற்றவர் வேறு இல்லை என்றும் திருக்குர்ஆனை விட உயர்ந்த ஒரு மறைநூல் இல்லை என்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர என்றென்றும் கொள்கையாலும், கோட்பாட்டாலும் வேறெவரும் உயிர் வாழ்வதை இறைவன் விரும்பவில்லை என்றும் உறுதியாக நம்புபவரே மீட்பு பெற்றவர் ஆவார். (கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயீன் தொகுதி 19, பக்கம் 13 - 14)

மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (நபிகள் நாயகம்) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை உற்று நோக்கினால் அவர்கள் ஒப்பிடயிலாத தன்மை பெற்றவரும் தூய உள்ளம் உடையவரும் இறைவனுக்காக உயிரை இழக்கத் தயாராக இருந்தவரும் மக்களின் உதவி ஒத்தாசைகளை எதிர்பாராமல் இறைவனை மட்டும் நம்பி வந்தவருமாவார் என மிகத் தெளிவாக புலனாகிறது. இறைவன் மீதே அவர்கள் முழுமையாக நம்பிக்கை வைத்தார்கள். இறைவனின் விருப்பத்திற்காகவும், அவனது மகிழ்ச்சிக்காகவும் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டார்கள். ஓரிறை கொள்கையை உலகிற்கும் எடுத்துரைப்பதனால் என்னென்ன தீங்குகள் தமக்கு ஏற்படும் என்பதையும் இணை வைப்போரின் கைகளால் என்னென்ன துன்பமும், துயரமும் நேரும் என்பதையும் அவர்கள் சிறிதும் பொருட்படுத்துவதில்லை.

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 1, பக்கம் 111)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆயிரக்கணக்கான ஆபத்துகள் ஏற்பட்டும் இலட்சக்கணக்கான

தொடர்ச்சி 20-ம் பக்கம்...

# ஜுமுஆ பேருரை

**பனூ நழீர் போர் மற்றும்**
**அதன் விளைவாக பனூ நழீர் நாடுகடத்தப்பட்டது தொடர்பான விளக்கம்**

போர், கொலை மற்றும் கொள்ளை, போர் செல்வங்கள் போன்றவை தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனைகள் செய்பவர்கள் இந்த விஷயத்தை பார்க்க வேண்டும்; அதாவது, பனூ நழீர் மீது இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெற்றி பெற்று விட்ட பிறகு அவர்களுக்கு எவ்வளவு கடுமையான தண்டனை கொடுத்திருந்தாலும் அது ஆகுமானதாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியை விரும்பியவாறும், சமாதானத்தை விரும்பியவாறும், கருணை மற்றும் பரிவுடன் நடந்து கொண்டார்கள். அன்னார் (ஸல்) பனூ நழீர் கோத்திரத்தாரை அங்கிருந்து அமைதியுடனும், பாதுகாப்புடனும் வெளியேறி செல்வதற்கு அனுமதி நல்கிவிட்டார்கள். மேலும், ஆயுதங்கள் மற்றும் போர்த் தளவாடங்களைத் தவிர அவர்கள் என்னென்ன பொருட்களை அங்கிருந்து எடுத்துக் கொண்டு செல்ல விரும்பினார்களோ அதற்கும் அன்னார் (ஸல்) அனுமதி நல்கிவிட்டார்கள். இது அன்னாரின் கருணை மற்றும் பரிவிற்கு உயர்தரமான வெளிப்பாடாக இருந்தது.

---

பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக தொடர்ந்து துஆ செய்து வாருங்கள்; உலகில் முஸ்லிம்களின் பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆ செய்து வாருங்கள்.
உலகில் போருக்கான பொதுவான சூழல் உருவாகிக் கொண்டிருக்கின்றது. அதற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் மேலும் ஒவ்வோர் அப்பாவி பொதுமக்களையும் இதன் தீங்கிலிருந்து பாதுகாப்பாக வைப்பானாக

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 ஜூன் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **இஹ்ஸான் மாதம் 28ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

பனூ நளீருடன் நடைபெற்ற போர் பற்றி கூறப்பட்டு வந்தது. இதைப் பற்றிய கூடுதல் விபரங்கள் என்னவென்றால், இதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ நளீருடைய ஒரு கோட்டையை நோக்கி புறப்பட்டபோது, தமக்குப் பின்னால் மதீனாவில் இருந்தவர்களுக்கு இமாமுஸ் ஸலாத்தாக இப்னு மக்தூம் அவர்களை நியமித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளின் ஒரு குழுவை அழைத்துக் கொண்டு மதீனாவில் இருந்து புறப்பட்டுச் சென்று பனூ நளீருடைய குடியிருப்பை முற்றுகையிட்டார்கள். அந்தக் காலத்து போர் முறைப்படி பனூ நளீர் கோட்டையை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்து விட்டார்கள். அநேகமாக இந்த சந்தர்ப்பத்தில்தான் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூல் மற்றும் இதர மதீனத்து நயவஞ்சகர்கள் பனூ நளீருடைய தலைவர்களுக்கு, நீங்கள் முஸ்லிம்களை கண்டு ஒருபோதும் அடங்கி விட வேண்டாம்; நாங்கள் உங்களுடன் இருப்போம்; உங்கள் சார்பாக போரிடுவோம் என்று கூறி அனுப்பினார்கள். ஆனால், உண்மையிலேயே போர் ஆரம்பித்தபோது பனூ நளீருடைய எதிர்பார்ப்புகளுக்கு எதிராக நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக பகிரங்கமான முறையில் மைதானத்தில் வருவதற்கு அந்த நயவஞ்சகர்களுக்கு துணிவு இருக்கவில்லை. அதேபோன்று முஸ்லிம்களுக்கு எதிராக மைதானத்திற்கு வந்து பகிரங்கமான முறையில் பனூ நளீருக்கு உதவி செய்வதற்கு பனூ குறைழாவுக்கும் துணிவு வரவில்லை. ஆயினும், இவர்கள் உள்ளத்தால் அவர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள். மறைவாக அவர்களுக்கு உதவியும் செய்து வந்தார்கள். அதை குறித்து முஸ்லிம்களுக்கு தெரியவும் வந்தது. எவ்வாறிருப்பினும், முஸ்லிம்களுக்கெதிராக திறந்தவெளியில் பனூ நளீர் போருக்கு வரவில்லை. கோட்டையை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்து விட்டார்கள். அந்த காலத்தை பொருத்த வரை அந்த கோட்டைகள் மிகவும் உறுதி வாய்ந்தவையாக இருந்தன. ஆகவே முஸ்லிம்களால் தங்களை ஒன்றும் செய்ய முடியாது; இறுதியில் நெருக்கடிக்கு ஆளாகி முற்றுகையை விலக்கிக் கொள்வார்கள் என்ற நிம்மதி அவர்களுக்கு இருந்தது. அந்த காலத்து சூழ்நிலைகளின் அடிப்படையில் பார்க்கும்போது இவ்வாறான கோட்டைகளை வெற்றி கொள்வது என்பது உண்மையிலேயே மிகவும் கடினமானதும், கடின உழைப்பைக் கொண்ட வேலையாகவும் இருந்தது. மேலும் ஒரு நீண்ட கால முற்றுகையின் தேவையைக் கொண்டதாக இது இருந்தது.

எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு சென்றார்கள்; பனூ நளீருக்கு எதிரான முற்றுகையை தொடர்ந்தார்கள். இந்த முற்றுகை 6 நாள் இருந்தது என்றும் இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் 15 நாள் இருந்தது என்றும் கூறப்படுகிறது. இதை தவிர 20 நாள், 23 நாள் என்ற கூற்றுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. 20 அல்லது 23 நாட்கள் வரை நீடித்து இருந்தது என்றும் மக்கள் கூறுகிறார்கள். முற்றுகையின்போது பெருமானார் (ஸல்) அவர்கள் சில மரங்களை வெட்டவும், எரிக்கவும் கட்டளையிட்டார்கள். ஏனெனில், யூதர்கள் கோட்டைகளின் மதில்களின் மேலே நின்று கொண்டு அம்புகளையும், கற்களையும் எறிந்து கொண்டிருந்தார்கள். இந்த மரங்கள் அவர்களை பாதுகாத்து வந்தன. அவை அவர்களின் பதுங்குமிடமாக இருந்தன. அதாவது, இந்த மரங்கள் அவர்கள் மறைந்து கொள்வதற்கான இடமாக இருந்தன. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ லைலா மஅஸ்னீ மற்றும் அப்துல்லாஹ் பின் ஸலாம் ஆகியோரிடம் அந்த மரங்களை எரிப்பதற்கான பொறுப்பை ஒப்படைத்தார்கள். இது போர் மற்றும் தற்காப்பு நடவடிக்கையாக இருந்தது. தோட்டத்தை அழிப்பதற்கான வேலை கிடையாது. ஏனெனில் மரங்களை வெட்டுவதற்கு இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. அபூ லைலா மஅஸ்னீ அவர்கள் யூதர்களுடைய அஜ்வா எனும் வகை பேரீத்த மரங்களை எரித்துக் கொண்டிருந்தார்கள்; அப்துல்லாஹ் பின் ஸலாம் அவர்கள் அஜ்வாவை தவிர்த்து மற்ற பேரீத்த மரங்களை எரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அறிவிப்புகளில் மட்டமான ரகத்தைச் சார்ந்த பேரீத்த மரங்கள் எரிக்கப்பட்டன என்றும் வருகிறது. அதனுடைய விளக்கத்தை நான் எடுத்துக் கூறுவேன். எவ்வாறிருப்பினும், இந்த அறிவிப்பில் எழுதப்பட்டுள்ளது என்னவென்றால், இந்த மரங்கள் அவர்களுடைய விலையுயர்ந்த சேமிப்பாகும். இவற்றை எரிப்பதால் அவர்களுக்கு அதிக துன்பம் ஏற்படும் என்று ஹஸ்ரத் அபூ லைலா (ரலி) அவர்கள் கூறினார்கள். அதாவது யூதர்களுக்கு துன்பம் ஏற்படும். ஏனெனில், இந்த சேமிப்பு அவர்களுடையதாகும். அல்லாஹ் அவர்களின் செல்வங்களை பெருமானார் (ஸல்) அவர்களுக்காக போர்ச் செல்வமாக ஆக்கி விடுவானாக என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அஜ்வா வகை பேரீத்த மரங்கள் பயன்

அளிக்கக் கூடிய மரங்களாக இருந்தன. அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்களின் கூற்றிலிருந்து, அவை எரிக்கப்படவில்லை மற்ற மரங்கள் எரிக்கப்பட்டன என்பதும் தெரிகின்றது. அஜ்வா மிகச் சிறந்த செல்வம் ஆகும் என்று அவர்கள் கூறினார்கள். இவை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பயன்படும் என்றுதான் அவர்கள் கூறினார்கள்.

யூதர்கள் அந்த மரங்கள் நெருப்பில் எரிவதை கண்டபோது அவர்களின் பெண்கள் தம் ஆடைகளை கிழித்துக் கொண்டு, தம் முகத்தில் அடித்துக் கொண்டு, ஒப்பாரி வைக்க ஆரம்பித்தனர். பிறகு யூதர்கள் உடனடியாக செய்தி அனுப்பினர். முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் மிகவும் மரியாதைக்குரியவரும் கண்ணியத்திற்குரியவரும் ஆவீர்கள்; தாங்கள் குழப்பத்தை விட்டு தடுக்க கூடியவராக இருக்கின்றீர்கள். குழப்பத்தின் எந்தவொரு தோற்றத்தையும் தாங்கள் விரும்புவதில்லை. இப்பொழுது தாங்களே இந்த வேலையை செய்கிறீர்கள் என்றார்கள்.

ஆனால், ஏற்கனவே கூறப்பட்டது போன்று இந்த மரங்கள் அவர்களுடைய பதுங்குமிடங்களாக இருந்தன. அவர்களை பாதுகாத்து வந்தன. ஆகவே அவர்களின் இந்த பாதுகாப்பை முடிவுக்கு கொண்டு வருவது அவசியமாக இருந்தது. மேற்கொண்டு இரத்தம் சிந்தாமல் இருக்கும் வகையில் எந்த அளவு விரைவாக முடியுமோ அந்த அளவு இந்த ஆற்றலை முடிவுக்கு கொண்டு வர வேண்டியது அவசியமாக இருந்தது. இது அதில் இருந்த நுட்பமான காரணமாகும். அல்லாஹ்வுடைய சிறப்பான இல்ஹாமின் கீழ் பெருமானார் (ஸல்) அவர்கள் இங்கு இந்த மரங்களை எரிப்பதற்கான கட்டனை வழங்கினார்கள் என்று தெரிய வருகிறது. ஏனெனில், யூதர்களின் இந்த அவதூறுக்கான பதிலை அல்லாஹ் இவ்வாறு கொடுத்தான்;

உங்கள் மீது எனக்கு எந்த நம்பிக்கையும் கிடையாது; நீங்கள் என்னிடம் புதியமுறையில் ஏதேனும் உறுதியான ஒப்பந்தம் செய்து கொள்ளாத வரை என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ள மறுத்து விட்டார்கள். யூதர்கள் அனைத்தையும் விட அதிகமாக செல்வத்தின் மீது பேராசை கொண்டவர்களாக இருந்தனர். அவர்களுடைய விலை உயர்ந்த மரங்கள் எரிக்கப்பட்ட போது அவர்கள் உடனடியாக மண்டியிட்டு விட்டனர். அந்த இடத்தை விட்டு செல்வதற்கு விருப்பம் தெரிவித்தனர்.

இதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள். வாழ்க்கை வரலாற்று நூலின் மேற்கோள் ஒன்றை தற்போது நான் எடுத்து வைத்தேன். இப்பொழுது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இது தொடர்பாக எழுதிய விஷயத்தை கூறுகிறேன். அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

பல நாட்களாக தொடர்ச்சியாக முஸ்லிம்கள் முற்றுகையை தொடர்ந்து வந்தனர். ஆனால் எந்தவொரு விளைவும் ஏற்படவில்லை. முற்றுகை ஆரம்பித்து 15 நாட்கள் கடந்துவிட்ட போது, எந்த ஒரு விளைவும் ஏற்படாதபோது, பனூ நளீர் முன்பை போலவே எதிர்ப்பில் நிலை கொண்டிருந்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் கோட்டைகளுக்கு வெளியே இருந்த பனூ நளீருடைய பேரீத்த மரங்களில் சிலவற்றை வெட்டுமாறு கட்டளையிட்டார்கள். வெட்டப்பட்ட இந்த மரங்கள் லீனா எனும் வகையைச் சார்ந்த பேரீத்தம் மரங்களாக இருந்தன. அவை மிகவும் மட்டமான வகையைச் சார்ந்த பேரீத்தம் மரங்களாகும். அந்தப் பழங்களை பொதுவாக மனிதர்கள் உண்ணுவதற்கு பயன்படுத்துவது கிடையாது. அந்தக் கட்டளையின் நோக்கம் என்னவென்றால், அந்த மரங்கள் வெட்டப்படுவதைக் கண்டு பனூ நளீர் தாக்கத்திற்குள்ளாகி விட வேண்டும்; தம் கோட்டைகளின் கதவுகளை திறந்து விட வேண்டும்; இவ்வாறு சில மரங்களுடைய நஷ்டத்தினால் பல மனித உயிர்கள் வீணாவது பாதுகாக்கப்பட வேண்டும்; நாட்டில் கூச்சல் குழப்பம் நிறுத்தப்பட வேண்டும் என்பதாகும். ஆகவே இந்த திட்டம் பயனைத் தந்தது. ஆறு மரங்கள்தான் வெட்டப்பட்டிருக்கும். முஸ்லிம்கள் தங்களுடைய அனைத்து மரங்களையும் - அதில் பழம் தரக்கூடிய மரங்களும் இருந்தன. அவற்றை வெட்டி விடுவார்களோ என்று எண்ணி பனூ நளீர் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தனர். திருக்குர்ஆனில் விளக்கப்பட்டது போன்று சில மரங்கள்தான் வெட்டப்பட்டன. அவையும் கூட லீனா எனும் வகையைச் சேர்ந்த மரங்களை வெட்டுவதற்குதான் அனுமதி இருந்தது. பொதுவான சூழ்நிலையில் முஸ்லிம்களுக்கு எதிரிகளுடைய கனி தரக் கூடிய மரங்களை வெட்டுவதற்கு அனுமதி இருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், இந்த திட்டம் வேலை செய்தது. பனூ நளீர் தாக்கத்திற்குள்ளாகி 15 நாட்கள் முற்றுகைக்குப் பிறகு, இங்கிருந்து தங்களுடைய பொருட்களை எடுத்துக் கொண்டு அமைதியுடன் செல்ல தங்களை அனுமதிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கோட்டையினுடைய கதவுகளை திறந்து விட்டார்கள்.

இதே நிபந்தனையைத்தான் பெருமானார் (ஸல்) ஏற்கனவே எடுத்து வைத்திருந்தார்கள்.ஏனெனில், அன்னாருடைய எண்ணம் அமைதியை நிலை நாட்டுவதாக இருந்தது. இந்த போர் நடவடிக்கையில் முஸ்லிம்ள் தங்களுக்கு ஏற்பட்ட துன்பத்தையும், செலவுகளையும் பொறுத்துக் கொண்டு இப்பொழுதும் கூட இந்த நிபந்தனையை ஒப்புக் கொண்டார்கள். நீங்கள் உங்களது கண்காணிப்பின் கீழ் பனூ நளீரை பாதுகாப்புடன் மதீனாவில் இருந்து அனுப்பி வைக்க வேண்டும் என்று கூறி ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நியமித்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதி இருப்பதைப் போன்று உயர் ரக பேரீத்தம் மரங்கள் வெட்டப்படவில்லை. இதேபோன்று புகாரியுடைய ஒரு விளக்கவுரையிலும் எழுதப்பட்டுள்ளது. அது என்னவென்றால், அறிவிப்புகளின் விளக்கத்தில் செல்லும்போது, முதல் விஷயம் எந்த பேரீத்தம் பழங்கள் எரிக்கப்பட்டனவோ அவை உயர்ரக பேரீத்தம் பழங்களாக இருக்கவில்லை. மாறாக, சாதாரணமான, வீசி எறியப்படும் பேரீத்தம் மரங்களாக இருந்தன. உணவுக்காக கூட மக்கள் அதை பயன்படுத்தாமல் இருந்தனர். ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் குறிப்பிட்டிருப்பது போன்று ஆறு மரங்கள் மட்டுமே எரிக்கப்பட்டன.

யூதர்களின் இயலாமை மற்றும் நாடு கடத்தப்படுவதற்கு அவர்கள் கோரிக்கை வைத்தது தொடர்பாக மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: முஸ்லிம்கள் இந்த யூத கோத்திரத்தினருடைய மரங்களை எரித்து அவர்களை இன்னும் பதற்றத்தில் ஆழ்த்தி விட்டனர். அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் அச்சத்தை நிரப்பி விட்டான். அவர்களின் தைரியம் முறிந்து விட்டது. அவர்கள் ஆயதங்களை கீழே போடுவதற்கு ஒப்புக் கொண்டு விட்டனர். நாங்கள் மதீனாவை விட்டு வெளியேறுவதற்கு ஆயத்தமாக உள்ளோம். நாங்கள் நலமுடன் செல்வதற்கு தாங்கள் எங்களுக்கு வாய்ப்பு தாருங்கள் என்று அவர்கள் கூறி அனுப்பினர். அன்னார் (ஸல்) அவர்களுடைய கோரிக்கையை ஒப்புக் கொண்டார்கள். மதீனாவை விட்டு வெளியேறி விடுங்கள் ; உங்களுடைய உயிர்கள் பாதுகாப்பாக இருக்கும். உங்களுடைய ஒட்டகங்கள் மற்றும் எந்த பொருட்களை நீங்கள் சுமக்க முடியுமோ அவற்றையும் நீங்கள் கொண்டு செல்லுங்கள்; போர் ஆயுதங்களை தவிர என்று கட்டளையிட்டார்கள்.

இஸ்லாத்தின் மீதும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும் போர்கள் படுகொலைகள் போர்ச் செல்வங்களை அடைதல் ஆகியவை குறித்து அவதூறு சுமத்துபவர்கள் இதை பார்க்க வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த யூதர்களை தம் பிடிக்குள் கொண்டு வந்து விட்டார்கள். அந்த யூதர்களும் கூட எப்படிப்பட்டவர்கள் என்றால், அவர்கள் தொடர்ச்சியாக ஒப்பந்தங்களை முறித்துக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவின் ஆட்சியாளராக இருந்தார்கள்.

ஆயினும் அந்த மக்கள் பலமுறை அன்னாரை கொலை செய்வதற்கு மிகவும் கொடிய சூழ்ச்சிகளையும், முயற்சிகளையும் செய்திருந்தார்கள். இப்பொழுது கூட ஆயுதங்கள் ஏந்தி முறையாக கிளர்ச்சியில் இறங்கி இருந்தார்கள். இந்த முற்றுகையின் போதும் கூட ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் புதிய வகையில் ஒப்பந்தம் செய்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முன்வந்தார்கள். மிகவும் ஆணவமான முறையில் அதை அம்மக்கள் மறுத்து விட்டிருந்தார்கள். இப்பொழுது இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களை தம் பிடிக்குள் கொண்டு வந்தபோது அவர்களுக்கு எந்த அளவு கடினத்திலும் கடினமான தண்டனையை வழங்க முடியுமோ அதைக் கொடுப்பது ஆகுமானதாக இருந்தது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களின் அமைதியை விரும்பும் தன்மை, சமாதானத்தை விரும்புதல், மனிதம் மீது கருணை மற்றும் பரிவு காட்டுதல் ஆகியவற்றின் வியத்தகு மகிமை கொண்ட பண்பு வெளிப்படுகின்றது. அன்னார் (ஸல்) அந்த மக்களுக்கு அங்கிருந்து அமைதியுடன் செல்வதற்கு அனுமதி கொடுத்து விட்டார்கள். அன்னாருடைய கருணை மற்றும் அருளுடைய நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், போர் தளவாடங்கள் மற்றும் ஆயுதங்களைத் தவிர எந்தப் பொருட்களை எல்லாம் கொண்டு செல்ல விரும்புகிறார்களோ அவற்றை கொண்டு செல்லவும் அனுமதி கொடுத்தார்கள். யூதர்கள் இந்த கருணை மற்றும் பரிவிலிருந்து எந்த அளவு பயன் பெற்றார்கள் என்றால், தம் வீடுகளுடைய கதவுகளை கூட அவர்கள் பெயர்த்து எடுத்துக் கொண்டு 600 ஒட்டகங்கள் மீது பொருட்களை ஏற்றி வைத்துக் கொண்டு சென்றார்கள். இதைப் பற்றி விளக்கம் அடுத்து வருகிறது: அந்த

யூதர்கள் தம் இயல்பை எவ்வாறு வெளிப்படுத்தினார்கள் என்றால், எந்தப் பொருட்களை கொண்டு செல்ல இயலவில்லையோ அவற்றை வீணாக்குவதற்கு முழுமையாக முயற்சி செய்தார்கள். முஸ்லிம்களுக்கு பயன்படாத வகையில் தம் வீடுளுடைய கூரைகளையும் சுவரையும் இடித்து தள்ளினார்கள். வீடுகளையும் உடைத்து தள்ளி விட்டு சென்றார்கள்.

பனூ நளீரை நாடு கடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளில் பின்வரும் விஷயங்கள் தெரிய வருகின்றன. 1. பனூ நளீரைச் சார்ந்த யூதர்கள் மதீனாவின் பகுதியை விட்டுச் செல்ல வேண்டும்; இது முதல் விஷயமாகும். பனூ நளீரைச் சார்ந்த மக்கள் எங்கு செல்ல விரும்புகிறார்களோ அங்கு செல்லலாம். விரும்பிய இடத்திற்கு அவர்கள் செல்லலாம். யூதர்கள் மதீனாவை விட்டு செல்லும்போது முழுமையான முறையில் ஆயுதங்கள் இன்றி செல்ல வேண்டும். ஆயுதங்களை தவிர்த்து யூதர்கள் எந்த அளவு தம் பொருட்களை தம் ஒட்டகங்கள் மீது கொண்டு செல்ல முடியுமோ கொண்டு செல்லலாம். நான்காவது விஷயம் என்னவென்றால், யூதர்கள் எந்த அளவு இயலுமோ அந்த அளவு தம் செல்வங்களை எடுத்துச் சென்ற பிறகு எஞ்சியுள்ள பொருட்கள் - அது அசையும் சொத்துக்களாக இருந்தாலும் சரி; அசையா சொத்துக்களாக இருந்தாலும் சரி; அவை முஸ்லிம்களுக்கு சொந்தமானவையாக ஆகிவிடும். நாடு கடத்தப்படக் கூடிய நடவடிக்கையை கண்காணித்தல் மற்றும் யூதர்களுடைய சாக்குபோக்கு ஆகியவற்றின் விளக்கமும் காணப்படுகிறது.அதில் எழுதப்பட்டுள்ளது என்னவென்றால், பனூ நளீரை மதீனாவிலிருந்து நாடு கடத்துவதற்கான பொறுப்பு ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அப்போது யூதர்கள் இன்னொரு சாக்குபோக்கு கூறினர். அது என்னவென்றால், இங்குள்ள பல மக்கள் எங்களுடைய கடானிகள் ஆவார்கள். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அவர்கள் அந்த கடனை செலுத்த வேண்டும். அவர்களுடைய நிலை என்னவாகும் என்று கேட்டார்கள். மதீனாவில் இருப்பதற்கு தங்களுக்கு கூடுதல் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். இதுவே அவர்களின் நோக்கமாக இருந்தது. நீங்கள் வட்டியை நீக்கிவிட்டு கடன் தொகையை குறைத்துக் கொள்ளுங்கள். விரைவாக இதை செய்து முடியுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சரிதான். உங்களுக்கு கடன் திரும்ப கிடைத்து விடும். நிபந்தனை என்னவென்றால், நீங்கள் வட்டியை நீக்கி விடுங்கள். ஆனால் சீக்கிரமாக இங்கிருந்து செல்லுங்கள் என்று கூறினார்கள்.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

அபூ ராஃபி ஸலாம் பின் அபீ ஹுகைக் என்பவர் ஹஸ்ரத் உபைத் பின் ஹுஸைர் (ரலி) அவர்களிடமிருந்து 120 தினார் வாங்க வேண்டி இருந்தது. ஆகவே அவர் 40 தீனார் வட்டியை நீக்கி விட்டு அசல் தொகையான 80 தீனாரை பெற்றக் கொண்டார். இவ்வாறு இன்னும் பல மக்களும் இருந்திருப்பார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் நாடு கடத்துவதற்கான நிபந்தனைகளை வகுத்துக் கொண்டிருந்தபோது அபூ ராஃபி ஸலாம் பின் அபீ ஹுகைக் என்பவர் ஹுயய் பின் அக்தப்-யிடம் உமக்கு தீங்கு நேரட்டுமாக. இதை விடவும் மோசமான முடிவை சந்திப்பதற்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள் என்று கூறினார். இதைவிடவும் மோசமான முடிவு இருக்க முடியுமா? என்று ஹுயய் கேட்டார். நம்முடைய சந்ததிகள் கைது செய்யப்படுவார்கள்; நம்முடைய வீரர்கள் கொல்லப்படுவார்கள்; நம்முடைய செல்வங்கள் முஸ்லிம்களுடைய கைகளுக்குள் சென்று விடும். இன்று செல்வங்களை விட்டு விட்டு உயிர்களை காப்பாற்றிக் கொள்வது எளிதாக உள்ளது. நாம் ஏதேனும் குழப்பத்தை ஏற்படுத்தினால் அதனுடைய முடிவு மரண தண்டனையாகவும் சிறைவாசமாகவும் இருக்கும் என்று அபூ ராஃபி கூறினார். இந்த முடிவைக் குறித்து ஹுயய் ஓரிரண்டு நாளில் யோசித்துக் கொண்டிருந்தார். யாமீன் பின் உமைர் மற்றும் அபூ ஸஅது வஹப் ஆகிய இருவரும் ஹுயய் உடைய இந்த தடுமாற்றத்தைக் கண்டபோது அவர்களில் ஒருவர் மற்றவரிடம் சந்தேகத்திற்கிடமின்றி முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய தூதர் ஆவார் என்பது உமக்கு தெரியும். ஆகவே எதற்காக காத்துக் கொண்டிருக்க வேண்டும்? நாம் முஸ்லிமாக ஆகிவிடலாம்; நம்முடைய வேதங்களிலிருந்து இது நிரூபணம் ஆகுவது நமக்கு தெரிகின்றது; எனவே முஸ்லிமாக ஆகுவது சிறந்ததாகும். இவ்வாறு நம்முடைய உயிர்களும், செல்வமும் பாதுகாப்பாக ஆகிவிடும் என்று பேசிக் கொண்டனர். எனவே அவர்கள் இரவின் இருளில் தம் கோட்டைகளை விட்டு வெளியேறி இஸ்லாமியப் படையில் வந்து விட்டனர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு தம் உயிரையும், செல்வத்தையும் பாதுகாத்துக் கொண்டனர். இவ்வாறு இந்த இருவரும் பாதுகாப்பாக ஆகிவிட்டனர். யாமீன் பின் உமைர் என்பவர் பிற்காலத்தில் மிகவும் களங்கமற்ற ஸஹாபியாக ஆனார். எந்த அளவுக்கு என்றால், அவருடைய உள்ளத்தில் அந்நாட்களிலேயே பெருமானார் (ஸல்) அவர்களின் நேசம் எந்தளவு குடிகொண்டு விட்டது என்றால், பனூ நளீரைச் சார்ந்த அம்ர் பின் ஜிஹாஷ் என்ற அந்த யூதன் பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக கொடிய முயற்சியை செய்திருந்தானோ அவன் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட யாமீன் பின் உமைர் அவர்களின் தந்தை வழி சகோதரனாக இருந்தான். ஆகவே இந்த களங்கமற்ற புதிய முஸ்லிம் ஒருவர் மூலமாக அம்ர் பின் ஜிஹாஷை கொன்று விட்டார். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த களங்கமற்றத் தன்மையைக் குறித்தும் நேசத்தைக் குறித்தும் தெரிய வந்தபோது அன்னார் (ஸல்) மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். இது வரலாற்று நூல் ஒன்றில் இருக்கும் மேற்கோளாகும்.

யூதர்கள் நாடு கடத்தப்பட்ட நிலையை குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: யூதர்கள் நாடு கடத்தப்படும்போது தமது ஒட்டகங்கள் மீது பெண்களையும், குழந்தைகளையும் மட்டுமின்றி மேலும் தமது ஒட்டகங்கள் எதையெல்லாம் சுமக்க முடியுமோ அந்த அனைத்து பொருட்களையும் எடுத்துக் கொண்டார்கள். ஆயுதங்களை மட்டும் விட்டு விட்டார்கள். அவர்களிடம் மொத்தம் 600 ஒட்டகங்கள் இருந்தன.

ஒவ்வொரு நபரும் தம்முடைய வீட்டை உடைத்து அதனுடைய கதவுகள் ஜன்னல்கள் போன்ற மரங்களையும் கூட எடுத்துக் கொண்டு ஒட்டகங்களில் கொண்டு சென்றார். ஓர் அறிவிப்பில் வருகின்றது; அந்த மக்கள் தம் வீடுகளுடைய தூண்களையும், கூரைகளையும் கூட உடைத்து விட்டனர். கதவு இணைப்புகளையும் எடுத்துக் கொண்டனர். எந்த அளவுக்கு என்றால் கதவின் நிலைகளையும் கூட எடுத்துக் கொண்டனர். அவர்கள் நாடு துறந்து சென்ற பிறகு அந்த வீடுகளில் முஸ்லிம்கள் குடியிருக்க முடியாத அளவுக்கு அது தகுதியற்றதாக ஆகிவிட வேண்டும் என்பதற்காக அவர்கள் பொறாமை மற்றும் எரிச்சலின் காரணமாக தம் வீடுகளுடைய சுவர்களை இடித்து விட்டு சென்றனர். யூதர்கள் தம்முடைய குழந்தைகளையும், பெண்களையும் ஒட்டகங்களில் அமர வைத்த பிறகு மீதமிருந்த ஒட்டகங்களில் பொருட்களை எடுத்து வைக்க ஆரம்பித்தனர். அப்போது நாடு துறந்து செல்வதால் அவர்களுக்கு எந்த விதமான கஷ்டமோ, வெட்க உணர்வோ இல்லாததைப் போன்று அவர்களுடைய நடவடிக்கை இருந்தது. ஆனால் அவர்களது நெஞ்சங்களில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு எவ்வித கவலையும் இல்லாததைப் போன்று அவர்கள் காட்டி கொண்டார்கள். நாங்கள் மகிழ்ச்சியோடு இங்கிருந்து செல்கிறோம் என்று மக்களுக்கு காட்டிக் கொள்ள விரும்பினர். முதலில் இவர்கள் பனூ ஹாரிஸ் பின் கஸ்ரஜ் பகுதியை கடந்து சென்றார்கள். பிறகு ஜிஸ்ர் பகுதியை கடந்து மதீனாவின் கடைவீதிகள் வழியாக சென்றார்கள். ஜிஸ்ர் என்பதும் கூட மதீனாவில் உள்ள ஒரு கடை வீதியாக இருந்தது.எவ்வாறிருப்பினும், அவர்கள் தம் பெண்களை அலங்கரித்து ஒட்டகத்தின் முதுகில் அமரச் செய்திருந்தார்கள். மேலும் ஆடல் பாடல்களில் அவர்களது அடிமைப் பெண்கள் நடனமாடிக் கொண்டும் இருந்தார்கள். மக்கள் அவர்கள் மீது ஏக்கம் கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் தம் பொருட்களையும், செல்வங்களையும் மக்களுக்கு காட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். அபூ ராஃபி என்பவன் தோலினால் ஆன தலையணையில் தங்கத்தையும், வெள்ளியையும் நிரப்பி வைத்திருந்தான். நாங்கள் இந்த பணத்தை இந்த சூழ்நிலையை எதிர்கொள்வதற்காகவும், வெற்றி பெறுவதற்காகவும் வைத்துக் கொண்டிருக்கின்றோம் என்று அவன் துள்ளி மகிழ்ந்து கூறிக் கொண்டிருந்தான். அவர்கள் புறப்பட்டு செல்லக் கூடிய நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், பாடல்கள் பாடப்பட்டுக் கொண்டிருந்தன ; நாதஸ்வரங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. ஆத்திரமூட்டும் கவிதைகள் நாவில் முணுமுணுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த மக்களுடைய கீழ்த்தரமான செயல்களை கண்டும் காணாமல் இருந்தார்கள். இந்த இடத்தில் வேறொரு சமுதாயம் இருந்திருக்கும் என்றால் இவர்கள் செய்த செயல்களுக்கும், இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் இவர்களுக்கு நிர்வாணத்தை மறைக்கக் கூட உடைகள் கொடுக்கப்பட்டிருக்காது; எதுவும் (கொண்டு) செல்ல முடியாத அளவுக்கு அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களின் மன்னிக்கும் தன்மை கருணை எவ்வாறானதாக இருந்தது என்றால், இவர்களுடைய இந்த விஷயங்களை அன்னார் (ஸல்) கண்டு கொள்ளவே இல்லை.

பனூ நளீருடைய புதிய இருப்பிடம் எங்கு அமைந்தது என்பதை குறித்து எழுதப்பட்டுள்ளது. நாட்டை விட்டுச் செல்லுமாறு பனூ நளீருக்கு கட்டளை இடப்பட்டபோது அவர்கள் முழு அரேபிய தீபகற்பத்தை விட்டும் செல்ல வேண்டும் என்பது கட்டாயமாக இருக்கவில்லை.மாறாக, மதீனாவை விட்டு வெளியேற வேண்டும் என்பது அவசியமாக இருந்தது. மதீனாவை விட்டு மட்டுமே அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அதை தவிர அவர்கள் எங்கு குடியிருக்க விரும்புகிறார்களோ அங்கு செல்லலாம். ஆகவே அவர்களில் சிலர் சிரியாவின் பகுதியான அஸ்ரியாத்தை நோக்கி சென்று விட்டார்கள். அதிகமானோர் கைபரை நோக்கி சென்றார்கள். கைபர் மதீனாவில் இருந்து ஏறக்குறைய 96 மைல் தூரத்தில் இருந்தது.இது அரேபிய தீபகற்பத்தில் இருந்த யூதர்களுடைய மிகப் பெரும் தலைமையகமாக இருந்தது. அதில் ஆயுதமேந்திய போர் வீரர்கள் 10000 பேர் இருந்தார்கள். அதுமட்டுமின்றி அங்கு யூதர்களுடைய பல கோட்டைகளும் இருந்தன. இந்த பகுதி விவசாய நிலங்களால் செழித்து காணப்பட்டது. அரேபிய தீபகற்பத்தில் இருந்து அனைத்து யூதர்களும் பனூ நளீருடைய தலைமைத்துவம் மற்றும் ஆட்சி அதிகாரத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். ஏனெனில், இவர்கள் தங்களை ஹஸ்ரத் ஹாரூன் (அலை) அவர்களின் சந்ததியாக கூறிக் கொண்டிருந்தார்கள். இதை தவிர பனூ நளீரைச் சார்ந்த இவர்கள செல்வந்தர்களாக இருந்தது மட்டுமின்றி, மிகவும் தந்திரமான அறிவை கொண்டவர்களாகவும் இருந்தார்கள். பனூ நளீரைச் சார்ந்த மக்கள் கைபருக்கு சென்றபோது, அங்கு யூதர்களுடைய ஆற்றலும், வலிமையும் இன்னும் கூடிவிட்டது. அவர்களில் பனூ நளீருடைய தலைவர்களான ஹுயய் பின் அக்தப், ஸலாம் பின் அபீ ஹுகைக், கினானா பின் ரபீஃ போன்றவர்களும் இருந்தனர். கைபருடைய யூதர்கள் போர் திறமைகளில் மேம்பட்டவர்களாக இருந்தனர். போரை பொறுத்த வரை கைபர் மக்கள் மிக திறமைசாலிகளாக இருந்தனர். ஆனால், பனூ நளீருடைய யூதர்கள் போரை விட அரசியல் அகப்பார்வையில் முன்னேறியவர்களாக இருந்தனர்.

அரசியலைப் பொறுத்த வரை பனூ நளீரைச் சார்ந்த மக்கள் மிகவும் சாதுரியமானவர்களாக இருந்தனர். அவர்கள் கைபரில் காலெடுத்து வைத்த உடனேயே மிக எளிதாக தம்மை அதாவது பனூ நளீரைச் சார்ந்த அம்மக்கள் மிக எளிதாக தம்மை தலைமை பதவிகளில் நிறுத்திக் கொண்டனர். இதன் விளைவாக கைபர் முஸ்லிம்களுக்கெதிரான பெரிய போர்த்தளமாக ஆகிவிட்டது.

பனூ நளீருடைய யூதர்களுடன் அன்ஸாரிகளின் ஆண் மக்கள் சென்றது தொடர்பாகவும் கூறப்படுகிறது. பனூ நளீரைச் சார்ந்தவர்களில் சிலர் மதீனாவில் இருந்து வெளியேறி சிரியாவின் பகுதியான அஸ்ரியாத்தை நோக்கி சென்று விட்டார்கள். அந்த யூதர்களில் சில அன்ஸாரி முஸ்லிம்களுடைய ஆண் பிள்ளைகளும் இருந்தார்கள். அதற்கான காரணம் என்னவென்றால், ஏதேனும் அன்ஸாரி பெண்ணுக்கு குழந்தைகள் உயிருடன் நிலைத்திருக்கவில்லை என்றால், இஸ்லாத்திற்கு முன்பு அவர்களுடைய வழக்கம் என்னவாக இருந்தது என்றால், அப்பெண்ணுடைய மகன் உயிருடன் இருந்தால் அந்த மகனை யூதனாக ஆக்கிவிடுவதாக அப்பெண் நேர்த்திக் கடன் வைப்பாள். இவ்வாறு பல பேர் அன்ஸார் சகோதரர்களின் ஆண் மக்களாக இருந்தார்கள். ஆனால், அவர்கள் யூதர்களாக ஆக்கப்பட்டிருந்தார்கள். பனூ நளீர் மக்கள் நாட்டை துறந்து செல்லும்போது அந்த ஆண் மக்களுடைய தந்தையர்கள், நாங்கள் எங்களது பிள்ளைகளை அவர்களுடன் அனுப்ப மாட்டோம் என்று கூறினார்கள். அப்போது அல்லாஹ் அவர்களுக்காக வஹீயை இறக்கினான். ஸீரத்துல் ஹல்பியாவில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

மார்க்கத்தில் எவ்வித கட்டாயம் இல்லை என்று அல்லாஹ் கூறினான்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) இதை குறித்து எழுதுகிறார்கள்: பனூ நளீர் பெரும் ஆரவாரத்தோடும், கம்பீரத்தோடும் தம் அனைத்து பொருட்களையும் எடுத்து கொண்டு சென்றனர். எந்த அளவுக்கு என்றால், தம் கைகளால் தம் வீடுகளை இடித்து தள்ளி வீடுகளுடைய கதவுகள், அதனுடைய நிலைகள், மரச்சாமான்கள் ஆகியவற்றை பெயர்த்து எடுத்துச் சென்றனர். (அவர்களை குறித்து) இவ்வாறு எழுதப்படுகிறது:

கொண்டாட்டம் மற்றும் ஆரவாரத்துடன் பாட்டுகள் பாடியவாறு இவர்கள் மதீனாவில் இருந்து வெளியேறினார்கள். எவ்வாறு என்றால், ஒரு திருமண ஊர்வலம் செல்வது போல் சென்றார்கள். ஆனால், அவர்களுடைய போர் தளவாடங்கள் மற்றும் அசையா சொத்துக்களாக இருந்த தோட்டங்கள் போன்றவை முஸ்லிம்களின் கைகளில் வந்தன. இந்த செல்வம் போர் நடைபெறாமல் கிடைத்தது. ஆகவே இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படையில் இதை வினியோகம் செய்வதற்கான அதிகாரம் முழுக்க முழுக்க பெருமானார் (ஸல்) அவர்களின் கைகளில் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த செல்வத்தை பெருமளவில் ஏழை முஹாஜிர்களுக்கு விநியோகம் செய்து கொடுத்து விட்டார்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தின் சுமை இப்பொழுது வரை ஆரம்ப கால சகோதர உடன்படிக்கையின் அடிப்படையில் அன்ஸாரிகளின் சொத்துக்களை சார்ந்து இருந்தது. இவ்வாறு மறைமுகமாக அன்ஸாரிகளும் இந்த போர்ச் செல்வத்தில் பங்கு பெறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

#12 KNG Garden
sundakamuthur main Road,
Kuniyamuthur,
Coimbatore-641008
93632 27227
succesraoof@gmail.com
SUCCESS INDIA
PROMOTERS
M. Abdul Raoof
936322729

ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) என்ற ஒரு ஸஹாபியின் கண்காணிப்பின் கீழ் பனூ நளீர் மதீனாவில் இருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சில அன்ஸாரிகள் தம்முடைய சந்ததிகளாக இருந்தவர்களை அவர்களுடன் செல்ல விடாமல் தடுக்க விரும்பினர். ஆனால், அன்ஸாரிகள் நேர்த்திக்கடன் வைத்ததன் காரணமாக அவர்கள் யூதர்களாக ஆகி இருந்தார்கள். பனூ நளீரோ அவர்களை தம்முடன் அழைத்துச் செல்ல விரும்பினர். ஆனால், அன்ஸாரிகளுடைய இந்த கோரிக்கை இஸ்லாமிய கட்டளையான, மார்க்க விவகாரத்தில் எவ்வித கட்டாயமும் இல்லை என்பதற்கு எதிராக இருந்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக, யூதர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினார்கள். யூதராக இருக்கக் கூடியவர் செல்ல விரும்புகிறார் என்றால் நாம் அவரை தடுக்க மாட்டோம் என்று கூறிவிட்டார்கள். ஆயினும், பனூ நளீரிலிருந்து இரு நபர்கள் மனமுவந்து முஸ்லிம்களாக ஆகி மதீனாவில் இருந்து விட்டார்கள். அவர்களைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ நளீரை குறித்து அவர்கள் சிரியாவின் பக்கம் செல்ல வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்கள் என்று ஓர் அறிவிப்பில் வருகிறது. அதாவது அரேபியாவில் இருக்க வேண்டாம் என்பதாகும். ஆனால், அவ்வாறிருந்தும் அவர்களுடைய சில தலைவர்கள் உதாரணமாக ஸலாம் பின் அபீ ஹுகைக், கினானா பின் ரபீஃ மற்றும் ஹுயய் பின் அக்தப் ஆகியோரும், பொதுமக்களில் ஒரு பிரிவினரும் ஹிஜாஸ் உடைய வடக்குப் பகுதியில் யூதர்களுடைய பிரபல்யமான குடியிருப்பாக இருந்த கைபருக்கு சென்று குடியிருந்து விட்டார்கள். கைபர் வாசிகள் இவர்களை பெரும் நல்வரவு கூறி வரவேற்றார்கள். இறுதியில் இவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக அபாயகரமான குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும், போரை மூட்டுவதற்கும் காரணமாக ஆனார்கள்.

பனூ நளீரிலிருந்து கிடைத்த செல்வம், ஃபய் செல்வம் என்று அழைக்கப்படுகிறது. அது எவ்வாறு விநியோகிக்கப்பட்டது என்பதை குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; பனூ நளீர் கோத்திரம் அங்கிருந்து கிளம்பிச் சென்ற பிறகு அவர்களுடைய ஆயுதங்கள், தோட்டங்கள், நிலங்கள், வீடுகள் ஆகியவற்றை பெருமானார் (ஸல்) அவர்கள் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். ஆயுதங்களுள் 50 தலைக் கவசங்களும், 25 கவச உடைகளும் 340 வாள்களும் இருந்தன. இது முஸ்லிம்களுக்கு கிடைத்த முதல் ஃபய் செல்வமாக இருந்தது. அதாவது ஃபய் செல்வம் என்பது காஃபிர்களுடன் போரிடாமல் கிடைக்கக் கூடிய செல்வமாகும். போர் செல்வத்தைப் போன்று இந்த செல்வத்திலிருந்து 5-ல் ஒரு பகுதி

எடுக்கப்படாது. மாறாக முழு செல்வமும் பெருமானார் (ஸல்) அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். அன்னார் (ஸல்) எங்கு விரும்புகிறார்களோ அதை அங்கு செலவு செய்து கொள்ளலாம். பனூ நளீருடன் போருக்கான சூழ்நிலை அமையவில்லை. மாறாக அல்லாஹ் தன் நபியுடைய அச்சத்தையும், ஆளுமையையும் அவர்களின் உள்ளங்களில் ஏற்படுத்தி விட்டான். இவ்வாறு அல்லாஹ் அவர்களின் செல்வத்துக்கு தன் தூதரை வாரிசாக ஆக்கிவிட்டான். இந்த செல்வம் ஃபய் (எனும் போர் புரியாமலேயே கிடைத்த)செல்வமாக இருந்தது. முஸ்லிம்கள் நல்ல வழியில் செலவு செய்ய வேண்டும் என்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களின் அனைத்துப் பொருட்களையும் முஸ்லிம்களிடத்தில் விநியோகம் செய்து கொடுத்து விட்டார்கள். இதைக் குறித்து அல்லாஹ்வுடைய வசனம் இவ்வாறு கூறுகிறது:

அல்லாஹ் தன் தூதருக்கு அவர்களிடமிருந்து வழங்கிய போர்க்களப் பொருள்களுக்காக நீங்கள் குதிரைகளையோ ஒட்டகங்களையோ ஓட்டவில்லை. எனினும் அல்லாஹ் தன் தூதர்களுக்கு, தான் நாடுபவர்களின் மேல் அதிகாரத்தை வழங்குகின்றான். அதாவது போர் நடக்கவில்லை. அல்லாஹ் எல்லாவற்றிற்கும் பேராற்றல் பெற்றவனாவான்.

அன்ஸாரிகளின் வியத்தகு நேசம் மற்றும் தியாகத்தின வெளிப்பாட்டின் முன்மாதிரியும் நமக்கு இங்கு காணக் கிடைக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஃபய்(எனும் போர் புரியாமலேயே கிடைத்த) செல்வத்தை விநியோகம் செய்யும்போது, ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸ் பின் ஷமாஸ் (ரலி) அவர்களிடம், எமக்கு முன்னால் உங்கள் சமுதாயத்தை ஒன்று திரட்டுங்கள் என்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்O அவர்களே, கஸ்ரஜ் கோத்திரத்தையா? என்று அவர்கள் கேட்டார்கள். அனைத்து அன்ஸாரிகளையும், அழையுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஆகவே அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தாரை அழைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை புகழ்ந்த பிறகு அன்ஸாரிகள் முஹாஜிர்களுடன் அழகிய முறையில் நடந்து கொண்டதை பற்றி எடுத்துரைத்தவாறு அன்ஸாரிகளை பார்த்து, நீங்கள் விரும்பினால் பனூ நளீரிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஃபய் (எனும் போர் புரியாமலேயே கிடைத்த) செல்வத்தை உங்களுக்கும் முஹாஜிர்களுக்கும் இடையில் விநியோகம் செய்து விடுகிறேன். அந்நிலையில் முஹாஜிர்கள் உங்களது வீடுகளை ஆக்கிரமித்தவர்களாகவும், உங்களது செல்வங்களுக்கு எஜமானர்களாகவும் இருப்பர். உங்களுக்கு விருப்பமிருந்தால் ஃபய் (எனும் போர் புரியாமலேயே கிடைத்த) செல்வத்தை முஹாஜிர்களிடத்தில் நான் விநியோகம் செய்து விடுவேன். அந்நிலையில் உங்களால் வழங்கப்பட்ட வீடுகளை விட்டு அவர்கள் வெளியேறி விடுவார்கள் என்றார்கள். அதாவது தற்போது பரஸ்பரம் உங்களுக்கு இடையில் விநியோகம் செய்யப்பட்டுள்ள சொத்துக்கள், அன்ஸாரிகளிடமிருந்து முஹாஜிர்கள் பெற்று வந்த பயன்கள் ஆகியவை முடிவுக்கு வந்து விடும். ஏனெனில், அவர்களிடத்திலும் செல்வங்கள் வந்துவிடும் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸஅது பின் முஆஸ் (ரலி) ஆகியோர் கூறினார்கள்: எங்களுடைய செல்வங்கள் அவர்களிடத்திலே இருக்குமாறு விட்டு விடுங்கள். பனூ நளீருடைய அனைத்து செல்வங்களையும் எங்களுடைய முஹாஜிர் சகோதரர்களுக்கு விநியோகம் செய்து விடுங்கள். நாங்கள் கொடுத்ததும் அவர்களிடத்திலேயே இருக்கட்டும்; பனூ நளீருடைய ஃபய் செல்வமும் அவர்களிடத்திலேயே கொடுத்து விடுங்கள் என்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் இதில் மகிழ்ச்சி அடைகிறோம்; நாங்கள் இதை ஒப்புக் கொள்கிறோம் என்ற குரல் நாலாபுறமும் ஒலித்ததை முஹாஜிர்கள் கேட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த தியாக உணர்வைக் கொண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

மேலும், அல்லாஹ்வே! அன்ஸாரிகள் மீதும் அவர்களுடைய சந்ததிகள் மீதும் கருணை காட்டுவாயாக! என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) பெரும்பாலான செல்வத்தை முஹாஜிர்களிடத்தில் விநியோகம் செய்து விட்டார்கள். அன்ஸார் ஸஹாபிகளில் வறுமையில் இருந்த இரு ஸஹாபிகளுக்கு மட்டுமே அந்த செல்வம் கொடுக்கப்பட்டது. அவர்கள் ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) ஆகியோர் ஆவர். இப்னு உயய்னா அவர்கள் கூறுகிறார்கள்: ஸஹ்ரீ அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன்; பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ நளீருடைய செல்வத்திலிருந்து ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) ஆகியோரைத் தவிர வேறு எந்த அன்ஸாருக்கும் பங்கு கொடுக்கவில்லை. ஏனெனில், இவர்கள் இருவரும் வறுமையில் இருந்தார்கள். ஆகவே அவர்களுக்கு இதில் பங்கு கொடுக்கப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் முஆஸ் (ரலி) அவர்களுக்கு அபூ ஹுகைக் உடைய வாளை வழங்கினார்கள். அந்த வாளுக்கு பெரும் பெயர் இருந்தது. அன்னார் (ஸல்) மற்ற பொருட்களை ஏழைகளிடத்தில் விநியோகம் செய்து விட்டார்கள். அதில் கொஞ்சம் தமக்காகவும் வைத்துக் கொண்டார்கள். அது அன்னாருடைய மனைவிகளுடைய செலவீனங்களுக்காக இருந்தது. ஓர் அறிவிப்பில் வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த பனூ நளீருடைய தோட்டத்திலிருந்து கிடைக்கப் பெறும் தானியங்களை கொண்டுதான் ஏழு வருடமும் தம் மனைவிமார்களுக்கு செலவு செய்து வந்தார்கள். அதாவது முழு வருடத்திற்கான செலவுகளையும் இதிலிருந்துதான் தம் மனைவிமார்களுக்கு கொடுத்து வந்தார்கள். எஞ்சியவற்றை ஜிஹாதுக்கான ஆயத்தங்களுக்காக செலவு செய்தார்கள். ஏழை எளிய மக்களுக்கு உதவியும் இந்த செல்வத்திலிருந்துதான் செய்து வந்தார்கள். பனூ நளீருக்கு ஏழு தோட்டங்கள் இருந்தன. விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஹஸ்ரத் அபூ ராஃபி (ரலி) அவர்கள் அதை கண்காணிக்கும் பொறுப்பில் நியமிக்கப்பட்டார்கள். அதாவது அவர்கள் அதற்கான மேலாளர் ஆக இருந்தார்கள். அந்த தோட்டங்களுடைய பெயர்கள் மிஸ்அஃப், ஸாஃபியா, தலால், ஹுஸ்ணா, பார்க்கஃ, அவாஃப், மஷ்ரபா மற்றும் உம்மு இப்ராஹீம் என்பவையாக இருந்தன.

எவ்வாறிருப்பினும், இங்கு பனூ நளீர் போரை பற்றிய குறிப்பு நிறைவு பெறுகிறது. இனி வரக் கூடிய காலத்தில் இன்ஷா அல்லாஹ் மற்ற போர்களைப் பற்றிய குறிப்பு எடுத்துக் கூறப்படும்.

பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக துஆக்களை தொடர்ந்து செய்து வாருங்கள். அங்குள்ள நிலைமைகள் மேம்படுவதற்காக துஆக்கள் செய்து வாருங்கள். அங்குள்ள பொதுவான அமைதியின் நிலையையும் அல்லாஹ் சிறந்ததாக ஆக்குவானாக. அஹ்மதிகளை தம் பாதுகாப்பில் வைப்பானாக. உலகில் உள்ள முஸ்லிம்களின் பொதுவான நிலைமைக்காகவும் துஆ செய்யுங்கள். இம்மக்களும் காலத்தின் இமாமை ஒப்புக் கொண்டு தம்முடைய பெருமையை மீண்டும் பெறக் கூடியவர்களாக ஆவார்களாக! உலகின் பொதுவான சூழ்நிலை போர்ச் சூழலாக மாறிக் கொண்டிருக்கின்றது. இதற்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் எந்த திசையை நோக்கி செல்கிறதோ அதை பார்க்கும்போது இப்பொழுது போர் கண்டிப்பாக நிகழும் என்றே தெரிகிறது. அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும், ஒவ்வோர் அப்பாவியையும் இந்த தீங்கிலிருந்து பாதுகாப்பானாக!

தமிழாக்கம்
மவ்லவி தாரிக் அஹ்மத்

* * * * * * *

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

W,A ABDUL AZEEZ mob: 7358346786
Proprietor off : 044- 2260 1886

**RAZIK XEROX & TELECOM**
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு ஹஜ்ஜத்துல் விதா இறுதி பேருரையின் ஒளியில்**
**(மனித சமத்துவம்)**

(மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கௌரி ஸாஹிப், நாஸிர் ஆஃலா காதியான்)
(2023ம் ஆண்டு காதியான் மாநாட்டின் உரை )

يَآ يُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِىْ
خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍوَّخَلَقَ مِنْهَا
زَوْجَهَا وبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيْرًا وَّنِسَاءً۔

பொருள்: மக்களே! உங்களைத் தனித்த ஒன்றிலிருந்து படைத்து அ(தன் இனத்)திலிருந்தே அதன் இணையையும் படைத்து அவ்விரண்டிலிருந்தும், அநேக ஆண்களையும், பெண்களையும் (படைத்து உலகில்) பரவச் செய்த உங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள்.

(திருக்குர்ஆன்: 4:2)

மேலும், அல்லாஹ் கூறுகின்றான்:

يَآ يُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنٰكُمْ مِّنْ ذَكَرٍ وَّ
اُنْثٰى وَ جَعَلْنٰكُمْ شُعُوْبًا وَّ قَبَآئِلَ
لِتَعَارَفُوْا ط اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ اَتْقٰكُمْ
طاِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ۔(الحجرات

மக்களே! நாம் உங்களை ஆண், பெண்ணிலிருந்து படைத்தோம்; நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக, நாம் உங்களைக் கோத்திரங்களாகவும், இனங்களாகவும் ஆக்கியுள்ளோம். நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் உங்களுள் கண்ணியமிக்கவர், உங்களுள் இறையச்சமிக்கவரே. நிச்சயமாக அல்லாஹ் எல்லாம் அறிந்தவனும், எல்லாம் உணர்ந்தவனுமாவான்.

(திருக்குர்ஆன்: 49: 14)

அடுத்து, அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் இவ்வாறு கூறும்படி கூறுகின்றான்:

قُلْ اِنَّمَآ اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ يُوْحٰٓى اِلَىَّ اَنَّمَا
اِلٰهُكُمْ اِلٰهٌ وَّاحِدٌ۔(كهف:111)

நீர் கூறுவீராக! நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே.(ஆனால்) உங்களுடைய (உண்மையான) இறைவன் ஒரே இறைவன் தான் என்று எனக்கு வஹீயின் மூலம் அறிவிக்கப்படுகிறது. (திருக்குர்ஆன்: 18: 111)

இஸ்லாமிய சமத்துவத்தின் தத்துவமானது நான் தற்போது ஓதிய இந்த சில திருக்குர்ஆன் வசனங்களில் சுருக்கமாக வந்துவிட்டது. அதனுடைய மொழியாக்கமும் இங்கு வாசிக்கப்பட்டது. அதிகாரம் அந்நிஸாவின் வசனத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ் மனிதனுக்கு அவர்கள் அனைவரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் மற்றும் ஒரே மரத்தின் கிளைகள் என்ற இந்த நிரந்தரமான மற்றும் நிலையான உண்மையின் பக்கம் கவனமூட்டியவாறு உலகில் சீரான சமத்துவத்தின் அடிப்படையை நிலைநாட்டி விட்டான். மேலும் இந்த அடிப்படை விஷயத்தையும் அதாவது பின்னால் ஏற்படக் கூடிய சந்தர்ப்ப சூழ்நிலையின் விளைவால் மனிதர்களில் பல பிரிவுகளாகவும் பல சமுதாயங்களாகவும் பல கோத்திரங்களாகவும் பிரிந்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் அவர்கள் தமக்குள் ஏற்படுகின்ற பிரச்சனைகளில் நாம் அனைவரும் அடிப்படையில் ஒரே இனத்திலிருந்து தோன்றிய சந்ததிகள் என்ற இவ்விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை வெளிப்படுத்தி விட்டான்.

அதிகாரம் ஹஜ்ரின் வசனங்களில் மேலும் அதை தெளிவுபடுத்தியவாறு மக்கள் சமூகத்தில் பல சமுதாயங்களாகவும், பல கோத்திரங்களாகவும் பல பிரிவுகளாகவும் காணப்படுகின்றார்கள். இது அவர்கள் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்வதற்காகவும் அவர்களின் அறிமுகத்திற்கான ஒரு வழிமுறையும் ஆகும். இந்த வேறுபாட்டை ஒருவர் மற்றவருக்கு எதிராக பெருமைக்குரிய மற்றும் மகத்துவத்திற்குரிய வழிமுறையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள். இறைவனின் பார்வையில் மாறாக ஒரு நல்ல சமூகத்திலும் பெரிய மற்றும் கண்ணியத்திற்குரிய மனிதன் எவர் என்றால் தன்னளவில் மிக அதிகமாக புகழுக்குரிய தலைவர், அதிகமான தக்வா உடையவர் மற்றும் அதிகமான இறையச்சத்தை மேற்கொள்பவரே ஆவார்.

மனிதகுலத்தின் கருணையாளர் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

அதாவது நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான் என்று கூறியவாறு மனித நேயத்தின் நற்பண்புகளை அதனுடைய உச்சத்தையே அடையச் செய்தார்கள்.

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! இன்று உலகம் அமைதியின்மை மற்றும் தீய நிலைக்கு இலக்காக்கப்பட்டுள்ளது. இதற்கான மிகப் பெரிய காரணம் ஒன்று மார்க்க வெறுப்பாகும். ஒருபுறம் வெள்ளை நிற மற்றும் கருப்பு நிற பிரிவுகளுக்கிடையே சண்டை சச்சரவு என்றால் மறுபுறம் முதலாளி வர்க்கம் மற்றும் தொழிலாளிகளுக்கு இடையே சண்டை சச்சரவு; ஒருபுறம் முதலாளி வர்க்கம் மற்றும் தொழிலாளிகளுக்கு இடையே சண்டை சச்சரவு ஒருபுறம் சமுதாய மேன்மைக்கான பெருமை என்றால், மறுபுறம் உயர் ஜாதி வர்க்கம் நம்மைப் போன்ற பிற மனிதர்களை தாழ்ந்தவராகவும், இழிவானவராகவும் சித்தரிக்கின்றது. இவ்வாறாக மனிதர்களுக்கு இடையில் வெறுப்பின் இரும்பு சுவர் எழும்பி விடுகின்றது.

இவ்வாறான சூழ்நிலைகளில், இன்று எல்லாப் புகழும் சமத்துவம் மற்றும் சமநிலையின் சர்ச்சை எழுந்துள்ளது. இந்த பசுமை தோட்டத்தை செயல்வடிவில் எவ்வாறு நிலை பெறச் செய்வது? எந்த அளவிற்கு நிலை பெற்று விட்டது? மேலும் பூமியின் எதிர்பார்ப்பு என்ன? இதை விளக்கமாக இந்த குறுகிய நேரத்தில் எடுத்துக் கூறுவது சாத்தியம் இல்லை. ஆனால், அது தொடர்பான நம்முடைய அறிவிப்புகள் மற்றும் பிரச்சனைகளை நாம் நிராகரிக்கவும் முடியாது. முன்னேற்றம் அடைந்த நாடுகளிலும் சரி; முன்னேற்றம் அடையாத நாடுகளிலும் சரி; சமத்துவம் மற்றும் சமநிலையை நிலை பெறச் செய்வதற்கான மகிழ்ச்சிகரமான அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன தான். அது குடியரசு அமைப்பாக இருந்தாலும் சரி; அனைவரின் வாதமும் சமத்துவத்தை நிலைபெறச் செய்வதாகவே உள்ளது. உதாரணமாக செல்வந்தர்கள் மற்றும் ஏழைகளின் வேறுபாட்டை அழித்து விடுதல், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையில் சமத்துவம் மற்றும் சமநிலையை நிலை பெறச் செய்தல், அரசரையும் மக்களையும், எஜமானனையும், தொழிலாளியையும் ஒரே அணியில் நிற்க வைக்க வேண்டும் போன்ற அறிவிப்பு ஆகும்.

ஆனால், செயல் ரீதியான சமத்துவத்தை நிலை பெறச் செய்வதற்காக எல்லாவற்றிற்கும் முதலில் எந்த விஷயங்களை கொண்டு மனித குலத்தின் மத்தியில் சமத்துவம் மற்றும் சமநிலையை நிலைநாட்ட முடியும்! அவ்வாறு நிலைபெற செய்ய முடியும் என்றால் எதுவரை என்ற இவ்விஷயத்தை தீர்மானிப்பது அவசியமாகும். இதற்காக நாம் உண்மையான படைப்பாளனாகிய அல்லாஹ்வின் அடிப்படை பண்புகளாகிய ருபூபிய்யத் (படைத்து பரிபாலித்தல்), ரஹ்மானிய்யத் (அளவற்ற அருளாளன்), ரஹீமிய்யத் (மேன்மேலும் கருணை காட்டுபவன்), மாலிக்கிய்யத் (தீர்ப்பு நாளின் எஜமானன்) ஆகியவற்றை புரிவது அவசியமாகும். முதல் பண்பை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். திருக்குர்ஆன் அல்லாஹ்வை ரப்புல் ஆலமீன் (அனைத்து உலகங்களுக்கும் இறைவன்) என்று கூறியுள்ளது. இதன் பொருள் அவன் அனைத்து உலகங்களுக்கும் அனைத்து படைப்பினங்களுக்கும் ரப் ஆவான். இறைவன் ஆவான்; படைத்து காக்கின்றவன் ஆவான் என்பதாகும். அவன் முஸ்லிம்களுக்கு மட்டும் ரப்பாகவோ அல்லது கிறிஸ்தவர்களுக்கு மட்டும் ரப்பாகவோ அல்லது யூதர்களுக்கு மட்டும் ரப்பாகவே அல்லது இந்துக்களுக்கு மட்டும் ரப்பாகவோ இல்லை. அவனுடைய விண்ணின் ஆட்சி மற்றும் பூமியின் அவனுடைய பண்புகளாகிய ருபூபிய்யத் மற்றும் ரஹ்மானிய்யத்தின் கீழ் ஒவ்வொரு மனிதனுக்கும் சமமான அருளை வழங்கிக் கொண்டே இருக்கின்றது. எந்த அளவிற்கு என்றால் எந்த ஒரு மனிதரும் அந்த இறைவனை ஏற்றுக் கொண்டாலும் சரி; ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி; அவனை வணங்கினாலும் சரி; வணங்காவிட்டாலும் சரி; அந்த இறைவனின் சூரியன், சந்திரன் அனைவருக்கும் ஒளியை வழங்கிக் கொண்டே இருக்கின்றது. அவனுடைய பூமியானது அவனுடைய நீரானது அவனுடைய காற்றானது அவனுடைய ஒவ்வொரு பொருளும் எந்த ஒரு பாகுபாடின்றி அனைவருக்கும் பயனை வழங்கிக் கொண்டே இருக்கின்றது.

இது பௌதீக ரீதியான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான பொருள்களாகும். இதேபோன்று ஆன்மிக வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காகவும் இறைவன் எந்த ஒரு சமுதாயத்தினரிடமும்

வேறுபாட்டை வெளிப்படுத்தவில்லை. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தன்னுடைய தூதுவர் மற்றும் நேர்வழி காட்டியை அனுப்பியுள்ளான். இது தொடர்பாக திருக்குர்ஆனில் இவ்வாறு வந்துள்ளது:

وَلِكُلِّ اُمَّةٍ رَّسُوْلٌ
وَّلِكُلِّ قَوْمٍ هَادٍ

ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் (இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட) வழிகாட்டி ஒருவர் உண்டு. (அர்ரஅது : 13:48)

இந்த வசனங்கள் ரப்புல் ஆலமீன் ஆகிய அல்லாஹ் அனைத்து சமுதாயத்திற்கும், அனைத்து உம்மத்திற்கும் தன்னுடைய வழிகாட்டி மற்றும் தூதரை அனுப்பி உள்ளான் என்ற சான்றை பகர்கின்றது. மேலும் அந்த இறைத் தூதர்களுக்கு இடையிலும் சமத்துவத்தை ஏற்படுத்தியுள்ளான். எனவே இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْ رُّسُلِهٖ

. முஸ்லிம்களாகிய நாங்கள் அ(இறை)வனுடைய தூதர்களுள் எவருக்கிடையிலும் (எந்த) வேற்றுமை(யும்) பாராட்டுவதில்லை. (அல்பக்கரா: 2:286)

இதன் பொருள் தூதுவத்தின் அடிப்படையில் அனைவரும் சமமானவர்களே. ஆனால் அவர்களின் பொறுப்புகள் கடமைகள் மற்றும் பணியின் வட்டத்தின் அடிப்படையில் அவர்களின் அந்தஸ்தில் வேறுபாடுகள் காணப்படும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! தற்போது நான் மனிதகுலத்தின் படைப்புகள் அதாவது மனிதனின் பிறப்பு மற்றும் அவனுடைய புத்திக் கூர்மை மற்றும் உடல் ரீதியான வளர்ச்சியை கருத்தில் கொண்டு அவற்றின் உரிமைகள் மற்றும் கடமைகளின் அடிப்படையில் சமத்துவம் தொடர்பாக அதிக விளக்கம் அளிக்காமல் நம்முடைய தலைவர் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் ஹஜ்ஜத்துல் விதாஃ (இறுதிப் பேருரையின்) ஒளியில் சில விஷயங்களை சுருக்கத்துடன் இங்கு அதை சமர்ப்பிக்கின்றேன்.

நம்முடைய தலைவர் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு கண்ணியத்திற்குரிய பைத்துல்லாஹ்வில் ஹஜ் செய்தார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அறிவிப்புகளின் அடிப்படையில் 1 லட்சத்து 24 ஆயிரத்திற்கும் அதிகமான ஸஹாபிகள் கூடியிருந்தார்கள். எம்பெருமானார் (ஸல்) அவர்களின் முதலும் கடைசியுமான ஹஜ்ஜாக அது இருந்தது. அது ஹஜ்ஜத்துல் விதாஃ என்ற பெயரில் பிரசித்தி பெற்றுள்ளது. இதில் பெரும்பானார் (ஸல்) அவர்கள் அரஃபாத் மற்றும் மினா திடல்களில் நீண்ட உரை நிகழ்த்தினார்கள். அது பல அறிவிப்புகளின் மூலமாக புகாரி மற்றும் முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் போன்ற ஹதீஸ் நூல்களில் இடம் பெற்றுள்ளது. இந்த உரை மனிதனின் அடிப்படை வெற்றி, மகிழ்ச்சிகரமான வாழ்க்கை மற்றும் கியாமத் வரை வருங்கால சந்ததிகளின் தஃலீம் மற்றும் தர்பிய்யத்திற்கான பல கருத்துக்களைக் கொண்ட தொகுப்பாகும். நான் தற்போது என்னுடைய தலைப்புக்கு எற்ப மனித குலத்தின் சமத்துவம் தொடர்பாக அந்த நுட்பமான சொற்பொழிவிலிருந்து சில மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன். துல்ஹஜ் மாதத்தின் பதினொன்றாம் நாளன்று மினா திடலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு உரை நிகழ்த்தினார்கள்:

மக்களே! காது கொடுத்து கேளுங்கள்; இப்போது பேசுவது போன்று இந்த வருடத்திற்கு பிறகு இந்தத் திடலில் இனி ஒருமுறை நான் பேசுவேனா என்பது எனக்கு தெரியாது. மக்களே! அறிந்து கொள்ளுங்கள்; உங்கள் இறைவன் ஒருவனே; உங்கள் தந்தையும் ஒருவரே ; இறையச்சத்தை தவிர வேறெந்த வகையிலும் ஓர் அரேபியருக்கு அரபி அல்லாதவரை விட, ஓர் அரபி அல்லாதவருக்கு அரபியரை விட, ஒரு வெள்ளையருக்கு கருப்பரை விட, ஒரு கருப்பருக்கு வெள்யைரை விட எவ்வித சிறப்பும், மேன்மையும் கிடையாது.

முஸ்லிம்களே! எல்லாம் வல்ல இறைவன் ஈமானின் (நம்பிக்கையின்) மூலமாக அறியாமை காலத்தின் (ஜாதி, மத, இன, நிறம் ஆகியவற்றின் காரணமாக இருந்த) ஆணவத்தையும், உங்களிடமிருந்து அகற்றி விட்டான். மேலும் உங்கள் முன்னோர்களிடம் காணப்பட்ட தற்பெருமை எனும் நோயை நீக்கிவிட்டான். அனைத்து மக்களும் ஆதமின் சந்ததிகளே. மேலும் ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டவர்.

உலகில் உள்ள மக்கள் கனிமங்களைப் போன்றவர்கள் ;அவை ஒரே வகையான கனிமங்கள் மற்றும் ஒரே வகையான மண்ணின் கீழ் புதைந்து, படிப்படியாக வெவ்வேறு வண்ணங்களையும் வெவ்வேறு குணங்களையும் பெறுகின்றன. ஆனால், இஸ்லாத்திற்கு முன்பு அறியாமை காலகட்டத்தில் முன்னேற்றம் மற்றும் மகத்துவத்தின் நன்கு அறியப்பட்ட அடையாளங்களாக (அதாவது அறிவு, ஞானம், தைரியம், வள்ளல் குணம், ஆற்றல் மற்றும் செல்வாக்கு) கருதப்பட்டு வந்ததோ அவை தற்போதும் நிலை பெற்றுள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேலும் அறியாமை காலத்தில் இந்த பண்புகளின் அடிப்படையில் பெரியவர்களாகக் கருதப்பட்டவர்கள் தற்போதும் அவர்கள் இஸ்லாத்திலும் பெரியவர்களாகவே கருதப்படுவார்கள். ஆனால் நிபந்தனை என்னவென்றால், மார்க்க அறிவு மற்றும் சுய நன்மையை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கூறினார்கள்:

மக்களே! உங்கள் மனைவிகள் மீது உங்களுக்கு சில உரிமைகள் உள்ளன. உங்கள் மனைவிகளுக்கு உங்கள் மீது சில உரிமைகள் உள்ளன. அவர்கள் மீதான உங்கள் உரிமை என்னவென்றால், அவர்கள் கற்பை பாதுகாத்தவாறு வாழ வேண்டும். உங்களின் தகுதிக்கு ஏற்ப அவர்களின் உணவு மற்றும் உடைகளை நிர்வகிப்பது; அவர்கள் மீது உள்ள உங்களின் கடமையாகும். மேலும் நினைவில் கொள்ளுங்கள் ; உங்கள் மனைவிமார்களுடன் எப்போதும் நல்லமுறையில் நடந்து கொள்ளுங்கள். ஏனெனில், அல்லாஹ் அவர்களை உங்களிடம் அமானிதமாக ஒப்படைத்துள்ளான். நீங்கள் அவர்களை மணந்தபோது, இறைவனை அவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பவராக ஆக்கி, இறைசட்டத்தின் கீழ் அவர்களை உங்கள் வீட்டிற்கு அழைத்து வந்துள்ளீர்கள். (எனவே இறைவனின் உத்தரவாதத்தை அவமதிக்காதீர்கள். மேலும் எப்போதும் பெண்களின் உரிமைகளை கவனத்தில் கொள்ளுங்கள்)

மேலும் கூறியதாவது: மக்களே! ஒவ்வொரு முஸ்லிமும் மற்றொரு முஸ்லிமின் சகோதரர் ஆவார், நீங்கள் அனைவரும் ஒரே அந்தஸ்தில் உள்ளீர்கள். மனிதர்களாகிய நீங்கள் அனைவரும், எந்த நாட்டை சார்ந்தவராக இருந்தாலும் சரி ; எந்த அந்தஸ்தில் இருந்தாலும் சரி ; மனிதன் என்ற அடிப்படையில் நீங்கள் அனைவரும் ஒரே நிலையில் உள்ளீர்கள் என்று கூறியவாறு அன்னார் (ஸல்) தன்னுடைய இரு கைகளையும் உயர்த்தி, இரு கைகளின் விரல்களையும் இணைத்து, இந்த இரண்டு கைகளின் விரல்களும் ஒன்றோடு ஒன்றாக இணைந்து சமமாக இருப்பது போன்று மனித இனமாகிய நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சமமானவர்களே ; உங்களுக்குள் ஒருவரையொருவர் மேன்மைப்படுத்த எந்தவோர் உரிமையும் இல்லை ; நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரர்களைப் போன்றவர்கள் ஆவீர்கள்.

மேலும் கூறியதாவது: இது எந்த மாதம் என்பதை நீங்கள் அறிவீர்களா? இது எந்த பகுதி என்பதை நீங்கள் அறிவீர்களா? இது என்ன நாள் என்பதை நீங்கள் அறிவீர்களா? மக்கள் ஆம்! என்றார்கள். இது புனிதமான மாதம்; இது புனிதமான பகுதி ; இது ஹஜ்ஜிக்குரிய நாள்; ஒவ்வொரு பதிலுக்கும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த மாதம் எவ்வாறு புனிதமானதோ; அவ்வாறு இந்த பகுதி புனிதமானது ; எவ்வாறு இந்த நாள் புனிதமானதோ; அதே போன்று எல்லாம் வல்ல அல்லாஹ்வும் ஒவ்வொரு மனிதனின் உயிர், உடைமை, கண்ணியத்தையும் புனிதமானதாக ஆக்கியுள்ளான். இந்த கட்டளையானது இன்று மட்டுமல்ல ; நாளைக்கு மட்டும் அல்ல ; மாறாக நீங்கள் இறைவனை சந்திக்கின்ற நாள் வரை இருக்கும்.

மேலும் கூறியதாவது: நான் இன்று உங்களுக்கு கூறிய இந்த விஷயங்களை உலகின் மூலை முடுக்கு வரை எட்ட வையுங்கள்; ஏனெனில், இன்று என்னிடம் கேட்கின்ற மக்களை விட என்னிடம் கேட்காத அந்த மக்கள் இதனைக் கேட்டு சிறந்த முறையில் அமல் செய்யக் கூடியவர்களாக இருக்கலாம். (புகாரி, கிதாபுல் மகாஸி, அத்தியாயம் ஹஜ்ஜத்துல் விதா)

பல அறிவிப்புகளின் மூலமாகவும் பல சொற்பொழிவுகளின் மூலமாகவும் இந்த உரைகள் நம் வரை வந்தடைந்துள்ளது. ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வந்துள்ளது. பெருமானார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது எந்த மாதம்? என கேட்டபோது, அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரே நன்கு அறிவார்கள் என ஸஹாபிகள் கூறினார்கள். மேலும் நாங்கள் இந்த மாதத்திற்கு வேறு ஏதாவது பெயரும் இருக்குமோ என்று எண்ணினோம். ஆனால் அதற்கு அன்னார் (ஸல்) சுயமே இது கண்ணியத்திற்குரிய மாதமாகும் என்று பதில் அளித்து விட்டார்கள். எவ்வாறு இருப்பினும், பலதரப்பட்ட கருத்துக்களின் மூலமாக இந்த வரலாற்று

முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க உரையில் மனித இனத்தின் கருணையாளர் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் எந்த முக்கியமான மற்றும் அடிப்படையான விஷயங்கள் தொடர்பாக வழிகாட்டல்களை எட்ட வைத்து கொண்டே செல்ல வேண்டும் என்ற கட்டளையை வழங்கி உள்ளார்களோ அந்த வழிகாட்டல்கள் அந்த காலத்திற்கோ அல்லது ஏதோ ஒரு பகுதிக்கு மட்டுமோ உரித்தானது அல்ல ; மாறாக இறுதி நாள் வரை தோன்றக் கூடிய சந்ததிகளுக்கான வழிகாட்டல் ஆகும். அதனுடைய சுருக்கம் இதுவாகும்.

1) எல்லாவற்றிற்கும் முதலாக அனைத்து மனித இனமும் அனைத்து மனிதர்களும் ஒரே இனத்திலிருந்து படைக்கப்பட்டுள்ளார்கள் என்ற இந்த அடிப்படை விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். இவர்கள் ஒரே தந்தையின் சந்ததிகள் மற்றும் ஒரே மரத்தின் கிளைகள் ஆவார்கள். எனவே அனைத்து மனித இனமும் மனிதன் என்ற அடிப்படையில் சமமானவர்களே.

2) இந்த ஒருமைப்பாட்டின் நிலை இருந்தும் கூட இது சாத்தியமாகும். பூமியிலிருந்து பல கனிமங்கள் வெளியாகின்றன; உதாரணமாக நிலக்கரியும் வெளிவருகின்றது. இரும்பும் வருகிறது. பித்தளையும் வருகிறது. தங்கமும் வருகிறது. அதேபோன்றுதான் மனிதர்களிலும் அவர்களின் அறிவாலும், ஆற்றலாலும், சிந்தனையாலும், திறனாலும், வீரத்தாலும் பல பண்புகள் மற்றும் சிறப்பம்சங்கள் அவர்களிடமிருந்து வெளிப்படுகின்றன. ஆனால் அந்த திறமைகள் மற்றும் வேறுபாடுகளின் காரணமாக எந்த ஒரு சமுதாயத்தையோ அல்லது ஒரு கோத்திரத்தையோ அல்லது ஒரு நபரையோ வேறு சமுதாயத்துடனோ அல்லது கோத்திரத்துடனோ அல்லது அந்த நபருடனோ எந்த ஒரு காரணமும் இன்றி சிறந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு காட்டவோ அல்லது தற்பெருமை மேற்கொள்ளவோ கூடாது.

3) முஸ்லிம்கள் ஒரே நபியின் உம்மத் ஆவார்கள். மேலும் ஒரே தூதுவத்தின் அரவணைப்பின் தொடர்புடையவர்களாக இருக்கின்ற காரணத்தினால் ஒரே ஆன்மிக தந்தையின் பிள்ளைகளாகவும் அவர்கள் ஒருவர் மற்றவரின் சகோதரர்களாகவும் இருக்க வேண்டும். எவ்வாறு திருக்குர்ஆனில் எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறானோ அதேபோன்று,

إِنَّمَا الْمُؤْمِنُونَ إِخْوَةٌ

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். (49: 11)

4) சமுதாயத்தில் சில பலவீனமான மற்றும் ஏழையான மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் செல்வந்தர்கள் மற்றும் அமீர்மார்களுக்கு தொண்டு செய்யும் நோக்கில் பணிபுரிகின்றனர் அல்லது காடுகளில் பின்தங்கிய சமுதாயங்களின் பல நபர்கள் வெற்றி பெற்ற சமுதாயத்தின் ஆதிக்கத்தின் கீழ் வந்து விடுகிறார்கள். அவர்கள் தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட கட்டளைகளை பிறப்பித்துள்ளார்கள் என்றால், இன்றைய நாகரீக உலகில் அதை மேம்படுத்துவது மிகவும் வியக்கத்தக்கதாக காணவும்படுகின்றது. அவ்வாறே பேசப்படுகிறது. அந்த கட்டளையில் அடிமைகள் மற்றும் கைதிகளை எஜமானருக்கு நிகராக ஒப்பிட்டு கூறியுள்ளார்கள். ஏனெனில், அடிமை மற்றும் கைதியும் மனிதர்கள் தான் எனவே அவர்களின் உணவு உடையை கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் அவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்ட பணியை அவரிடம் இருந்து பெறக் கூடாது என வலியுறுத்தி கூறியுள்ளார்கள்.

5) ஆண்கள் மற்றும் பெண்களின் சமத்துவமானது இன்றைய நாட்களில் மிகப் பெரிய சர்ச்சையாக இருக்கின்றது. மேலும் ஒவ்வொரு நாளும் இஸ்லாத்தின் மீது இவ்வாறு ஆட்சேபனை செய்யப்படுகிறது. இஸ்லாம் பெண்களை, ஆண்களை விட குறைவாக எண்ணி அவர்களின் சுதந்திரத்தை பறித்து விட்டது. மேலும் திரைக்குள் அவர்களை வீட்டிலேயே கைதிகளாக ஆக்கி வைத்துள்ளது போன்ற ஆட்சேபனைகள், பெருமானார் (ஸல்) அவர்களின் உரிமையை செலுத்துதல் தொடர்பாக குறிப்பாக வலியுறுத்தி கூறியுள்ளார்கள். மேலும் திருக்குர்ஆனில் ஆண்கள் மற்றும் பெண்களின் படைப்பை வேறுபடுத்தியவாறு எந்த அளவிற்கு பெண்களுக்கு கண்ணியம் அளித்து மேலும் அவர்களுடைய உரிமைகள், உணர்வுகள் மற்றும் விருப்பங்களை பாதுகாத்துள்ளது என்றால் உலகிலுள்ள வேறு எந்த சமுதாயமும் எந்த மார்க்கமும் அதற்கான உதாரணத்தை முன்வைக்க முடியாது. இது ஒரு நிலையான மற்றும் நிரந்தரமான உரையாகும். அதை விரிவாக எடுத்துக் கூறுவதற்கான இது நேரமும் இல்லை. அதற்கான சந்தர்ப்பமும் இல்லை.

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! உண்மையான விஷயம் என்னவென்றால், மனித சமத்துவத்தை நிலை பெறச் செய்வதற்கான வாதமோ செய்யப்படுகின்றது தான். ஆனால், எந்த விஷயத்தில் சமத்துவத்தை நிலை பெறச் செய்ய வேண்டும்? என்று பார்க்கப்படுவதில்லை. எதுவரை மனிதநேயம் மற்றும் மனிதத்துவத்தின் தொடர்பு இருக்கின்றதோ அதன் அடிப்படையில் அனைத்து மனிதர்களும் சமமானவர்களே; ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு கண்கள் இரண்டு காதுகள் இரண்டு கைகள் இரண்டு கால்கள், நாக்கு, மூக்கு, உள்ளம், மூளை போன்ற இவை அனைத்தும் மனிதர்களுக்கு உண்மையான படைப்பாளனாகிய இறைவன் வழங்கியதாகும். இறைவன் நாடியவர்களை தவிர அவர்களில் சில நபர்கள் பலவீனமானவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், இந்த மனிதர்களுக்கான உரிமைகளை செலுத்துவதில் சமத்துவத்தை நிலை பெறச் செய்வது அடிப்படையான பொறுப்பாகும். இது தொடர்பாக நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், மனித உரிமைகள் இரண்டு வகைப்படும்;

1) ஒன்று அரசாங்கத்தின் மீதுள்ள பொறுப்புகளின் உரிமைகள் ஆகும். அது தொடர்பாக எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

إِنَّ لَكَ أَلَّا تَجُوعَ فِيهَا وَلَا تَعْرَىٰ ۝ وَأَنَّكَ لَا تَظْمَأُ فِيهَا وَلَا تَضْحَىٰ

அமைதி நிறைந்த சமூகத்திற்கான அடையாளம் என்னவென்றால், நிச்சயமாக மனிதனே இதில் நீர் பசித்தவராகவும், ஆடையற்றவராகவும் இருக்கலாகாது. (என்பது உமக்கு விதிக்கப்பட்டுள்ளது).

மேலும் இதில் நீர் தாகமுடையவராகவும், வெயிலில் காய்பவராகவும் இருக்கலாகாது. (தாஹா 20 : 119, 120)

ஆக, ஒவ்வொரு அரசாங்கத்தின் அடிப்படை கடமை என்னவென்றால், நாடு மற்றும் சமுதாயத்தின் எந்தவொரு அடிப்படை தேவையின் காரணமாக துன்பங்களுக்கு ஆளாகக் கூடாது என்ற இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறே நீதி, நியாயம், நேர்மையை நிலைநாட்டுதல் மற்றும் தேசிய அளவிலான பதவிகளில் திறமையற்றவர்களை நியமித்தல் மற்றும் கட்டாய வரிகளின் மூலம் வருகின்ற அந்த செல்வங்களை உரிய முறையில் விநியோகிப்பதற்கான ஏற்பாடு செய்தல் போன்ற இவை அனைத்தும் அரசாங்கத்தின் கடமைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

2) இரண்டாவது உரிமைகளானது எப்படிப்பட்ட உரிமைகள் என்றால் அது உடல் சக்திகள் மற்றும் மன வலிமை போன்ற இயல்பான அல்லது இயற்கையான வடிவத்தில் பெறப்பட்டவை ஆகும். அல்லது அவை தனிப்பட்ட முயற்சி, தனிப்பட்ட கடின உழைப்பு மற்றும் விடா முயற்சியின் விளைவாக கிடைக்கின்றன.

இஸ்லாம் இவ்வாறான தனிமனித உரிமைகளிலும் தலையிட்டு பல்வேறு மக்கள் மற்றும் பல்வேறு தரப்பினர்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை களைந்து சமத்துவத்தை நிலைநாட்ட முயற்சித்துள்ளது. ஆனால் கம்யூனிஸத்தின் அமைப்பைப் போன்று நிர்பந்தப்படுத்தி அனைத்து வேறுபாடுகளையும் ஒரே மூச்சில் அழிக்கும் முறையை அது மேற்கொள்ளவில்லை. அதன் காரணமாக தனிப்பட்ட திறன்கள் மற்றும் திறமைகள் முடக்கப்பட வேண்டும். மேலும் இதுபோன்ற வேறுபாடுகளை அழிப்பதும் சாத்தியமில்லாதது என்பதே உண்மை. உதாரணமாக உடல் ஆற்றல்களில் உள்ள வேறுபாட்டை யாரால் அழிக்க முடியும்? மன வலிமைகளின் வேறுபாட்டை யாரால் அழிக்க முடியும்? ஆம்! நிச்சயமாக ஒவ்வொரு மனிதனின் தனித்துவத்தைப் பேணுகையில், ஒரே பாலினத்தைச் சேர்ந்த சகோதரர்களுக்காக அர்ப்பணித்தல் மற்றும் தியாகத்தின் உணர்வை வெளிப்படுத்தலாம். அதற்காக இஸ்லாம் அறிவுள்ள வழிமுறைகளை கூறியுள்ளது. அவற்றைப் பின்பற்றுதலின் மூலம் தனிமனிதத் திறன்களை வீணாக்காமல் சமுதாயத்தில் ஒட்டு மொத்த மகிழ்ச்சியின் சமத்துவத்தை நிலைபெறச் செய்ய முடியும். தற்போது நான் இஸ்லாமிய சமத்துவத்தின் போதனைகளின் அடிப்படையில் நேரத்தை கருத்தில் கொண்டவாறு பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலிருந்து சில உதாரணங்களை சமர்ப்பிக்கின்றேன்.

மனித சமுதாயத்தில் சமத்துவத்தையும், சமநிலையையும் நிலை நாட்டுகின்றோம் என்று மார்தட்டிக் கூறுபவர்களும் இதை அறிந்திருப்பார்கள். இன்றைய நாகரீக சமூகத்திலும், ஏழைகளும் வறியவர்களும் மிகுந்த பலவீனமானவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும் கருதப்படுகிறார்கள். எந்த ஒரு மனிதனும் அவர்களை அருகில் அமர வைக்கவோ அல்லது அவர்களுடன்

அமர்வதையோ விரும்புவதில்லை. அவர்களுடன் நடந்து செல்வதைக் கூட அவமானமாகக் கருதுகின்றான். ஆனால் நமது மனிதகுலத்தின் கருணையாளராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமையோ தனித்துவமானது. அல்லாஹ்வே! என்னை ஏழையாகவே வாழ வைப்பாயாக!; மேலும் ஏழ்மையின் நிலையில் ஏழைகளின் சமூகத்திலேயே என்னை உயர்த்துவாயாக! என்று அன்னார் (ஸல்) அதிகமாக துஆ செய்தவராக இருந்தார்கள். (திர்மிதி)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஸாஹிர் என்ற கிராமவாசி ஒருவர், தோற்றத்தில் மிகவும் ஏழ்மையாகவும், அழகில் குறைவாகவும் காணப்பட்டார். ஒருமுறை அவர் வியர்வையால் முழுவதும் நனைந்தவாறு தனது பொருட்களை சந்தையில் விற்றுக் கொண்டிருந்தார். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு பின்னால் சென்று அவருடைய கண்களின் மீது தன்னுடைய கையை வைத்தார்கள். அன்னாரின் கை தன் மேல் பட்டதை வைத்தே இது எனது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்று அவர் அறிந்து கொண்டார். பின்னர் அவர் மகிழ்ச்சியுடனும், அன்புடனும் புனித நபியின் அருளுக்குரிய உடலுடன் தனது முதுகை தேய்க்கத் தொடங்கினார். என்னுடைய இந்த அடிமையை யார் வாங்குவீர்கள்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவ்வாறு என்றால் அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் என்னை மிகவும் விலைமதிப்பற்ற பேரமாக காண்பீர்கள். என்னை யார் வாங்குவார்கள்? என்று அவர் கூறினார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: இல்லை ; இல்லை அல்லாஹ்வின் பார்வையில் நீங்கள் இழப்பிற்குரியவர் அல்ல ; இறைவனின் பார்வையில் உங்களுக்கு அதிக மதிப்பும் வெகுமதியும் இருக்கின்றது. (முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல், தொகுதி 3, பக்கம் 11)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏழைகளையும், வறியவர்களையும் விருந்துக்கு அழைக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார்கள். மேலும் அன்னார் (ஸல்) இவ்வாறு கூறியுள்ளார்கள்:

ஏழைகளை விட்டு விட்டு, செல்வந்தர்கள் மட்டுமே அழைக்கப்படும் விருந்து உணவே உணவுகளில் மிகத் தீய (விருந்)தாகும். (ஸஹீஹ் புகாரி)

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் செய்தபோது, அந்த செல்வ சீமாட்டி தன்னுடைய அனைத்து செல்வங்களையும், அடிமைகளையும் அன்னாரின் சேவையில் அர்ப்பணித்து விட்டார்கள். அன்னார் (ஸல்) அந்த அனைத்து அடிமைகளையும் விடுதலை செய்து விட்டார்கள். மேலும் அந்த அடிமைகளில் ஒரு திறமை வாய்ந்த அடிமையை விடுதலை செய்து தன்னுடைய வளர்ப்பு மகனாக ஆக்கிக் கொண்டார்கள். மேலும் அந்த அடிமை ஸைத் பின் முஹம்மது என்று அழைக்கப்பட்டு வந்தார். ஆனால், எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த சடங்கு சம்பிரதாயத்தை முடிவுக்கு கொண்டு வரக் கூடிய மற்றும் வளர்ப்பு குழந்தைகளை அவர்களுடைய தந்தையுடன் ஒப்பிட்டே அழைக்க வேண்டும் என்ற கட்டளையை வழங்கினான். அல்லாஹ் கூறினான்:

உங்கள் வளர்ப்பு மகன்களை (உண்மையில்) உங்கள் மகன்களாக அவன் ஆக்கவுமில்லை. நீங்கள் (வளர்ப்பு பிள்ளைகளான) அவர்களை அவர்களின தந்தைகளின் பெயர்களை (இணைத்துக்) கூறி அழையுங்கள். இதுவே அல்லாஹ்விடத்தில் மிகவும் நேர்மையானது. (33: 5,6)

அந்த அடிமை இதன் பிறகு ஸைத் பின் ஹாரிஸா என்று அழைக்கப்பட்டு வந்தார். ஆனால் அவர் தன்னுடைய பெற்றோர்களுடன் வீட்டிற்கு திரும்பிச் செல்வதற்கு பகரமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வீட்டில் இருப்பதையே விரும்பினார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அந்த விடுதலை செய்யப்பட்ட அடிமையுடன் வாழ்நாள் முழுவதும் அளவில்லா அன்பு, நேசம் மற்றும் கருணையுடன் நடந்து கொண்டார்கள்.

இதுமட்டுமின்றி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸைதின் திறமைகள் மற்றும் தகுதியை கருத்தில் கொண்டவாறு பல இராணுவப் படைகளுக்கு அவரை அமீராக நியமித்தார்கள். மேலும், ஹஸ்ரத் ஸைதின் மரணத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸைதின் வாலிப வயதுடைய மகனான உஸாமாவை எந்த அளவிற்கு கௌரவித்தார்கள் என்றால், தன்னுடைய வாழ்நாளின் இறுதி நாட்களில் பெரிய, பெரிய கண்ணியமிக்க ஸஹாபிகளை கொண்ட ஒரு போர் படையை தயார் செய்தார்கள். அந்த போர் படைக்கு உஸாமாவை தளபதியாக நியமித்தார்கள்.

எனவே மனிதநேயத்திற்கான கண்ணியம் மற்றும் திறனை அடிப்படையாகக் கொண்ட சேவைகளை வழங்குவதற்கான உண்மையான நடைமுறையானது நேசம் மற்றும் சமூகத்தின் பலவீனமான மற்றும் பின்தங்கிய பிரிவினரை நாம் எவ்வாறு நடத்துகிறோம்? என்பதில் தான் இருக்கிறது. இந்த வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த அழகிய முன்மாதிரி முன்னேறும் சமுதாயங்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகும்.

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! மனித நேயம், மனிதத்துவம் என்பது ஓர் உயர்ந்த இடத்தில் வைத்து கௌரவிப்பதற்குரிய பொருளோ அல்லது வணக்கத்திற்குரிய ஒரு பொருளாக ஆக்குவதற்கு அது வெறும் சதை பிண்டங்களால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பிற்கான பெயர் அல்ல. மாறாக, மனிதநேயம் என்பது அதனுடைய உள்ளம், அறிவு, நினைவுகள், சிந்தனைகள், அதனுடைய புலன்கள், உணர்ச்சிகள் அதனின் ஆன்மா, அதனுடைய நல்லொழுக்கங்கள் மற்றும் ஆன்மிக நிலைகளின் பெயராகும். இந்த விலைமதிப்பில்லா உணர்வுகளுக்கு மதிப்பளித்து பாதுகாக்கப்பட்டு வந்தால் பிறகு மனிதநேயத்தின் கண்ணியம் நிலைநாட்டப்பட்டது என்று கூறலாம். இதன் அடிப்படையில் நாம் நம்முடைய எஜமானரும் பின்பற்றக் கூடியவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை மீது பார்வையை செலுத்தினோம் என்றால் எவ்வாறான வியக்கத்தக்க மற்றும் அதிசயமான முன்னுதாரணங்கள் காணக் கிடைக்கின்றன என்றால் அதற்கான உதாரணம் வேறு எங்கும் காணக் கிடைக்காது. ஒரு மனிதன் தன்னுடைய நண்பர்கள் உறவினர்கள் மற்றும் தன்னுடைய ஒத்த கருத்தை உடையவர்கள் தன்னுடைய மார்க்கத்தை சார்ந்த மக்களுடன் சமநிலையை மேற்கொள்கிறான் தான். ஆனால், அந்த மனிதன் பிற சமுதாய மக்களுடன் குறிப்பாக எதிரிகளுடனும், விரோதிகளுடனும் எவ்வாறு நடந்து கொள்கிறான்? என்பதை நாம் பார்க்க வேண்டும்.

ஒருமுறை மதீனாவில் ஓர் யூதனின் சடலம் எடுத்துக் கொண்டு செல்லப்பட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஜனாஸாவிற்கு கண்ணியமளித்தவாறு எழுந்து நின்றார்கள். அப்போது ஒருவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது ஓர் யூதனின் சடலம் தானே என்று கேட்டார். அதற்கு அன்னார் (ஸல்) அவர் மனிதர் இல்லையா? அவருடைய உடலில் உயிர் இருக்கவில்லையா? என கேட்டார்கள். (புகாரி, கிதாபுல் ஜனாயிஸ்)

ஹஸ்ரத் யஃலா பின் முர்ரஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பலமுறை பயணம் செய்துள்ளேன். அன்னார் (ஸல்)ஏதாவது ஒரு மனித சடலத்தைப் பார்த்தால் பின்னர் அங்கிருந்து அதை அடக்கம் செய்யாமல் கடந்து சென்றதாக ஒருபோதும் நான் அவர்களை கண்டதில்லை. மேலும் அன்னார் (ஸல்) இந்த சடலமானது முஸ்லிமுடையதா? அல்லது நிராகரிப்பாளருடையதா? என்று ஒருபோதும் கேட்டதில்லை. அதேபோன்று பத்ர் போரில் அழிவுக்குள்ளான எதிரிகளான இணை வைப்பாளர்களின் 24 தலைவர்களை பத்ர் மைதானத்தில் ஒரே குழியில் புதைத்தார்கள். அது கலீபே பத்ர் என்று அழைக்கப்படுகிறது. (புகாரி, கிதாபுல் மகாஸி)

மக்காவின் இணை வைப்பாளர்கள் உஹது போரின்போது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஹஸ்ரத் ஹம்ஸாவுடைய மூக்கு மற்றும் காதை வெட்டியவாறு அவர்களுடைய சடலத்தை துண்டு துண்டாக வெட்டி விட்டார்கள். இதுவே அவர்களுடைய (பழிதீர்க்கும்) வழக்கமாக இருந்தது. அவ்வாறே அஹ்ஸாப் போரின்போது, இணை வைப்பாளர்களின் தலைவன் நவ்ஃபல் பின் அப்துல்லாஹ் மக்ஸுமி கொல்லப்பட்ட போது, முஸ்லிம்களும் தற்போது நம்முடைய தலைவரின் உடலை துண்டு துண்டாக வெட்டி (முஸ்லா) செய்து விடுவார்கள் என்று அவர்கள் எண்ணியவாறு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பத்தாயிரம் திர்ஹமை எங்களிடம் இருந்து பெற்றுக் கொண்டு அதற்கு பகரமாக நவ்ஃபலின் சடலத்தை எங்களிடம் திருப்பிக் கொடுத்து விட வேண்டும் என்ற தூதுச் செய்தியை அனுப்பினார்கள். அதற்கு,நாங்கள் சடலங்களை ஒருபோதும் விற்பதில்லை; நீங்கள் உங்களுடைய சடலத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (தலாயிலுந் நுபுவதில் பைஹகி, தொகுப்பு 3,பக்கம் 32)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரி சமுதாயத்தின் கொலை செய்யப்பட்ட சடலங்களை துண்டு துண்டாக வெட்டி (முஸ்லா செய்து) பழி தீர்ப்பதிலிருந்தும் தடுத்துள்ளார்கள்.

ஆண், பெண் சமத்துவத்தைப் பொறுத்த வரையில், துரதிஷ்டவசமாக

(இதன் தொடர்ச்சி 19-ம் பக்கம்.....)

# ஜுமுஆ பேருரை

*பனூ நழீர் கோத்திரத்தின் தரப்பிலிருந்து ஹுஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு தீட்டிய திட்டப்பட்ட சதித் திட்டம் மற்றும் பனூ நஸீர் போருக்கான காரணிகளைப் பற்றிய விளக்கம்*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு யூதர்களின் இந்த தீய எண்ணத்தைக் குறித்து வஹீயின் மூலமாக அல்லாஹ் தகவல் கொடுத்து விட்டான். மேலும் அன்னார் (ஸல்) விரைவாக அங்கிருந்து எழுந்து சென்று விட்டார்கள்.

நீங்கள் பனூ நழீர் யூதர்களிடம் செல்லுங்கள்; அவர்களிடம் சென்று, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நகரத்தை விட்டு நீங்கள் வெளியேறி விடுங்கள் என்ற இந்த செய்தியுடன் உங்களிடத்தில் என்னை அன்னார் (ஸல்) அனுப்பி வைத்துள்ளார்கள் என்று கூறும்படி பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்.

ஸல்லாம் மிஷ்கம் என்பவர் ஹுய்யீ பின் அக்தபிடம் இவ்வாறு கூறினார்: இறைவன் மீது ஆணையாக! நீரும் அறிவீர்; அவர் அல்லாஹ்வின் தூதர் ஆவார் என்பதை உம்முடன் சேர்ந்து நாங்களும் அறிவோம். அவருடைய பண்புகள் நம்மிடம் இருக்கின்றன. அவரை நாம் பின்பற்றவில்லையென்றால் பின்னர் நாம் அவரிடம் பொறாமை கொள்கின்றோம் என்பதே காரணம் ஆகும்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 ஜூன் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **இஹ்ஸான் மாதம் 21ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி.....**

பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா சென்றடைந்த பிறகு ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை அழைத்து வர கூறினார்கள். அவர்கள் வந்த போது, பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு கட்டளையிட்டவாறு, நீங்கள் பனூ நழீர் யூதர்களிடம் செல்லுங்கள்; அவர்களிடம் சென்று, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நகரத்தை விட்டு நீங்கள் வெளியேறி விடுங்கள் என்ற இந்த செய்தியுடன் உங்களிடத்தில் என்னை அன்னார் (ஸல்) அனுப்பி வைத்துள்ளார்கள் என்று கூறுங்கள் என்றார்கள்.முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் பனூ நஸீர் சென்றடைந்த பிறகு அவர்களிடம் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களுக்காக ஒரு செய்தியை அனுப்பியுள்ளார்கள். ஆனால் நான் அதை கூறுவதற்கு முன்பு உங்களுக்கு ஒரு விஷயத்தை நினைவுப்படுத்த விரும்புகின்றேன். அதைப் பற்றி உங்கள் அனைவருக்கும் தெரியும் என்றார்கள். அந்த விஷயம் என்ன? என்று அவர்கள் கேட்டனர். முஹம்மத் பின் முஸ்லிமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: மூஸா (அலை) அவர்கள் மீது அல்லாஹ் இறக்கிய தவ்ராத்தை முன்னிறுத்தி நான் உங்களிடம் கேட்கிறேன். இஸ்லாத்திற்கு முன்பு நான் ஒருநாள் தவ்ராத்தை உங்களிடம் கொண்டு வந்தேன்; அதை உங்களுக்கு முன்னால் எடுத்து வைத்தேன்; அது உங்களுக்கு நினைவு இருக்கும்; உணவு உண்ண விரும்புகிறீர்கள் என்றால் உணவு கொடுக்கின்றோம். யூதனாக ஆக விரும்புகிறீர்கள் என்றால் உங்களை யூதராக ஆக்குகின்றோம் என்று நீங்கள் கூறினீர்கள். அதற்கு நான் உணவு கொடுத்தீர்கள் என்றால், உண்ணுகிறேன்; யூதராக ஆகச் சொல்கின்றீர்கள் என்றால் அது சாத்தியமில்லை என்றேன். பிறகு நீங்கள் ஒரு தட்டில் எனக்கு உணவு கொடுத்தீர்கள். நீங்கள் யூத மார்க்கத்தை ஏன் ஒப்புக் கொள்ள விரும்பவில்லை?; நீங்கள் இப்ராஹீமிய மார்க்கத்தை தேடிக் கொண்டிருக்கிறீர்களா? அபூ ஆமிர் துறவி இப்ராஹீமிய மார்க்கத்தை பின்பற்றக் கூடியவர் இல்லையா? எந்த நபியைப் பற்றி அடையாளங்கள் கூறப்பட்டுள்ளனவோ அந்த மார்க்கத்து நபி எங்களிடத்தில் வர இருக்கிறார். அவர் தொடர்பாக, அவர் இன்முகத்துடன் காணப்படுவார். அவருடைய கண்கள் சிவப்பு நிறச்சாயலைக் கொண்டிருக்கும். அவர் ஏமன் திசையில் இருந்து வருவார். ஒட்டகத்தில் பயணிப்பார்; தலையில் தலைப்பாகை அணிந்திருப்பார்; காய்ந்த ரொட்டித் துண்டுகளை (உண்பதை) போதுமானதாகக் கருதுவார்; அவருடைய கழுத்தில் வாள் தொங்கிக் கொண்டிருக்கும்; அவர் நுட்பமான, அறிவான விஷயங்களை பேசுவார் என்று அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன என்றார்கள். நீங்கள் அனைத்து அடையாளங்களையும் சரியாக கூறினீர்கள் ; நாங்கள் இவ்விஷயங்களை உம்முடன் பேசினோம். ஆனால், இந்த அடையாளங்கள் அவரிடம் அதாவது முஹம்மது (ஸல்) அவர்களிடத்தில் காணப்படவில்லை என்று யூதர்கள் கூறினார்கள். அப்போது முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் நான் நினைவுப்படுத்த விரும்பிய விஷயங்கள் இவைதான்; இப்பொழுது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியைக் கேளுங்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னை உங்களிடத்தில் அனுப்பி வைத்துள்ளார்கள். எதற்கென்றால், உங்களுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை நீங்கள் மோசடி செய்து முறித்துக் கொண்டீர்கள்; அம்ர் பின் ஜஹாஷ் வீட்டின் மேலே ஏறி பாறையை எறிய நினைத்தான். அதைக் குறித்து அல்லாஹ்வின் புறமிருந்து அவனுடைய நபிக்கு செய்தி கூறப்பட்டு விட்டது; நீங்கள் ஒப்பந்தத்தை முறித்து விட்டீர்கள் எனக் கூறினார்கள். இதைக் கேட்டு விட்டு அவர்களிடத்தில் பெரும் அமைதி நிலவியது. முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தியை எடுத்துக் கூறும்போது, நீங்கள் எனது நகரத்தை விட்டு வெளியேறி விடுங்கள்; உங்களுக்கு பத்து நாட்கள் அவகாசம் கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு யாரேனும் தென்பட்டால் நான் அவருடைய தலையை வெட்டி விடுவேன் என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்றார்.

அதைக் கேட்டு விட்டு யூதர்கள், அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு நபரிடமிருந்து இவ்வாறான விஷயத்தை நாங்கள் கேட்போம் என்று நாங்கள் கற்பனை கூட செய்து பார்க்கவில்லை. நீங்கள் எங்களுடைய நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவீர்களே என்று கூறினார். அதற்கு முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள், இப்பொழுது உள்ளங்கள் மாறிவிட்டன ; அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய கோத்திரத்தினரின் உள்ளங்களில் யூதர்கள் மீது நேசம் இருந்தது. ஆனால், இஸ்லாத்திற்கு பிறகு இப்பொழுது அதில் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் நேசம் இருக்கின்றது என்றார்கள். பிறகு யூதர்கள் நாட்டை துறந்து செல்ல ஆயத்தம் மேற்கொண்டார்கள்.

பனூ நஸீருக்கு சில நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே அவர்கள் நாட்டை விட்டு வெளியேற ஆயத்தம் மேற்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சவாரிகள் ஸீ ஜதர் என்ற மேய்ச்சல் நிலத்தில் இருந்தன. ஸீ ஜதர் என்பது குபாவுக்கு அருகில் மதீனாவில் இருந்து ஆறிலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள ஒரு மேய்ச்சல் நிலமாகும். அவர்கள் அவற்றை அங்கிருந்து திரும்பி கொண்டு செல்ல ஆரம்பித்தார்கள். அவர்கள் அஷ்ஜஃ கோத்திரத்திலிருந்து சில ஒட்டகங்களை கடனாக பெறவும் கோரிக்கை வைத்திருந்தார்கள்.

யூதர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அப்போது நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூல் ஒரு தந்திரத்தை மேற்கொண்டான். அந்த தந்திரத்தின் காரணமாக அவர்களின் எண்ணம் மாறிவிட்டது. வரலாற்றில் இதன் விபரம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; யூதர்கள் தம் ஆயத்தங்களில் மூழ்கியிருந்தார்கள். அப்போது அவர்களிடத்தில் அப்துல்லாஹ் பின் உபை உடைய செய்தி வந்தடைந்திருந்தது. சுவைது மற்றும் தாயிஸ் ஆகியோர் இந்த செய்தியை கொண்டு வந்திருந்தார்கள். அதில், நீங்கள் உங்களது வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம்; உங்களுடைய செல்வங்களை விடவும் வேண்டாம்;

உங்களுடைய கோட்டைகளில் இருந்து கொள்ளுங்கள்; என்னுடன் எனது சமுதாயம் மற்றும் இதர அரேபியர்களின் 2000 வீரர்கள் இருக்கின்றனர். அவர்கள் உங்களுடன் உங்களுடைய கோட்டைகளுக்குள் இருந்து விடுவார்கள். அவர்களுடைய கடைசி நபர் இறந்து போனாலும் போவாரே தவிர முஸ்லிம்கள் உங்களை வந்தடைய விட மாட்டார்கள்; பனூ குறைழாவும் உங்களுக்கு உதவி செய்வார்கள்; உங்களை இழிவுக்கு ஆளாக்க மாட்டார்கள். ; பனூ ஃகத்ஃபானிலிருந்து உங்களுடைய நட்புக் கோத்திரங்களும் உங்களுக்கு உதவி செய்வார்கள்; நீங்கள் இங்கிருந்து வெளியேறுவதற்கு கட்டாயத்திற்கு ஆளானால் நாங்களும் உங்களுடன் இங்கிருந்து புறப்பட்டு விடுவோம் என்று அப்துல்லாஹ் பின் உபை கூறுகிறார் என்று அந்த செய்தியில் கூறப்பட்டிருந்தது. நயவஞ்சகர்களுடைய இந்த தந்திரம் மற்றும் சூழ்ச்சியை குறித்து திருக்குர்ஆனிலும் அல்லாஹ் எடுத்துக் கூறியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

நயவஞ்சகர்களை நீர் பார்க்கவில்லையா? அவர்கள் வேதத்தையுடையவர்களைச் சேர்ந்த, நிராகரிக்கும் தங்கள் சகோதரர்களிடம்: நீங்கள் (மதீனாவிலிருந்து) வெளியேற்றப்பட்டால் நிச்சயமாக நாங்களும் உங்களுடன் வெளியேறி விடுவோம்; உங்களுக்கு எதிராக எவருக்கும் ஒருபோதும் நாங்கள் கீழ்ப்படிய மாட்டோம்; உங்களுடன் போர் செய்யப்பட்டால், நிச்சயமாக நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம் என்று கூறுகின்றனர்.

அப்துல்லாஹ் பன் உபைய் பனூ குறைழாவைச் சார்ந்த கஅப் பின் அஸது கர்ஸீ என்பவருக்கு, அவர் தம் தோழர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று செய்தி அனுப்பினான். அதற்கு, அவர் எங்களில் ஒருவர் கூட இந்த ஒப்பந்தத்தை முறிப்பதற்கு விருப்பப்படவில்லை என்று கூறி மறுத்து விட்டார். அப்துல்லாஹ் பின் உபைய் பனூ குறைழாவின் மீது நிராசை அடைந்து விட்டான். அவன் பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றும் பனூ நளீருக்கு இடையிலான விவகாரத்தில் கடினத்தை ஏற்படுத்த விரும்பினான். அவன் தொடர்ச்சியாக ஹுயய்க்கு செய்தியை அனுப்பி கொண்டிருந்தான். அதற்கு, நான் முஹம்மது (ஸல்) அவர்களிடம், நாங்கள் எங்களது செல்வங்களை விடமாட்டோம்; என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என்று இந்த செய்தியை அனுப்பப் போகிறேன் என்று ஹுயய் கூறினார். அப்துல்லாஹ் பின் உபையுடைய பேச்சில் ஹியய் விழுந்து விட்டார். ஸலாம் பின் மிஷ்கம் ஹுயய்யிடம், ஹுயயே! உமது நஃப்ஸ் உம்மை ஏமாற்றுகின்றது. உமது கருத்து முட்டாள்தனமாக கருதப்படும் என்று எனக்குத் தெரிந்திருந்தால் நான் எனக்கு கட்டுப்படுகின்ற யூதர்களுடன் உன்னை விட்டு சென்றிருப்பேன்; ஹுயய் நீ இவ்வாறு நடந்து கொள்ள வேண்டாம்; இறைவன் மீது ஆணையாக! அவர் அல்லாஹ்வின் உண்மையான தூதர் என்பதை நீயும் அறிவாய்; உன்னுடன் நாங்களும் அறிவோம். அவருடைய பண்புகளைக் குறித்த செய்தி நம்மிடத்தில் உள்ளன. நாம் அவரை பின்பற்றவில்லை என்றால் அதற்கான காரணம் நாம் அவர் மீது கொண்ட பொறாமையே ஆகும். ஏனெனில், பனூ ஹாரூனை விட்டு நுபுவ்வத் வெளியேறிவிட்டது. ஆகவே அவரால் வழங்கப்பட்ட அடைக்கலத்தை நாம் ஏற்றுக் கொள்வோம்; வாருங்கள். நாம் அவருடைய நகரத்தை விட்டு வெளியேறி விடுவோம். அவருடன் மோசடி செய்யும் விஷயத்திற்காக நீ என்னை எதிர்த்ததை நீயும் அறிவாய். நாம் இங்கிருந்து சென்று விட்டால் பிறகு கனிகள் காய்த்த பிறகு நாம் வருவோம்; அல்லது நம்மைச் சார்ந்த ஒருவர் தமது பழங்களிடத்தில் வந்து அதனை விற்பனை செய்வார் அல்லது அதனுடன் என்ன விரும்புகிறாரோ செய்து கொள்வார். பிறகு அவர் நம்மிடம் வந்துவிடுவார். ஆகவே நாம் நமது நகரத்தை விட்டு செல்லாதது போல்தான் இருக்கும். ஏனெனில், நமது செல்வங்கள் நமது கைகளில் இருக்கும். நமது சமுதாயத்தின் மீதான நமது பெருமை, நமது செல்வங்கள் மற்றும் செயல்களின் காரணமாக உள்ளது. செல்வங்கள் நமது கைகளை விட்டு சென்றுவிட்டால் பிறகு நாம் இழிவில் மற்ற யூதர்களைப் போன்று ஆகிவிடுவோம். ஆனால், முஹம்மது (ஸல்) அவர்கள் நம்மிடத்தில் வந்து அவர்கள் நம்முடைய கோட்டையை ஒருநாள் முற்றுகையிட்டாலும் கூட அவர்கள் இப்போது அனுப்பியுள்ள அந்த செய்தியை (அப்போது) ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அதை அவர்கள் நிராகரித்து விடுவார்கள் என்று கூறினார்.

அதற்கு ஹுயய் பின் அக்தப், முஹம்மது (ஸல்) அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தால்தானே அவர் நம்மை முற்றுகையிடுவார். இல்லையென்றால் அவர் திரும்பிச் சென்று விடுவார். அப்துல்லாஹ் பின் உபையும் எனக்கு வாக்குறுதி கொடுத்துள்ளதை நீர் பார்க்கவில்லையா? என்று கேட்டார். ஸலாம் பின் மிஷ்கம் கூறினார்: அப்துல்லாஹ் பின் உபையுடைய கூற்றுக்கு எந்த மதிப்பும் கிடையாது. அவன் உம்மை அழிவின் குழியில் தள்ள விரும்புகின்றான். எந்த அளவுக்கு என்றால் நீர் முஹம்மது (ஸல்) அவர்களுடன் போர் செய்ய வேண்டும் என்று அவன் விரும்புகின்றான்; அவனோ தம் வீட்டில் அமர்ந்து கொள்வான். உன்னை விட்டு விடுவான். அப்துல்லாஹ் பின் உபைய் கஅபிடம் உதவி கேட்டு பார்த்தான். ஆனால் கஅப் மறுத்து விட்டார். நான் உயிருடன் இருக்கும் வரை பனூ குறைழாவைச் சார்ந்த ஒருவர் கூட இந்த ஒப்பந்தத்தை முறிக்க மாட்டார் என்று கூறிவிட்டார். அப்துல்லாஹ் பின் உபைய் தன் நட்புக் கோத்திரமான பனூ கைனுக்கா உடனும் இவ்வாறு தான் வாக்குறுதி கொடுத்திருந்தான். அவர்களும் போர் புரிய முயற்சி செய்தார்கள். ஒப்பந்தத்தை முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டார்கள். தம்மைத்தாமே அவர்கள் கோட்டைக்குள் அடைத்துக் கொண்டனர். அவர்கள் அப்துல்லாஹ் பின் உபையுடைய உதவிக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவனோ அப்போது தனது வீட்டில் உட்கார்ந்து கொண்டான். முஹம்மது (ஸல்) அவர்கள் அவர்களை நோக்கி சென்றார்கள்; அவர்களை முற்றுகையிட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், அவர்கள் அன்னாருடைய கட்டளைக்கு கீழ்ப்படியும் கட்டாயத்திற்கு ஆளாகிவிட்டனர். அப்துல்லாஹ் பின் உபை தனது நட்புக் கோத்திரங்களுக்கு கூட உதவி செய்தது கிடையாது. நாமோ நமது வாள்களை கொண்டு அவ்ஸ் கோத்திர மக்களுக்காக அவனுடன் எல்லா போர்களிலும் பங்கெடுத்துள்ளோம். இப்பொழுது போர்கள் முடிவுக்கு வந்து விட்டன. முஹம்மது (ஸல்) அவர்கள் வருகை தந்து விட்டார்கள். அவற்றிற்கு இடையே தடையை ஏற்படுத்தி விட்டார்கள். அதாவது போர்களுக்கு இடையே, ;அப்துல்லாஹ் பின் உபைய் யூதனும் கிடையாது: முஸ்லிமும் கிடையாது. அவன் தன் சமுதாயத்து மார்க்கத்திலும் இல்லை. நாம் அவனது பேச்சை எவ்வாறு ஏற்றுக் கொள்வது என்று கேட்டார்.

அதற்கு, ஹுயய், நான் முஹம்மது (ஸல்) அவர்களுடன் பகைமை பாராட்டித்தான் வருவேன்; அவர்களுடன் போர் செய்துதான் வருவேன் என்று கூறினார்; அப்படியென்றால், நாம் நமது நிலத்தை விட்டு நாடு கடத்தப்பட்டு விடுவோம். நமது செல்வங்களும் நமது பெருமைகளும் முடிவுக்கு வந்துவிடும். நம்முடைய குழந்தைகள் கைதிகளாக்கப்பட்டு விடுவார்கள். நமது போராளிகள் கொல்லப்பட்டு விடுவார்கள் என்று ஸலாம் கூறினார். ஆனால், ஹுயய், பெருமானார் (ஸல்) அவர்களுடன் போர் செய்வதை தவிர மற்ற விஷயங்களை மறுத்து விட்டார்.

ஸாரூக் பின் அபீ ஹுகைக் என்ற ஒரு வயோதிக யூதர் இருந்தார். அவர் குறைமதியுடையவர் என்று பிரபல்யமடைந்திருந்தார். அவரும், ஹுயய்யே! நீர் தரித்திரம் பிடித்தவராக இருக்கிறீரே ; நீர் பனூ நளீரை நாசமாக்கி விடுவீர் என்று கூறினார். அதற்கு ஹுயய் கடும் கோபமுற்றார். பனூ நளீரின் சாதாரண நபர்கள் கூட பேசுகிறார்களே, எந்த அளவுக்கு என்றால் இந்த பைத்தியக்காரனும் மூடனும் கூட என் மீது பழிபோடுகின்றான் என்று கூறினார். ஸாரூக் என்ற அந்த நபரை அவருடைய சகோதரர்கள் அடித்தார்கள். மேலும், ஹுயய்யிடம், நாங்கள் உங்களுடைய கட்டளைக்கு கீழ்படிகின்றோம்; நாங்கள் ஒருபோதும் உங்களை எதிர்க்க மாட்டோம் என்று கூறினார்கள். பிறகு ஹுயய் தம் சகோதரரான ஜத்யீ பின் அக்தபை தூதுவராக ஆக்கி அனுப்பி வைத்தார். முஸ்லிம்களின் தலைவரிடம் சென்று, நாங்கள் இங்கிருந்து செல்ல மாட்டோம்; என்ன செய்ய முடியுமோ? செய்து கொள்ளுங்கள் என்று கூறுமாறு செய்தி அனுப்பி வைத்தார். ஜத்யீ மதீனா சென்றடைந்து ஹுயய் உடைய செய்தியை கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுடன் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் இந்த விஷயத்தை கேட்டபோது, உரத்த குரலில் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். முஸ்லிம்களும் உரத்த குரலில் தக்பீர் முழங்கினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்கள் போர் அறிவிப்பை செய்து விட்டார்கள் என்று . கூறினார்கள்.

பனூ நளீருடைய இந்த நடவடிக்கைகள் மற்றும் போர் அறிவிப்புக்கு பதிலளிக்கும் விதமாக பனூ நளீர் மீது போர் தொடுக்குமாறு பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். ஸஹாபிகள் அப்போதே ஆயத்தமாக தொடங்கினர். யூதர்களின் இதே தூதுவனான ஜத்யீ பின் அக்தப் உடனடியாக அப்துல்லாஹ் பின் உபையுடைய வீட்டை அடைந்தான். பெருமானார் (ஸல்) அவர்களுடன் நிகழ்ந்த கலந்துரையாடல் பற்றியும் சூழ்நிலைகள் பற்றியும் எடுத்துக் கூறினான். அப்போது அப்துல்லாஹ் பின் உபைய் தம் தோழர்களுடன் இனிய பேச்சுகளில் மூழ்கியிருந்தான். நீங்கள் செல்லுங்கள்;

நான் எனது நட்புக் கோத்திரங்களுக்கு செய்தி அனுப்புகிறேன்.; அவர்கள் உங்களுடன் கோட்டைக்குள் வந்து விடுவார்கள் என்று கூறினான். அப்போது அப்துல்லாஹ் பின் உபையுடைய மகனாகிய ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் போர்க் கவசத்தை அணிந்து கொண்டு தமது வாளை ஏந்திக் கொண்டு இஸ்லாமியப் படையில் இணைவதற்காக விரைந்து சென்று கொண்டிருப்பதை அந்த தூதுவன் கண்டபோது, ஆதரவு கிடைப்பதை விட்டு அவன் நிராசை அடைந்து போனான். அவன் உடனடியாக ஹுயய்யிடம், சென்று அவரிடம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறி முஹம்மது (ஸல்) அவர்கள் உம்முடைய விஷயத்தை கேட்டபோது, யூதர்கள் போர் அறிவிப்பு செய்து விட்டார்கள் என்று கூறினார்கள். பிறகு தக்பீர் முழக்கத்தை ஓங்கச் செய்து விட்டு ஆயத்தமாகும்படி அறிவிப்பு செய்தார்கள் என்று கூறினான்.

அப்பொழுதும் கூட அவனுக்கு நம்பிக்கை வரவில்லை. இது அவர்களுடைய போர் தந்திரமாக இருக்கும் என்று கூறினான். அப்துல்லாஹ் பின் உபைய் என்ன கூறினான்? என்று ஹுயய் கேட்டார். அப்துல்லாஹ் பின் உபைய்யுடன் நடந்த பேச்சுவார்த்தை குறித்து அவன் எடுத்துக் கூறினான். நான் எனது நட்புக் கோத்திரங்களுக்கு செய்தி அனுப்பி விடுகின்றேன். அவர்கள் உங்களுடன் கோட்டைகளுக்கு வந்து விடுவார்கள் என்று கூறினார் என்றான். ஜத்யீ என்ற அந்த தூதுவன் தமது சகோதரரைப் பார்த்து, சகோதரரே! அப்துல்லாஹ் பின உபையுடைய உதவியை குறித்து நான் நம்பிக்கை இழந்துள்ளேன் என்று கூறினான்.

அங்கோ பெருமானார் (ஸல்) அவர்கள் கோட்டைகளை முற்றுகையிடுவதற்காக ஸஹாபிகளுக்கு கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டிருந்தார்கள். இதை குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

(பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்) முஹம்மது பின் மஸ்லமா (ரலி) என்ற அவ்ஸ் கோத்திரத்தின் ஒரு தலைவரை அழைத்து, நீங்கள் பனூ நளீரிடம் சென்று அவர்களுடன் இந்த விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துங்கள். ஏனெனில், அவர்கள் தங்களது விஷமத்தனத்தில் மிகவும் முன்னேறி விட்டனர். அவர்களின் கிளர்ச்சிகள் எல்லையை அடைந்து விட்டன. ஆகவே இப்பொழுது அவர்கள் மதீனாவில் இருப்பது நல்லதல்ல ; மதீனாவை விட்டு விட்டு வேறு எங்காவது சென்று குடியிருப்பது சிறந்ததாகும் என்று கூறுங்கள் என்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களுக்காக பத்து நாட்களுக்கான காலக்கெடுவை நிர்ணயித்தார்கள். முஹம்மது பின் மஸ்லமா, அவர்களிடத்தில் சென்றபோது அவர்கள் மிகவும் ஆணவத்தோடும் கர்வத்தோடும் முன்னால் வந்து பேசினர். நாங்கள் மதீனாவை விட்டு வெளியேறுவதற்கு ஆயத்தமாக இல்லை. நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ செய்து கொள்ளுங்கள் என்று முஹம்மது (ஸல்) அவர்களிடம் கூறிவிடுங்கள் என்றனர். அவர்களுடைய இந்த பதில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தபோது, அல்லாஹு அக்பர் என்று அன்னார் (ஸல்) கூறிவிட்டு, யூதர்களோ போருக்காக ஆயத்தமாக இருக்கிறார்கள் என்றார்கள். அதற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஆயத்தமாகும்படி முஸ்லிம்களுக்கு கட்டளையிட்டார்கள். ஸஹாபிகளின் ஒரு படையை அழைத்துக் கொண்டு பனூ நளீருக்கு எதிராக போர்க்களத்திற்கு புறப்பட்டார்கள்.

அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஆட்சியாளராக இருந்தார்கள். ஆட்சியாளரை கொலை செய்தல் என்ற அச்சுறுத்தும் திட்டத்தையும் இந்த மக்கள் செய்து விட்டார்கள். அவர்கள் இதற்காக வெட்கப்படாமல் ஆயுதங்கள் ஏந்தி போருக்கான அறிவிப்பும் செய்து விட்டார்கள். மதீனாவை ஒரு பெரும் போரிலிருந்து காப்பாற்றுதவதற்காகவும், மதீனாவை பாதுகாப்பதற்காகவும் அரசாங்கத்தின் கலகக்காரர்களாக இருந்த இந்த கிளர்ச்சியாளர்களை அடக்கி ஒடுக்க வேண்டியது அவசியமாக இருந்தது. ஆகவே அனைத்து முஸ்லிம்களும் ஒன்று கூடிய பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களுடன் புறப்பட்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அன்னார் (ஸல்) மதீனாவில் ஹஸ்ரத் இப்னு உம்மு மக்தூம் (ரலி) அவர்களை தம் பிரதிநிதியாக நியமித்தார்கள். ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) அவர்களுக்கு கூடாரத்தைக் கொடுத்து அதை பனூ நளீரின் கோட்டைகளுக்கு முன்னால் அமைக்குமாறு கூறினார்கள். அந்த கூடாரம் குறிப்பான மரக்கட்டைகளை கொண்டதாக இருந்தது. அது தோலினால் ஆனதாக இருந்தது என்றும் சிலர் கூறுகிறார்கள். ஹஸ்ரத் அலீ பின் அபூதாலிப் (ரலி) அவர்கள் போர்க் கொடியை பிடித்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) இஸ்லாமியப் படையுடன் முன்னேறினார்கள். எந்த அளவுக்கு என்றால், மாலை நேரத்தில் பனூ நளீர் உடைய குடியிருப்பை வந்தடைந்து முகாமிட்டார்கள். அங்கு திறந்த வெளியில் அஸர் தொழுகையை நிறைவேற்றினார்கள். இன்னொரு புறமோ, யூதர்கள் தம் கோட்டையை அடைத்துக் கொண்டு தம் வீடுகளில் இருந்து விட்டார்கள். அவர்கள் கோட்டைகளின் மேலே ஏறி அம்புகளையும், கற்களையும் எறிய ஆரம்பித்தார்கள். இஷா நேரமான போது பெருமானார் (ஸல்) அவர்கள் தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு 10 ஸஹாபிகளுடன் மதீனாவில் இருந்த தம் வீட்டுக்கு திரும்பினார்கள். அப்போது அன்னார் (ஸல்) போர்க் கவசம் அணிந்திருந்தார்கள். குதிரையில் சவாரி செய்து கொண்டிருந்தார்கள். படையின் அமீராக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை நியமித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அமீராக நியமித்ததாகவும் ஒரு கூற்று காணப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், முஸ்லிம்கள் யூதர்களை முற்றுகையிட்டவாறு, மீண்டும், மீண்டும் தக்பீர் முழங்கியவாறு இரவை கழித்தார்கள். எந்த அளவுக்கு என்றால், விடியலின் பிரகாசம் உதயமான போது ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஃபஜ்ர் பாங்கு கொடுத்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பத்து ஸஹாபிகளுடன் படை இருந்த இடத்திற்கு திரும்பி வந்தார்கள். அன்னார் (ஸல்) ஃபஜ்ர் தொழுகையை தொழ வைத்தார்கள். யூதர்களில் அஸ்வக் என்ற பெயருடைய ஒருவன், சில இடங்களில் அவனுடைய பெயர் கஸூல் என்றும் கூறப்படுகின்றது. இவன் சிறந்த வில்லாளியாக இருந்தான். அவனால் எறியப்படும் அம்பு வெகு தூரம் வரை செல்லும். அவன் பெருமானார் (ஸல்) அவர்களின் கூடாரத்தை குறிவைத்து அம்பெய்தான். அந்த அம்பு கூடாரத்தின் மீது விழுந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூடாரத்தை அங்கிருந்து அகற்றி அம்பெய்யக் கூடியவர்களை விட்டு தூரத்தில் அமைக்குமாறு கட்டளையிட்டார்கள்.

பிறகு இரவாகிவிட்டது. அப்துல்லாஹ் பின் உபைய் தானும் பனூ நளீரிடம் வரவில்லை ; அவனுடைய எந்தவொரு கூட்டாளியும் அவர்களிடத்தில் வரவில்லை. அவன் தன் வீட்டில் இருந்து கொண்டான். பனூ நளீர் அவனுடைய உதவியை விட்டு நிராசை அடைந்து விட்டனர். ஸலாம் பின் மிஷ்கமும், கினான் பின் சுவைராவும் ஹுயய்யை பார்த்து, நீ நினைத்துக் கொண்டிருந்த அப்துல்லாஹ் பின் உபையுடைய உதவி எங்கே போயிற்று? என்று கேட்டார்கள். இப்பொழுது நான் என்ன செய்வேன்? இந்த அழிவு நமக்காக விதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது என்று ஹுயய் கூறினார். அந்நாட்களில் ஒருநாள் இஷா நேரத்திற்கு அருகில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் படையில் தென்படவில்லை. மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அலீ (ரலி) அவர்கள் எங்கேயும் தென்படவில்லை என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் உங்களுடைய ஒரு வேலைக்காகவே சென்றுள்ளார் என்று கூறினார்கள். கொஞ்ச நேரத்திலேயே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அஸ்வக் என்ற அந்த நபருடைய தலையை வெட்டி கொண்டு வந்தார்கள். அவனுடைய அம்புதான் பெருமானார் (ஸல்) அவர்களுடைய கூடாரம் வரை வந்து விழுந்தது. அவன் முஸ்லிம்களுடைய ஏதேனும் ஒரு பெரிய தலைவரை கொல்வதற்காக புறப்பட்ட அந்த நேரத்திலேயே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தக்க சமயத்திற்காக காத்திருக்க ஆரம்பித்து விட்டார்கள். அவனுடன் ஒரு கூட்டம் இருந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவன் மீது தாக்குதல் நடத்தி அவனைக் கொன்று விட்டார்கள். அவனுடன் இருந்த மற்ற அனைவரும் ஓடி விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் பத்து நபர்களைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். அவர்களுள் ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) ஆகியோரும் இருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் அம்மக்களும் அஸ்வாக்குடன் இருந்தவர்களை பிடித்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைக் கண்டு ஓடி விட்டிருந்தார்கள். ஸஹாபிகளின் அந்தக் குழு அவர்கள் அனைவரையும் கொன்று விட்டது.

அந்த யூதர்கள் 10 பேரைக் கொண்டவர்களாக இருந்தார்கள் என்று சில ஆலிம்கள் எழுதியுள்ளார்கள். ஸஹாபிகள் அவர்களைக் கொன்று அவர்களின் தலைகளை கொண்டு வந்தார்கள். பிறகு அவை பல்வேறு கிணறுகளில் எறியப்பட்டன.

பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களின் தலைகளை பனூ கத்மா உடைய கிணறுகளில் எறியுமாறு கட்டளையிட்டார்கள் என்றும் ஒரு கூற்று காணப்படுகின்றது. மற்ற விபரங்கள் இன்ஷா அல்லாஹ் இனிவரும் காலத்தில் எடுத்துரைப்பேன்.

ஸஃப்களில் நிற்கும் போது தோளோடு தோள் சேர்த்து நிற்பதில்லை என்று எனக்கு ஒருவர் கூறினார். இப்போது கோவிட் உடைய காலகட்டம் போய் விட்டது. ஸஃப்பில் நிற்கும்போது தோளோடு தோள் சேர்த்து நிற்க வேண்டும்.

தமிழாக்கம்

மவ்லவி தாரிக் அஹ்மத்

* * * * *

## ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) ஆகியோரின் தூய வாழ்க்கை

(மதிப்பிற்குரிய ஸைனுத்தீன் ஸாஹிப் நாஸிம் தாருல் கஸா காதியான்)

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ
لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ أَمَّا بَعْدُ
فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ بِسْمِ
اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ وَالَّذِيْنَ مَعَهٗ أَشِدَّاءُ
عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُمْ تَرَاهُمْ رُكَّعًا
سُجَّدًا يَبْتَغُوْنَ فَضْلًا مِّنَ اللّٰهِ وَرِضْوَانًا

இந்த திருக்குர்ஆன் வசனத்தின் மொழியாக்கம் இவ்வாறு ஆகும்;

முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் அவருடன் இருக்கும் அந்த மக்களும் நிராகரிப்பாளர்களுக்கு மிகவும் கடுமையானவர்களாகவும் தங்களுக்கிடையில் அதிக இரக்கம் உள்ளவர்களாகவும் உள்ளனர். நீர் அவர்களை குனிந்தவர்களாகவும் சிரம் பணிந்தவர்களாகவும் காண்பீர். அவர்கள் அல்லாஹ்விடமிருந்தே அருளை மற்றும் திருப்தியை விரும்புகின்றனர்.

இந்த அருளுக்குரிய சந்தர்ப்பத்தில் எளியவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபி ஹஸ்ரத் உஸ்மான் கனீ (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபி ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துக் கூறுவேன். இன்ஷா அல்லாஹ்.

கண்ணியத்திற்குரியவர்களே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல் மற்றும் அழகிய தர்பிய்யத்தின் விளைவால் கண்ணியத்திற்குரிய நபித் தோழர்களிடம் எத்தகைய அசாதாரணமான ஆன்மிக நல்லொழுக்க, சமூக மற்றும் பண்பாட்டுப் புரட்சி ஏற்பட்டது என்றால் அதன் தன்மையை எடுத்துக் கூறும்போது ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) கூறுகிறார்கள்:

احیت اموات القرون بجلوۃ
ماذا یماثلك بهذا الشان

அதாவது நீர் நூற்றாண்டுகளாக மரணித்திருந்தவர்களை ஒரே பிரதிபலிப்பில் உயிர் கொடுத்து விட்டீர். இந்த மகத்துவத்தில் உமக்கு இணையானவர் எவர் உள்ளார்?

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தன் ஸஹாபிகளுக்கு எவ்வடிவில் தர்பிய்யத் வழங்கினார்கள் எனில் அவர்களைப் பற்றி ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறும்போது, ஆன்மிக வானத்தின் ஒளி வீசும் நட்சத்திரங்களோடு ஒப்புமை கொடுத்து இவ்வாறு கூறியுள்ளார்கள்:

صحابی کالنجوم بأیهم اقتدیتم اهتدیتم

அதாவது என் தோழர்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களில் எவரை நீங்கள் பின்பற்றினாலும் நேர்வழியைப் பெறுவீர்கள். ஸஹாபிகளின் மகத்துவம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

أن الصحابة كلهم كذكاء
قد نوروا وجه الورىٰ بضياء

அதாவது ஸஹாபிகள் அனைவரும் சூரியனைப் போன்றவர்கள். அவர்கள் தம் ஒளியால் படைப்பினங்களின் முகங்களை ஒளியூட்டி உள்ளார்கள்.

சகோதரர்களே! இந்த ஒளிமயமான நட்சத்திரங்களில் மகத்துவமான ஒரு நட்சத்திரம் ஸய்யிதுனா உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள்.

அன்னார் (ரலி) கிலாஃபத்தே ராஷிதாவின் மூன்றாவது தோற்றமாக இஸ்லாத்தின உயர்வுக்காக அசாதாரணமான பணிகளை சிறப்பாக நிறைவேற்றியவர்களாக இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்காக ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

رضی اللّٰه عنهٗ ورضوعنهٗ

அவர்கள் மீது அல்லாஹ் திருப்தி கொண்டான். அவர்களும் அவன் மீது திருப்தி கொண்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) குறைஷ் பனூ உமைய்யா கோத்திரத்தில் யானைப் படை சம்பவத்திலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி 575 -ல் மக்காவில் பிறந்தார்கள். அன்னாரின் தந்தை துணி வியாபாரி ஆக இருந்தார்கள். மிகவும் செல்வந்தராக இருந்தார்கள். சிறுவயதிலிருந்தே நன்மையின் பக்கம் ஈர்க்கப்பட்டவர்களாக அன்னாரின் இயல்பு இருந்தது. அன்னாரின் வயது 34, 35 ஆக இருக்கும் போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனின் கட்டளைக்கிணங்க நபித்துவ வாதம் செய்தார்கள்.

அன்னார் (ரலி) ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை, அவர்களின் மேலான நல்லொழுக்கம் காரணமாக மிக நல்ல மனிதராக கருதினார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு நட்பின் தொடர்பு இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்வதில் அனைவரையும் முந்திக் கொண்டார்கள். அந்நாட்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வியாபாரம் தொடர்பாக சிரியாவிற்கு சென்றிருந்தார்கள். திரும்பி வந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் பிற நண்பர்களுடன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களுக்கும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள அழைப்பு விடுத்தார்கள். எனவே ஒருவர் பின் ஒருவராக அனைவரும் பைஅத் செய்தனர். அவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அனைவரையும் விட முதலில் பைஅத் செய்தவராக இருந்தார்கள். நபித்துவத்தின் நான்காம் ஆண்டின் தொடக்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வெளிப்படையாக தப்லீஃக் செய்வதற்கு கட்டளையிட்டான். மேலும் மக்காவின் ஒவ்வொரு தெருவிலும் விரைவாக இஸ்லாம் பற்றிய சர்ச்சை எழுந்தது. அதன் விளைவாக மக்காவின் குறைஷிகள் எதிர்ப்பை தொடாங்கினர். மேலும் எவர்கள் முஸ்லிம்களாகிவிட்டனரோ அவர்களைத் தனிமைப்படுத்தி அநீதி இழைக்கத் தொடங்கினர். அன்னாரின் சிறிய தந்தை ஹகம் பின் ஆபிஆஸ் அன்னாரை கடுமையாக அடித்தார். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் செல்ல விடாமல் தடுப்பதற்காக அன்னாரின் கால்களில் சங்கிலியால் கட்டிப் போட்டார். அன்னார் பொறுமை மற்றும் சகிப்புத் தன்மையுடன் செயல்பட்டார்கள். மேலும் இந்த துன்பங்களை பொருட்படுத்தவில்லை. சில நாட்களுக்குப் பிறகு அன்னாரின் சிறிய தந்தை கோபத்தில் அன்னாரை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மிகவும் நல்லவராகவும், கண்ணியமானவராகவும் அழகான நல்ல ஒழுக்கமான இளைஞராகவும் இருந்தார்கள். மேலும் தன் குடும்பத்திலிருந்து விலக்கப்பட்டவராக இருந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் புதல்வி ருகய்யா (ரலி) அவர்களின் நிக்காஹ்வை உஸ்மான் (ரலி) அவர்களுடன் செய்து வைத்தார்கள்.

மக்காவில் குறைஷிய தலைவர்களின் திட்டங்களினால் முஸ்லிம்களுக்கு துன்பங்களின் தொடர் நாளுக்கு நாள் அதிகரித்தது. மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கும் கடுமையான ஆபத்து இருந்தது. இந்நிலையில் சில முஸ்லிம் ஆண்கள், பெண்களுக்கு ஹப்ஷாவின் பக்கம் ஹிஜ்ரத் செய்ய அனுமதி கிடைத்தது. அவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மற்றும் அவர்களின் மனைவி ஹஸ்ரத் ருகய்யா(ரலி) அவர்களும் இருந்தனர். அன்னார் (ரலி) அபிசீனியாவின் பக்கம் ஹிஜ்ரத் செய்து செல்லும்போது அவர்ளே அக்குழுவின் அமீராக இருந்தார்கள். அபிசீனியாவில் சிறிது காலம் தங்கியபோது, அன்னாருக்கு தப்லீஃக்கிற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இவ்வகையில் வெளிநாடுகளில் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் தப்லீஃக் செய்வதற்கு நல்வாய்ப்பை பெற்ற சில பாக்கியமானவர்களில் அவர்களும் இருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருவர், ஒருவராக இருவர் இருவராக மக்காவின் முஸ்லிம்களை யஸ்ரிப் (மதீனா) ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதி கொடுத்த போது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் தன் மனைவி ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்களை உடன் அழைத்துக் கொண்டு மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்று விட்டார்கள். மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத்துக்குப் பின் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவி ருகய்யா மரணமடைந்தார்கள். மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்

மற்றொரு மகளான ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களின் நிக்காஹ்வை அன்னாருடன் செய்து வைத்தார்கள். இவ்வாறாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரு புதல்விகள் உடனான நிக்காஹ்வின் காரணமாக அன்னார் (ரலி) துன்னூரைன் என்ற சுட்டுப் பெயரால் பிரபல்யமானார்கள்.

கண்ணியத்திற்குரியவர்களே! அரேபியாவில் அடிமை பேதம் தொன்றுதொட்டு இருந்து வந்தது. இஸ்லாம் அதற்கு தடை விதித்தது. அடிமையை விடுதலை செய்வதை பெரும் நன்மையாக ஆக்கியது. அறிவிப்புகளில் வருகிறது: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆயிரக்கணக்கான அடிமைகளை விடுவித்தார்கள். அன்னார் (ரலி) விலை கொடுத்து வாங்கி விடுதலை செய்யப்பட்ட அடிமை தென்படாத மதீனாவின் வீதிகள் ஏதுமில்லை. பிறகு இந்த நன்மையின் செயலைத் தொடர வேண்டும் என்பதற்காக எல்லா ஜூமுஆ நாளிலும் ஓர் அடிமையை விடுதலை செய்து வருவதை அன்னார் (ரலி) வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு சில அசாதாரணமான பொருள் தியாகம் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. மதீனா ஹிஜ்ரத்திற்கு பிறகு முஸ்லிம்களுக்கு மிகவும் இக்கட்டான காலமாக இருந்தது. எனவே அடிப்படை தேவைகைளில் அவசியமான ஒன்று குடிநீர் ஆக இருந்தது. ஒருநாள் முஸ்லிம்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஓர் யூதனுக்கு சொந்தமான நல்ல தண்ணீர் கிணற்றை வாங்கி முஸ்லிம்களுக்கு அர்ப்பணிக்குமாறு வலியுறுத்தினார்கள். இதற்கு ஏற்ப அன்னார் (ரலி) அந்தக் கிணற்றை வாங்கி முஸ்லிம்களுக்காக அர்ப்பணித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் பிற நபித் தோழர்கள் மதீனா வருகை தந்து ஆறு ஆண்டுகள் கழிந்திருந்தது. மக்கத்து நிராகரிப்பாளர்கள் தரப்பிலிருந்து ஹஜ் இவர்களுக்கு தடுக்கப்பட்டு விட்டது. இவ்வாறு சூழ்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் அருளுக்குரிய கனவை கண்டார்கள். அதாவது அன்னார் (ஸல்) 1400, 1500 ஸஹாபிகளுடன் கஅபா ஆலயத்தை வலம் வருவதாக கண்டார்கள். இந்த கனவுக்கு ஏற்ப 1400, 1500 தோழர்களுடன் அன்னார் ((ஸல்) கஅபாவை வலம் வர புறப்பட்டுச் சென்றார்கள். மக்காவிற்கு அருகில் ஹுதைபிய்யா எனும் இடத்தை சென்று சேர்ந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறைஷியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்தார்கள். இது ஹுதைபிய்யா உடன்படிக்கை என்ற பெயரில் இஸ்லாமிய வரலாற்றில் அறியப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மக்கத்து குறைஷிகளிடம் இஸ்லாத்தின் தூதுவராக அனுப்பி வைத்தார்கள். இஸ்லாத்தின் தூதுவர் என்ற வகையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹுதைபிய்யாவில் தொண்டாற்றியது அன்னாரின் வாழ்க்கையில் மிக முக்கிய சம்பவமாகும். மேலும் எதிர்கால விளைவுகளை கருத்தில் கொள்ளும் பொருட்டு இது ஒரு மிகப் பெரும் தொண்டு ஆகும்.

ஹுதைபிய்யா ஒப்பந்தத்தின் இரண்டு ஆண்டுக்குப் பின் இறைநியதி இந்த வடிவில் வெளிப்பட்டது. அதாவது ஹிஜ்ரி 8-ம் ஆண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 10000 ஸஹாபிகள் உடன் மகத்தான வெற்றிவாகையுடன் மக்காவில் நுழைந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் அவருடன் இருந்தார்கள். இஸ்லாம் பரவ பரவ முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்தது. மஸ்ஜித் நபவி போதுமானதாக இருக்கவில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் அதனை விரிவுபடுத்த திட்டமிட்டார்கள். மேலும் பள்ளியைச் சுற்றியுள்ள வீடுகளை விலைக்கு வாங்கி பள்ளியுடன் இணைக்க ஸஹாபிகளிடம் கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு பொருளாதார வசதி இருந்தது. மேலும் அவர்களிடம் பொருள் தியாகத்தின் ஆர்வம் மிக அதிக ஆர்வம் இருந்தது. அன்னார் (ரலி) 25, 30 ஆயிரம் திர்ஹமுக்கான ஏற்பாட்டை செய்தார்கள். நபவி பள்ளிக்கு அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளை, நிலங்களை விலைக்கு வாங்கி நபவி பள்ளியுடன் இணைத்தார்கள். அவர்களின் இந்த அர்ப்பணிப்பு மற்றும் மார்க்கத் தொண்டை மறுமை வரை வருகை தரவுள்ள சந்ததிகள் நினைவில் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போருக்கான பொருள் தியாகத் திட்டத்தை முன்வைத்தபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் ஆயிரம் ஒட்டகங்களைக் கொடுத்தார்கள். அவற்றில் நூறு ஒட்டகங்கள் உணவு தானியங்களை கொண்டவையாக இருந்தன. நூறு அல்லது 50 குதிரைகள் மற்றும் 10 ஆயிரம் தீனார் ரொக்கமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான அவையில் வைத்தார்கள். மேலும் போர்ப் படையின் மூன்றில் ஒரு பகுதியினருக்கான தேவையான அனைத்தையும் முன் வைத்தார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இந்த அசாதாரணமான பொருள் தியாகத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். இந்தப் போரில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இஸ்லாத்திற்கு ஏராளமான சேவை செய்வதற்கான பாக்கியம் கிடைத்தது. அவற்றில் முக்கியமான ஒரு தொண்டு திருக்குர்ஆனுக்கு நூல் வடிவம் அளித்ததாகும். அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் வஹீயை எழுதும் பணியில் இருந்தார்கள். அவர்களுக்கு வஹீயை எழுதுவது மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப வசனங்கள் மற்றும் அதிகாரங்களை வரிசைப்படுத்தும் பணி செய்வதற்கான சேவையின் வாய்ப்பு கிடைத்திருந்தது. மேலும் இந்த தொடர் முழு திருக்குர்ஆன் இறங்குதல் மற்றும் இறுதி வரிசை கிரந்தம் வரை தொடர்ந்திருந்தது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அவர்களுடன் கரங்களாக இருந்து தொண்டு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் பணிகளில் அன்னார் (ரலி) மிகவும் மதிப்பு மிக்க ஆலோசனைகளை வழங்கி வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்கு பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) இரண்டாவது கலீஃபா ஆனார்கள். அன்னார் (ரலி) ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு துறைகளை உருவாக்கிய போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் ஸதக்கா கணக்குகளை எழுதும் பணியை ஒப்படைத்தார்கள். அன்னார் (ரலி) கிலாஃபத்தின் அமீன் நம்பிக்கைக்குரியவர் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது 23 துல் ஹஜ்ஜா, 23 ஹிஜ்ரியில் கொலை முயற்சி தாக்குதல் தொடுக்கப்பட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிலாஃபத் தேர்தலுக்கான ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். அவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் (ரலி) அவர்களின் பெயர் முதலில் இருந்தது. தாக்குதலுக்கு நான்கு நாள் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் துல் ஹஜ்ஜா 27 அன்று மரணமடைந்தார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பெரும்பான்மையினரின் கருத்துக்கு ஏற்ப மூன்றாவது கலீஃபாவாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த ஆட்சி அமைப்பை விட்டுச் சென்றார்களோ அதனை அன்னார் (ரலி) தொடர்ந்தார்கள். எந்தவித குறிப்பான மாற்றமும் செய்யவில்லை என்றாலும், பிறகு அவசியத்திற்கு ஏற்ப அன்னார் (ரலி) சில ஆளுநர்களை மாற்றினார்கள். அன்னார் (ரலி) முழு இஸ்லாமிய உலகமும் ஜூமுஆ தொழுகையை நிறைவேற்றுவதில் சிறப்பான கவனத்தை செலுத்தினார்கள். மேலும் ஜூமுஆ தொழுகையை நிறைவேற்றுவதில் சிறப்பான கவனத்தை செலுத்தினார்கள். மேலும் ஜூமுஆ தொழுகைக்கு முன்னர் இரண்டாவது பாங்கு சொல்வதை அன்னார் (ரலி) ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் பல புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. விரிவான கட்டட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பொதுமக்களுக்கான பணிகள் நடந்தன. பல பப்ளிக் கட்டிடங்கள், வீதிகள், பாலங்கள், பயணியர் விடுதி, தங்கும் விடுதிகள் கட்டப்பட்டன.

கிலாஃபத் காலத்தில் எந்தப் பகுதிகள் வெற்றி கொள்ளப்பட்டனவோ அங்கு இராணுவ தளம் அமைக்கப்பட்டது. இதேபோன்று சமுதாயத்தின் மேய்ச்சல் நிலங்கள் விரிவுபடுத்தப்பட்டன. மேலும் மக்களுக்கு முன்பை விட அதிகமான வசதி வாய்ப்புகள் செய்து தரப்பட்டன.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் நாடு நாடாக வெற்றிவாகை கிடைக்கப் பெற்றன. மேலும் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைந்தார்கள். அந்த இஸ்லாமிய நாடுகளில் கிலாஃபத் மற்றும் தலைமைத்துவம் இரண்டையும் முற்றுபெறச் செய்ய மறைமுக திட்டத்தின் அடிப்படையில் ஏமனைச் சேர்ந்த மிகவும் கீழ்த்தரமான, மோசமான இயல்பைக் கொண்ட ஓர் யூதன் அப்துல்லாஹ் பின் ஸபாவின் தலைமையில் அபாயகரமான குழப்பம் தலை தூக்க ஆரம்பித்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத்தின் வடிவில் அந்த குழப்பங்களின் விளைவுகள் வெளிப்பட்டன.

ஷஹாதத்தின்போது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வயது 82 ஆக இருந்தது. அன்னார் (ரலி) மிகவும் இறையச்சம் உடையவராகவும், தீமையிலிருந்து தவிர்ந்திருப்பவராகவும் மற்றும் இறை நம்பிக்கை கொண்ட மனிதராகவும் இருந்தார்கள். அன்னாரின் முழு வாழ்வும் இஸ்லாத்தின் தொண்டு மற்றும் வணக்க வழிபாடுகளில் கழிந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தனிப்பட்ட அன்பு இருந்த அந்த நபித்தோழர்களில் ஒருவராக அன்னாரும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் வாழ்வில் பல தருணங்களில் அன்னாருடன் திருப்தி கொண்டதாக கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் இரண்டு மகள்கள் ஒருவர் பின் ஒருவராக அன்னாரின் திருமணத்தில் வந்ததின் காரணமாக துன்னூரைன் என்ற பட்டம் அன்னாருக்கு கிடைத்தது.

அன்னார் (ரலி) இஸ்லாத்தின் உயர்வுக்காகவும், திருக்குர்ஆன் வெளியீடு மற்றும் கிலாஃபத்தை நிலைநிறுத்துவதற்கு தமது செல்வம், உயிர், நேரம் மற்றும் கண்ணியம் ஆகிய அனைத்தையும் தியாகம் செய்தார்கள். மிகவும் நன்றி உணர்வுடன் இறை பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள். மேலும் குழப்பத்தின் போது ஆற்றல் மற்றும் வலிமை இருந்தும் அமைதியின் இளவரசராக இருந்து பொறுமையின் எவ்வாறான முன்னுதாரணத்தை காட்டினார்கள் என்றால், எதிர்கால சந்ததிகள் மறுமை வரை அன்னாரின் முன்னுதாரணத்திலிருந்து படிப்பினை பெற்று வருவார்கள். இன்ஷா அல்லாஹ்.

**ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் நற்குறிப்பு**

சொற்பொழிவின் இரண்டாவது பகுதியில் கம்பீரமான ஸஹாபி ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் தூய வாழ்க்கை தொடர்பாக சில விஷயங்களைக் கூறுவேன்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்தவர்களின் வரலாற்றைப் படிக்கும்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் அனைத்து பழக்க வழக்கங்களும், நல்ல குணங்களும் அனைத்து உயர்தரங்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபிகளிடம் இருந்தது என்று எவ்வித சந்தேகமின்றி தெரிய வருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கண்ணியத்திற்குரிய ஸஹாபி ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் தூய வாழ்க்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவங்களை எடுத்து வைக்கின்றேன்.

கண்ணியத்திற்குரிவர்களே, ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்கள் மதிப்பு மிக்க கௌரி குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் மலேர்கோட்லா வட்டாரத்தின் தலைவராவார்கள். அவர்களின் வம்சத்தில் பெயர் போனவரான ஷேக் சதர் ஜஹான் ஸாஹிப் இறை நெருக்கம் பெற்ற பெரியராக இருந்தார்கள். ஜலாலாபாத் சர்வாணி சமூகத் தலைவராக நெருக்கம் பெற்ற சான்றோராக இருந்தார்கள். ஜலாலாபாத் சர்வாணி சமூகத் தலைவராக இருந்தார்கள். அன்னாரின் தந்தை பெயர் நவாப் குலாம் முஹம்மது கான் ஸாஹிப் (ரலி) ஆகும்.

அன்னார் (ரலி) ஜனவரி 1870-ல் நவாப் பேகம் ஸாஹிபா அவர்களுக்கு மகனாகப் பிறந்தார்கள். அன்னார் தன் தாய்வழியில் முதலாம் நபராகவும், மற்ற சகோதரர்களில் மூன்றாவது நபராகவும் இருந்தார்கள். சிறு வயது முதல் அன்னாருக்கு மார்க்கத்தில் ஆர்வமும், ஈடுபாடும் உருவாகி இருந்தது. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் நேரடி தொடர்பு ஏற்படுவதற்கு முன் ஹஸ்ரத் நவாப் ஸஹாபி குடும்பத்தில் ஒரு கண்ணியமான நபரின் நல்ல தொடர்பு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் உருவாகி இருந்தது. இறுதியில் ஹுஸூர் (ஸல்) அவர்கள் மாலேர்கோட்லா வருகை புரிவதற்கு காரணமாக அமைந்தது.

1884-ல் ஹுஸூர் (அலை) அவர்கள் இந்த பயணத்தை மேற்கொண்டதற்கு காரணம் நவாப் இப்ராஹீம் அலீ கான் (ரலி) ஸாஹிப் அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யாவின் வெளியீட்டில் பங்கு எடுத்ததற்கும், மேலும் அவர்கள் நோய்வாய்ப்பட்ட செய்தி கேட்டு துஆவிற்கும் வேண்டி வருகை தந்தார்கள். அதன் மூலம் நலம் விசாரித்தல் மற்றும் நன்றி தெரிவிக்கும் செயலின் ஆன்மா தென்பட வேண்டும் என்பது நோக்கமாகும்.

ஹஸ்ரத் நவாப் (ரலி) அவர்களின் வளர்ப்பு ஆரம்பம் தொட்டு மார்க்க சூழலில் அமைந்திருந்தது. வயதின் ஆரம்பத்தில் அன்னார் (ரலி) தமது ஆசிரியர் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பற்றி செவியுற்றிருந்தார்கள். அன்னார் (அலை) மீது மார்க்கத்தின் பெரும் தாக்கம் ஏற்பட்டிருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அந்த நாட்களில் எவ்வித வாதமும் செய்யவில்லை. சிறுக சிறுக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் செய்தி அன்னாருக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் கடிதத் தொடர்பு 1889-ல் துவங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்கள் 1890-ல் 20 வயதில் காதியான் வரலாற்று பயணத்தை மேற்கொண்டார்கள். ஏனெனில் அப்போது வரை அன்னார் (ரலி) அஹ்மதிய்யத்தின் வட்டத்தில் வந்திருக்கவில்லை. பிறகு சில கேள்விகளுக்கு திருப்திகரமான பதில் கிடைத்த பின்னர் அன்னார் (ரலி) எவ்வித தாமதமும் இன்றி பைஅத்திற்கான கடிதம் எழுதினார்கள். பைஅத் வரிசை பதிவேட்டில் அன்னாரின் வரிசை எண் 210 ஆகவும், பைஅத் தேதி 19 நவம்பர் 1890 என பதியப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது இஸாலா அவ்ஹாம் என்ற நூலில் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) மற்றும் அன்னாரின் குடும்பம் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்குத் தமது கடிதத்தில் சில காலம் ஹுஸூர் (அலை) அவர்களின் அருகில் வந்து இருக்க மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்கள். எவ்வாறாயினும், இறுதியில் நீங்கள் வருகை தருவதை நான் எதிர்பார்க்கின்றேன் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார்கள்.

இதற்கு ஏற்ப ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) இந்த ஜல்ஸாவில் பங்கெடுத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவனம், பரிவு மற்றும் துஆவின் காரணமாக அல்லாஹுதஆலா தன் அருளால் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு அனைத்து சிரமங்களையும் எளிதாக்கிக் கொடுத்தான். மேலும் மன திருப்தியுடன் காதியானிற்கு ஹிஜ்ரத் செய்வதற்கான வாய்ப்பை வழங்கினான். பின்னர் அன்னார் (ரலி) தனது முழுமையடையாத இரு அறைகளில் வந்து தங்கினார்கள். அது அத்-தார் (எனும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வீடு) உடன் இணைந்திருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பரிவு அவ்வப்போது வெளிப்பட்டு வந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் அவர்களை காதியானில் வீடு கட்டுவதற்கு பலமுறை கூறியுள்ளார்கள். இறைவன் அன்னாரின் வீடுகளில் அதிக பரக்கத்தை வழங்கியிருந்தான். ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களின் முதல் மனைவியின் மூலம் இரண்டு மகள்கள் ஒன்று அமத்துஸ் ஸலாம். அவர் சில மாதத்திற்கு பிறகு மரணித்து விட்டார். இரண்டாவது மகள் ஹஸ்ரத் பூ ஜைனப் பேகம் ஸாஹிபா, ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் மனைவி ஆவார்கள். அவர்கள் 19 மே 1893-ல் பிறந்தார்கள். அவர்களுக்கு பிறகு நான்கு மகன்களை அல்லாஹ் வழங்கினான்.

இறை நியதியின் படி 17 பிப்ரவரி 1908-ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய மூத்த மகள் ஹஸ்ரத் நவாப் முபாராகா பேகம் ஸாஹிபா அவர்களின் நிக்காஹ் ஹஸ்ரத் முஹம்மது நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களுடன் நடைபெற்றது. இந்த நிக்காஹ்வை ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் நடத்தினார்கள்.ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு 1909-ம் ஆண்டு மார்ச் 14 அன்று ஹஸ்ரத் நவாப் முபாராகா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களின் ருக்ஸதானா எனும் மணமகள் வழியனுப்பி வைத்தல் என்ற நிகழ்வு நடைபெற்றது. ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் வீட்டிற்கு அன்னார் (ரலி) சென்றார்கள். ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் அவர்களின் முதல் மனைவியின் ஒரே மகளான ஹஸ்ரத் பூவ்ஜைனப் (ரலி) அவர்களின் நிக்காஹ்வை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அன்பிற்குரியவரான ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களுடன் மே 9, 1909 அன்று நடைபெற்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது அருளுக்குரிய வாழ்நாளில் இந்த வரனை முடிவு செய்திருந்தார்கள். ஹஸ்ரத் பூவ் ஜைனப் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் கண்ணியத்திற்குரிய தந்தைவழிப் பாட்டி ஆவார்கள். ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கும் நவாப் முபாரகா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களுக்கும் இடையில் 27 வருட வயது வித்தியாசம் இருந்தது என்றாலும் கூட ஹஸ்ரத் நவாப் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் அறிவு , புரிதல், அன்பு, நன்றி உணர்வு மற்றும் வாழ்வின் முக்கியத்துவம்

புரிந்தவர்களாக இருந்தார்கள். இவர் தூய தந்தையின் புனிதமான மகள் ஆவார்கள் என்பதை அன்னார் (ரலி) அறிந்திருந்தார்கள். ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) சிறு,சிறு விஷயத்திலும் ஹஸ்ரத் பேகம் ஸாஹிபாவிடம் பரக்கத்தை பெற முயற்சி செய்வார்கள்.

ஒருமுறை புது வருட காலண்டரை அன்னார் (ரலி) ஹஸ்ரத் பேகம் ஸாஹிபாவிடம் கொடுத்து அதில் சில கவிதைகளை எழுதுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் காலண்டரின் முதல் பக்கத்தில் இவ்வாறு எழுதினார்கள்: இறைவனின் அருளின் நிழல் நம் மீது எப்போதும் இருக்கட்டும்; எல்லா பகலும் அருளுக்குரியதாக இருக்கட்டும் !எல்லா இரவும் நன்மையாக கழியட்டும்!

ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த கவிதையை ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் எப்பொழுதும் புது வருட காலண்டரின் முதல் பக்கத்தில் எழுதி கொள்வார்கள். இதை போன்று ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் எப்போதும் அன்னாரிடம் கவிதை எழுதும்படி கோரிக்கை வைப்பார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களை காதியான் வருமாறும் காதியானில் வீடு கட்டுமாறும் பலமுறை எடுத்துரைத்து வந்தார்கள். அதற்கு இணங்க ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத்திற்கு முன்னர் ஓரிரு அறைகளை தாருல் மஸீஹுடன் இணைந்த கிழக்குப் பகுதியில் கட்டி இருந்தார்கள். சில வருடங்களுக்குப் பிறகு அதை இடித்து விட்டு ஓர் உறுதியான குடிலைக் கட்டினார்கள். இந்த குடிலும் அத்தாருடைய பகுதியாகவே உள்ளது. முதல் கிலாஃபத்தின் போது அன்னார் (ரலி) காதியானின் அப்போதைய குடியிருப்பில் இருந்து தொலைவில் திறந்த வெளியில் தாருல் ஸலாம் கோட்டி எனும் வீட்டை கட்டினார்கள். அதில் தோட்டமும் அமைத்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு காதியான் வரும்போது தமது ஃபோனோ கிராஃபை உடன் எடுத்து வரவும், அதன் மூலம் வெளிநாடுகளில் இறைவழியில் மக்களை அழைக்கும் பணி தொடர்பாக சில தூது செய்திகளை பதிவு செய்யலாம் என்றும் கடிதம் அனுப்பினார்கள். அதற்கேற்ப ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களின் ஃபோனோகிரஃபை காதியான் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஃபோனோகிராஃபில் இருந்து ஓசை வருகிறது என்ற கவிதையும் மேலும் சில வேறு கவிதைகளும், சில சொற்பொழிவுகளும் பதிவு செய்யப்பட்டன. ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுடைய ஃபோனோகிராஃபில் வெளிநாட்டவருக்கு என்று அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் தூதுச் செய்தியை பதிவு செய்யும் இந்த அருளுக்குரிய பாக்கியமும் அவர்களுக்கு கிடைத்தது.

ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் மக்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவராகவும், விவகார ஞானம் மற்றும் நன்றி உணர்வு கொண்ட சான்றோராகவும் இருந்தார்கள். இறைவன் அன்னாருக்கு மென்மையான உள்ளமும், பரந்த அறிவும் வழங்கியிருந்தான். எனவே அன்னார் (ரலி) அனைத்து விவகாரங்களிலும் தாமே ஆய்வு செய்வார்கள். காழ்ப்புணர்ச்சி , கோபம் ஒருபோதும் இருந்ததில்லை. உண்மையை ஏற்றுக் கொள்ள எப்பொழுதும் ஆயத்தமாக இருந்தார்கள். ஆரம்ப கால மார்க்க கல்விக்குப் பிறகு லாஹூர் கல்லூரியில் சேர்ந்தார்கள். இது பஞ்சாபின் பாரம்பரிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அரசு ஏற்படுத்திய கல்விக் கூடம் ஆகும்.

பெண்களுக்கான சீர்திருத்தத்திற்கு முஸ்லிஹில் இக்வான் என்ற ஓர் அமைப்பை அன்னார் (ரலி) நிறுவினார்கள். மேலும் ஒரு பள்ளிக் கூடத்தை நிறுவினார்கள். அதன் முழு செலவீனங்களை அன்னார் (ரலி) தம் தரப்பலிருந்து செலுத்தினார்கள். கல்வியை பொதுவுடைமையாக்க வேண்டும் என்ற விருப்பம் அன்னாருக்கு அதிகம் இருந்தது. மதரஸா அஹ்மதிய்யாவிற்கு பலமுறை பொருள் உதவியை செய்துள்ளார்கள். அன்னாரின் மேலோன துணிவின் விளைவால் காதியானில் கல்லூரி நிறுவப்பட்டது.

அன்னாரின் இயல்பில் வள்ளல் தன்மையின் வேகம் இருந்தது. மேலும் ஜமாஅத்தின் ஏழைகள் அன்னாரின் கொடையினால் நிம்மதியான வாழ்வை கழித்து வந்தார்கள். அன்னார் (ரலி) கவலையில் அல்லது ஆழ்ந்த சிந்தனையில் ஒருபோதும் இருந்ததில்லை. எப்பொழுதும் முகமலர்ச்சியுடனும், புன்சிரிப்புடனும் இருப்பார்கள். மேலும் இறைவன் மீது முழுமையான திடநம்பிக்கை இருந்தது. பணிவின் நிலை எவ்வாறானதாக இருந்தது எனில், மஸ்ஜிது முபாரகில் அனைவருக்கும் இறுதியில் காலணிகள் அருகில் அமர்ந்திருப்பார்கள். ஜமாஅத்தின் பணிகளில் எப்போதும் முன்னணியில் இருப்பார்கள்.


ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் உயர்தரமான மனத் தூய்மை மற்றும் கட்டுப்படுதலின் தொடர்பை கொண்டிருந்தார்கள். இதன் காரணமாகவே ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இறுதி இரண்டு வார நோயின் போது, அவர்களுக்கு பணிவிடை செய்யும் சிறந்த வாய்ப்பு ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு கிடைத்தது. குடியிருப்பில் இருந்து வெளியே ஏதேனும் பரந்த இடத்தில் இருப்பதற்கு மருத்துவர்கள் ஆலோசனை கூறியதும் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் தமது மாளிகை தாருஸ் ஸலாம் உடைய ஒரு பகுதியை ஹுஸூர் (ரலி) அவர்களுக்காக ஒதுக்கினார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பிப்ரவரி 24-ம் தேதி 1914 அன்று வீடு மாற்றம் செய்து இங்கு வந்தார்கள். மேலும் இந்த இடத்தை அதிகம் விரும்பினார்கள். இரண்டு வாரங்களுக்கு பின் 13 மார்ச் 1914-ல் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தாருஸ் ஸலாம் மாளிகையிலேயே மரணமடைந்தார்கள்.

1903 ஜனவரி 1 அன்று காலை உலா வரும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நவாப் ஸாஹிபை அழைத்து கூறினார்கள்: இன்று இரவு ஓர் ஆன்மிக காட்சியில் உங்கள் நிழல் படம் நம் முன்வந்தது. மேலும் ஹுஜ்ஜத்துல்லாஹ் என்ற சொல் மட்டும் இல்ஹாம் ஆக வந்தது. இது பற்றி இவ்வாறு விளக்கம் கிடைத்தது. ஏனெனில், நீங்கள் உங்கள் உறவினர்கள் மற்றும் சமூகத்தை விட்டு விலகி வந்துள்ளீர்கள். எனவே இறைவன் உங்கள் பெயரை ஹுஜ்ஜத்துல்லாஹ் என வைத்துள்ளான். அதாவது நீங்கள் அவர்கள் மீது ஹுஜ்ஜத் (அதாவது அல்லாஹ்வின் சான்று) ஆவீர்கள்.

அன்னார் (ரலி) பல சந்தர்ப்பங்களில் பொருள் தியாகங்களில் பல்வேறு திட்டங்களில் பங்கெடுத்துள்ளார்கள். பொருள் தியாகம் செய்துள்ளார்கள். கட்டிட பராமரிப்பு மற்றும் விரிவாக்கம் போன்றவற்றிற்காக அவ்வப்போது தேவைப்படும் போதெல்லாம் தொகை ஏற்பாடு செய்துள்ளார்கள். அவற்றில் மதரஸா அஹ்மதிய்யா, மினாரத்துல் மஸீஹ், மார்கஸி நூலகம் போன்றவையும் உள்ளன. அன்னார் (ரலி) காதியானில் பொது பணிகளுக்கான அதிகமான வேலைகளை செய்துள்ளார்கள். தெருக்களை சமன் செய்துள்ளார்கள். உறுதியான வடிகால்களை ஏற்படுத்தி உள்ளார்கள். மேலும் நோயாளிகளின் உதவிக்காக ஒரு பெரும் தொகையை வழங்கினார்கள். இவை தவிர ஜமாஅத்தின் முதல் பத்திரிகை அல்ஹகமிற்கு உதவித் தொகை, இயலோதோர் இல்லத்திற்கு நிலம், அல்ஃபஸ்ல் வெளியீட்டுக்கு உதவித் தொகை அன்னாரின் பொருள் தியாகத்தின் உயரிய உதாரணங்களாகும்.

அல்ஃபஸலின் வெளியீட்டுப் பணிக்காக சில ரூபாய்கள் ரொக்கமாகவும், சில நிலங்களை அதன் பணிகளுக்காக கொடுத்தார்கள். மேலும் தன் வீட்டின் கீழ்தளத்தையும் கொடுத்தார்கள். அடக்கஸ்தல ஏற்பாட்டிற்கு ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு குழுவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நிறுவி இருந்தார்கள். ஜனவரி 1996-இல் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா நிறுவப்பட்ட போது, அதன் உறுப்பினர்களில் ஹஸ்ரத் நவாப் ஸாஹிபும் இருந்தார்கள். 1900 முதல் 1918 வரை பல்வேறு பொறுப்புகளில் ஜமாஅத்துக்கு தொண்டாற்றும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஜனவரி 6 முதல் டிசம்பர் 5 வரை 1902 வரை அன்னார் முதலில் ரிவ்யூ எனும் பத்திரிகையின் துணைப் பொருளாளராக இருந்தார்கள். பிறகு ஃபைனான்ஸியல் செகரட்டரி ஆக பணியாற்றினார்கள். 1909-ல் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அமீன் ஆக நியமிக்கப்பட்டார்கள். 1911 இல் அன்னார் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா தரப்பிலிருந்து நாஸிராக நியமிக்கப்பட்டார்கள். 1915 மற்றும் 1916 இரண்டு ஆண்டுகள் வரை சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஜெனரல் செகரட்டரி ஆக ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் பொறுப்பு வகித்தார்கள்.

ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அதப் எனும் மரியாதை மற்றும் மனனம் (ஹிஃப்ல்) முறைகளை அதிகமாக கடைபிடிப்பவராக இருந்தார்கள்.



பெரும்பாலும் தம் சந்ததிகளுக்கும் பிறருக்கும் இதன் பக்கம் கவனமூட்டுவார்கள். அன்னார் தம் மூத்த சகோதரர், கண்ணியத்திற்குரிய பெரும் ஸஹாபிகள் மற்றும் குடும்பத்தார்கள் மீது உயர்தர மரியாதையை கொண்டவராக இருந்தார்கள். பொறுமை மற்றும் உறுதியாக நிலைநிற்றலின் உயரிய தரத்தை பெற்றவராக இருந்தார்கள்.

அன்னார் (ரலி) அஹ்மதிய்யத்தை என்ன நிலைமையில் ஏற்றுக் கொண்டார்களோ மேலும் அதனை எந்த அளவு வீரத்துடன் வெளிப்படுத்தினார்களோ அது அவர்களுக்கே உரித்தானதாகும். அன்னார் (ரலி) மேலான உயர்தர தூய்மை விரும்பியாக இருந்தார்கள். மேலும் குழப்பத்தின் காலமாக இருப்பதன் காரணமாக பர்தாவின் உயர் படித்தரத்தை கடைபிடிப்பவராக இருந்தார்கள். தொழுகை மற்றும் நோன்பை நிறைவேற்றுவது திருக்குர்ஆன் திலாவத் மற்றும் பிற மார்க்கப் பணிகளில் எல்லா நேரமும் ஈடுபட்டிருப்பார்கள். இரவு கண்விழித்து தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றுவது அன்னாரின் வழக்கமாக இருந்தது. அன்னாரின் மனைவி கண்ணியத்திற்குரிய ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் இது பற்றி குறிப்பிடுகின்றார்கள் : இரவு தஹஜ்ஜுத்தில் துஆ செய்யும் போது இறைவனின் ஒளி அறையில் இறங்குவது போன்று தெரியவரும்.

ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) சுபுஹ் தொழுகைக்கு முன்னர் திருக்குர்ஆன் திலாவத் செய்வார்கள். திருக்குர்ஆன் ஒரு கடல் ஆகும். எவர் இந்தக் கடலில் குத்திப்பாரோ அவர் வெறும் கையுடன் திரும்ப மாட்டார் என கூறி வருவார்கள். வழக்கமாக ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் டைரி எழுதக் கூடியவராக இருக்கவில்லை. எனினும், எவ்வளவு காலம் டைரி எழுதினார்களோ அதிலிருந்து அன்னாரின் வாழ்க்கைக் குறிப்பின் ஒரு மதிப்பு மிக்க பகுதி அன்னாரின் எழுத்துக்களில் இருந்து நமக்கு முன் வந்துள்ளது. பிப்ரவரி 10 1945-ல் இருந்து 75 ஆம் வயதில் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) காலமானார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் ஜனாஸாவிற்கு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தோள் கொடுத்தார்கள். காதியானில் உள்ள பஹஷ்தி மக்பரா தோட்டத்துடன் இணைந்த பகுதியில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள். அன்னாரின் அடக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அடக்கம் உள்ள சிறப்பு பகுதியில் செய்யப்பட்டது. அல்லாஹ் அன்னாரின் பதவிகளை உயர்த்துவானாக. அன்னாருக்கு தன் சிறப்பான நெருக்கத்தின் இடத்தை வழங்குவானாக. ஆமீன்.

فَسُبْحَانَ الَّذِيْ أَخْزَى الْأَعَادِيْ
وَآخِرُ دَعْوَانَا أَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

தமிழாக்கம்
முஅல்லிம் எம்.ஷாஜஹான்

* * * * * *

**(ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை..)**
11- ம் பக்கத் தொடர்ச்சி..

இன்றைய வளர்ந்த காலகட்டத்தில் சமத்துவம், சுதந்திரம் என்ற பெயரில் பெண்களைச் சுரண்டுவது சமூகத்தில் ஏற்றத் தாழ்வை ஏற்படுத்துகிறது. மற்றபடி இஸ்லாம் பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான உரிமைகளை வழங்குவது மட்டுமின்றி, சில முன்னெச்சரிக்கைகளை வகுத்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முழு உத்தரவாதத்தையும் அளித்துள்ளது. பிறப்பு மற்றும் உடல் அமைப்பு அடிப்படையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான இயற்கையான வேறுபாடுகளை இஸ்லாம் புறக்கணிக்கவில்லை என்பது உண்மைதான். அதை கருத்தில் கொண்டு இஸ்லாம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள பொறுப்புகளை நிர்ணயித்துள்ளது. வீட்டை நிர்வகித்தல் மற்றும் குழந்தைகளை வளர்ப்பது மற்றும் தர்பிய்யத் (பயிற்றுவிப்பது) பெண்களின் வேலை அதேநேரத்தில் மனைவி மற்றும் குழந்தைகளின் அனைத்து நியாயமான தேவைகளை கடினமாக உழைத்து அவர்களுக்காக செலவு செய்வதும் ஆணின் பொறுப்பாகும்.

பெண்கள் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தின் முன்னோடிகள் என்று அழைக்கப்படுபவர்களின் நடைமுறையைப் பாருங்கள். அவர்கள் பெண்களிடமிருந்து வேலைகளைப் பெறுகிறார்கள். சமையலறையின் பொறுப்புகளையும், குழந்தைகளை வளர்க்கும் மற்றும் பராமரிக்கும் பொறுப்பையும் அவர்கள் மீது சுமத்துகிறார்கள். இது சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்ற பெயரில் பெண்கள் மீது இழைக்கப்படும் அநீதியாகும். இஸ்லாம் இதை ஒருபோதும் அனுமதித்ததில்லை.

இஸ்லாம் பெண்களுக்கென்று எந்த உரிமைகளை நிலைநாட்டியுள்ளதோ எந்த நன்நடத்தைகளை போதித்துள்ளதோ மேலும் சமூகத்தில் அவர்களுக்கென்று எவ்வாறான கௌரவத்தை வழங்கியுள்ளதோ அதற்கான ஓர் ஒப்பற்ற உதாரணம் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் குடும்ப வாழ்க்கையில் காணக் கிடைக்கின்றது.

எனவே மதீனாவில் அன்னாரின் வயது ஐம்பதைத் தாண்டியபோது, தர்பிய்யத் மற்றும் சமுதாயத் தேவைகளைக் கருத்தில் கொண்டவாறு அன்னார் (ஸல்) ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை செய்து கொள்ள வேண்டியிருந்தது. மேலும் ஒரே நேரத்தில் ஒன்பது மனைவிகளும் அன்னாரது தர்பிய்யத் மற்றும் ஆதரவில் இருந்தனர். அவ்வாறு இருந்தும் மிகச் சிறந்த நிர்வாகத் திறன், பரிபூரண நீதி மற்றும் உன்னத நடுநிலையின் மூலமாக அன்னார் (ஸல்) அனைவரின் உரிமைகளையும், செலுத்தியவாறு அனைவரையும் கவனித்துக் கொண்டார்கள். அவர்களின் மனைவியர்களின் ஒவ்வொருவருக்கும் ஆடம்பரப் பொருட்களை வழங்குவது ஒருபுறம் இருக்கட்டும்; அவர்களுக்கு முழுமையான இரண்டு வேளை உணவிற்கான ஏற்பாடு செய்வதும் கூட மிகவும் கடினமாக இருந்தது. அவ்வாறு இருந்தும் கூட ஒவ்வொரு மனைவியும் அன்னாரின் தோழமையைக் குறித்து பெருமிதம் கொண்டனர். மேலும் வெற்றிகள் மற்றும் ஏராளமான போர் செல்வங்கள் கிடைத்த காலகட்டத்தில் அல்லாஹ்வின் கட்டளைப்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் உலக வாழ்க்கையையும் அதன் அலங்காரத்தையும் விரும்பினால் வாருங்கள் நான் உங்களுக்கு உலகச் செல்வங்களையும் உடைமைகளையும் அளித்து உங்களை என்னிடமிருந்து திருமண பந்தத்திலிருந்து விடுவித்துவிடுகிறேன் என்ற கருத்தை முன்வைத்தபோது, விதிவிலக்கு இல்லாமல் ஒவ்வொரு மனைவியையும் எல்லா சூழ்நிலைகளிலும் இறைவனின் தூதருடன் வாழ்வதையே விரும்பினார்கள்.

ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய குடும்பத்தாருடன் எவ்வாறு கருணையுடன் நடந்து கொண்டார்கள்? என்பதைக் குறித்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

அன்னார் (ஸல்) மற்ற மனிதர்களைப் போன்று ஒரு சாதாரண மனிதராகவே இருந்தார்கள். சுயமே தன்னுடைய உடைகளை மடித்து வைப்பார்கள். ஆட்டிலிருந்து பாலை கறப்பார்கள்; காலணிகளை செப்பனிடுவார்கள்; வீட்டில் உள்ள பொருட்களை சரி செய்வார்கள்; இரவு தாமதமாக வீடு திரும்பினால், யாரையும் தொந்தரவு செய்யாமலும், எழுப்பாமலும் தாமாகவே உணவு அல்லது பாலை அருந்துவார்கள்.

எனவே இந்த நேர்மையான மற்றும் உண்மையுள்ள மனைவியர்களின் நம்பிக்கை மற்றும் பற்றானது உலக சுகபோகங்களை கருத்தில் கொண்டதாக இருக்கவில்லை. அவர்கள் அன்னாரின் முகத்தை காண்பதற்கு ஆவலாக இருந்தனர். அவர்கள் அன்னாரின் உயர்வான நற்பண்புகளுக்கு உத்தரவாதமாக திகழ்ந்தனர். அன்னாரின் அழகிய நன்னடத்தை, பரிவு மற்றும் கருணைக்கு கடமைப்பட்டிருந்தார்கள்.

அவையோர்களே! எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய தூய மனைவிமார்களுடன் மேற்கொண்ட நன்னடத்தயைப் பாருங்கள்! அது எப்படிப்பட்ட காலமாக இருந்தது என்றால் அரேபிய நாட்டில் பெண்களுக்கு எந்த ஒரு மதிப்பும் மரியாதையும் இல்லை. மாறாக, ஆண்கள் அவர்களை செருப்புக்கு ஒப்பாக ஒன்று பிடிக்கவில்லை என்றால் மற்றொன்றை மாற்றிக் கொள்வது போன்று அவர்களுடன் நடந்து கொண்டார்கள். எதுவரை என்றால் பெண் குழந்தை பிறப்பதை கூட அபசகுணம் என்று கருதி மனம் உடைந்த சில பெண்கள் தங்கள் பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தனர். பெண்களை தாழ்ந்தவர்களாகவும், முட்டாள்களாகவும் கருதி அவர்கள் கூறுவதைக் கவனமாகக் கேட்பதும், அவர்களிடம் ஆலோசனை பெறுவதும் ஆண்களின் பார்வையில் அவமானமாகக் கருதப்பட்டது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த பெண்ணினத்திற்கு எவ்வாறான கண்ணியத்தையும், மதிப்பு மரியாதையும் அளித்து எப்படிப்பட்ட உயர்வான அந்தஸ்தை வழங்கியுள்ளார்களோ அதற்கான உதாரணத்தை நாலாப்புறமிருந்தும் பெண்களின் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தின் முழக்கங்கள் எங்கும் எழுகின்ற இன்றைய இந்த முன்னேற்றம் அடைந்த காலகட்டத்தில் காண்பதும் கடினமானது.

ஆக மனித குலத்தின் கருணையாளர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தம்முடைய வாழ்நாளில் இறுதி ஹஜ்ஜின் போது இறுதி பேருரை நிகழ்த்தினார்கள். அதில் கூறிய அந்த விஷயங்கள் ஆனது மனித

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 01- 08 August 2024 Issue No. 31 & 32

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

நேயத்தின் தலையை உயர்த்தக் கூடிய மற்றும் இறுதி நாள் வரை உயரத்தில் பறந்துக் கொண்டே இருக்கக் கூடிய கொடியாகும். மேலும் அது மனித குலத்திற்கு மனிதநேயத்தின் படிப்பினையை வழங்கிக் கொண்டே இருக்கும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) காதியானி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நீங்கள் அல்லாஹ்வை தேட வேண்டும் என்றால் வறியவர்களின் உள்ளத்திற்கு அருகில் சென்று தேடுங்கள். இதன் காரணமாகத்தான் இறைத் தூதர்கள் ஏழ்மையின் ஆடையை அணிந்திருந்தார்கள். அதேபோன்று பெரிய சமுதாயத்தின் மக்கள் சிறிய சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். மேலும் என்னுடைய குடும்பம் பெரியது என எவரும் கூற வேண்டாம். எல்லா வல்ல அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் என்னிடம் வரும்போது நீங்கள் எந்த சமுதாயத்தை சார்ந்தவர்கள் என நான் உங்களிடம் கேள்வி கேட்க மாட்டேன். மாறாக உங்களுடைய செயல் எவ்வாறாக இருந்தது? என்றுதான் நான் கேட்பேன். இவ்வாறே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தன்னுடைய மகளிடம், ஃபாத்திமாவே! எல்லாம் வல்ல இறைவன் இனத்தை குறித்து (நீ எந்த ஜாதி, இனம், சமூகம் என்று) கேட்க மாட்டான். நீ ஏதாவது தவறு செய்திருந்தால் இறைத் தூதரின் மகள் என்ற காரணத்தினால் இறைவன் உன்னை மன்னிக்க மாட்டான் எனக் கூறினார்கள். (மல்ஃபூஸாத் பாகம் 3, பக்கம் 370)

மேலும் அன்னார் (அலை) கூறுகிறார்கள்: என்னுடைய ஜமாஅத்தார்கள் ஒருவர் மற்றவரை சிறியவர் என்றும் பெரியவர் என்றும் கருதுவது அல்லது ஒருவர் மற்றவர் மீது தற்பெருமை கொள்வது அல்லது தரக்குறைவான கண்ணோட்டத்துடன் காண்பதை நான் விரும்புவதில்லை. யார் பெரியவர்? யார் சிறியவர்? என இறைவனே அறிகின்றான். ஒரு சிலர் பெரியவர்களை (அந்தஸ்திலும், செல்வாக்கிலும் உயர்வானவர்களை) சந்திக்கும் போது மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொள்கின்றார்கள். ஆனால், எவர் ஏழையின் கூற்றை ஏழையின் நிலைமையில் நின்று கேட்கின்றாரோ எவர் ஏழையின் உள்ளத்தை மகிழ்விப்பாரோ எவர் ஏழையின் கூற்றுக்கு மதிப்பளிப்பாரோ எந்த நபருடைய நாவிலிருந்து பிறரை வேதனைப்படுத்தக் கூடிய வெறுப்பான வார்த்தைகள் வெளிவரவில்லையோ அந்த நபர் தான் உண்மையில் பெரியவர் (கண்ணியத்திற்குரிய நபர்) ஆவார். உங்கள் சகோதரர்களை இழிவானவர்களாக கருதாதீர்கள். ஒரே நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்தும் போது எவருடைய பங்கில் அதிக நீர் இருக்கும் என்பதை யார் அறிவார்? கண்ணியமும், மகத்துவமும் உலக விதிமுறையின் அடிப்படையில் கிடைப்பதில்லை இறைவனுடைய பார்வையில் எவர் இறையச்சம் உடையவராக இருப்பாரோ அவர் பெரியவர் ஆவார். (மல்ஃபூஸாத், பாகம் 1, பக்கம் 22, 23)

இந்த முன்மாதிரிகள் ஒருபோதும் பழையதாகப் போவதில்லை. மாறாக, இன்றும் அல்லாஹ்வின் அருட்கொடைகளைச் சேகரித்தவாறு அவனது திருப்தியை நாடவேண்டும்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான நேசத்தின் வாதத்தை மெய்ப்பித்துக்காட்ட விரும்பினால், இந்த முன்மாதிரிகளைப் பின்பற்ற வேண்டும். இன்று மற்ற முஸ்லிம்களை விட ஒவ்வோர் அஹ்மதியின் கடமை என்னவென்றால், தன்னுடைய அக்கம்பக்கத்தில் உள்ள பலவீனமான மற்றும் ஆதரவற்றவர்களைத் தேடி, அவர்களிடம் கருணையுடன் நடந்து கொண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட நேசத்தை வெளிப்படுத்திக் காட்டுங்கள். அல்லாஹ் இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.

واٰخر دعوانا ان الحمد للہ رب العالمین

தமிழாக்கம்
மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

* * * * * *

**(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்கள்)2- ம் பக்கத் தொடர்ச்சி.....**

எதிரிகளும் பகைவர்களும் அச்சுறுத்துவோரும் இருந்தும் தங்களின் நபித்துவ வாதத்தில் இறுதி மூச்சு வரை எவ்வளவு உறுதியுடன் நிலைத்திருந்தார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். வெற்றியனைப் பற்றி முற்றிலும் நம்பிக்கை இழக்கச் செய்கின்ற சோதனைகளையும் துன்பங்களையும் நீண்ட காலம் தாங்கிக் கொண்டார்கள். அவை நாள்தோறும் வளர்ந்து வந்தன. அத்துன்பம், மற்றும் துயரங்களை தாங்குவதனால் உலக இன்பங்கள் கிடைக்கும் என்று எண்ணவே முடியாது. மாறாக, நுபுவ்வத் வாதத்தினால் ஏற்கனவே தமக்கு இருந்த செல்வாக்கை இழந்து விட்டார்கள். தாம் கூறிய ஒரு செய்தி மூலம் இலட்சக்கணக்கான கருத்து வேறுபாடுகளையும் ஆயிரக்கணக்கான சோதனைகளையும் ஏற்றுக் கொண்டார்கள். ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். பின்தொடர்ந்து சென்று அன்னாரைக் கொலை செய்ய முயன்றனர். வீடும், உடைமைகளும் அழித்தொழிக்கப்பட்டன..

நஞ்சும் கொடுத்தனர். அவரது நலத்தில் நாட்டம் கொண்டோர் தீமை செய்ய விரும்பினர். நண்பர்களே பகைவர்களாயினர். நீண்ட கால துன்பங்களையும், துயரங்களையும் தாங்கி வெற்றி பெறுவது ஒரு பொய்யரால் இயலாது. (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 1, பக்கம் 108 -109)

* * * * * *

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad